# Part II
# இரண்டாம் பருவம் (Semester 2)
# DAY 16

பூலோக மெல்லாம் பொய்யான மாகலியன்
மாலோ சனையிழந்து மாறியே மானிடவர்
சாதி யினம்பிரித்துத் தடுமாறி மானிடவர்
ஊதி னங்களாக ஒன்றுக்கொன் றேயெளிதாய்
பிரட்டுருட்டாய் மானிடரைப் பிலமுள்ளோர் தானடித்து
மருட்டும் புரட்டுடனே மாநீச னாளுகையில்
மாரி யதுபொழிந்து வைகை யதுவுடைத்து
ஏரி வழிந்து இராச்சியத்தைத் தானெடுக்க
வெள்ளம் பெருகி வெம்மருண்ட தம்மானை
உள்ளமகிழ்ச் சோழனுக்கு உடனேதா னாளோடி
மனுநீதிக் காவலவா வைகையடை யாதிருந்தால்
இனித்தேசந் தன்னை யாம்தேட ஞாயமில்லை
ஊரை யரித்து உவரிதனில் கொண்டேகும்
பாரை மிகஆளும் பத்தியுள்ள சோழமன்னா
என்றுகுடி யானவர்கள் இராசனுக் கேவுரைக்க
அன்றுதான் வைகை அணையடக்க வேணுமென்று
எல்லா வகைச்சாதி இப்போ வரவழைத்து
வல்லபுகழ் மன்னன் வைகை யணையில்வந்து
மண்ணோடு கல்லும் மரங்கள்மிகு வைக்கோலும்
எண்ணெண்ணக் கூடாத ஏதுவகை யானதெல்லாம்
கொண்டுவந் தேயணையில் கூறிட்டுத் தானடைக்க
அன்றுஅடை படாமல் அறிவழிந்து சோழமன்னன்
அய்யோ பாழாக அவனிதான் போகுதென்று
மெய்யோடு மெய்குழறி வெம்மருண்டு நிற்கையிலே

## சோழன் வினை

கோளனென்ற மாநீசக் குலத்தி லுதித்துவந்த
ஈழனொரு பொல்லாதான் என்சொல்வா னம்மானை
மன்னவனே இந்தவைகை மலையெடுத்து வைத்தாலும்
இன்னமிது கேளாது ஏலாது நம்மாலே
தெய்வகுலச் சான்றோராய்ச் சித்திர மாகாளி
கையதுக்குள் பிள்ளையெனக் கட்டாய் வளருகிறார்
அந்தச் சான்றோரை அழைத்திங்கே கொண்டுவந்து
இந்த அணையடைக்க ஏலுமென்றா னம்மானை
அப்போது சோழன் அந்நீசக் கலியதினால்
இப்போது மயங்கி என்சொல்வான் மன்னவனும்
மந்திரியே நம்முடைய வாய்த்த படைத்தலைவா
தந்திரியே நீங்கள்சென்று சான்றோரைத் தான்கூட்டி
வாருமென்று சொல்லி மன்னவ னேவிடவே

சேருமென்று சொல்லச் செவுகர் தாம்விரைந்து
அழைத்துவந்தார் சான்றோரை அரசன்மிகக் கொண்டாடித்
தழைத்தபுகழ் சான்றோரே சந்தோசமாக இப்போ
வைகை தனையடைக்க வழிபாரு மென்றுரைத்தான்
செய்கை முடிச்சான்றோர் தேசமன்ன னோடுரைப்பார்
நல்லதல்ல மன்னவனே நம்மோ டிதுவுரைக்க
இல்லை யிந்தவேலை இதற்குமுன் கேட்டிலையே
வெட்டாப் படையை வெற்றிகொண்டோ மும்மாலே
பட்டாங்கு எல்லாம் பகர்ந்தாரே சோழனுடன்
மாயக் கலியதனால் மன்னவனுங் கேளாமல்
ஞாயமொன்றும் போகாது நளிமொழிகள் பேசாதே
குட்டையினால் மண்ணெடுத்துக் குளக்கரையைத் தானடைக்கக்
கெட்டியல்லாமல் வேறு கெறுவிதங்கள் பேசாதே
என்றுரைக்கச் சான்றோர் இயம்புவா ரம்மானை
நன்றுநன்று மன்னவரே நமக்கு அழகல்லவே
இவ்வேலை யொன்றும் எங்களோ டீயாமல்
எவ்வேலை சொல்வீரோ யாமதற்குள் ளதென்றார்
கேட்டந்த மன்னன் கிறுக்க முடனிறுக்கித்
திட்டினான் சான்றோரைச் சினத்தான்கா ணம்மானை
அப்போது சான்றோர் அதற்கிசையாமல் நின்றார்
இப்போது சோழன் ஏதுசொல்வா னம்மானை
நான்வேலை சொன்னால் நகட்டுவதோ உங்களுக்கு
தான்பாரு மென்று தன்தள கர்த்தருடன்
வேலையது கொள்ளுமென்று விசைகாட்டினான் கெடுவான்
தூல மறியாமல் துள்ளியே சேவுகர்கள்
சூழ வளைந்து துய்யசான் றோர்களையும்
வேழம் பலதை விட்டுப் பிடித்திடவே
சான்றோ ரடுக்கல் சாரவகை யில்லாமல்
மீண்டகலத் தோற்று வெளியிலே நின்றிடவே
அப்போது சோழன் அவனானை கொண்டுவந்து
இப்போது சான்றோரை ஏறிப் பிடித்தனனாம்
சான்றோர்கள் சோழனையும் தட்டப் படாதெனவே
நன்றியுடன் நின்றார் நாடி யவன்பிடித்துக்
குட்டை எடு என்றிடவே கூடாது என உரைக்க
தட்டினான் வைகையிலே தலையைச் சான்றோர் தனக்கு
ஆனைதனை விட்டு அரசன் அந்த சோழன்
சேனைத்தலைவர் சிறந்த சான்றோர்கள் தன்னில்
கொன்றான் ஒருவனையும் குளக்கரையில் அம்மானை
குளக்கரையில் கொண்டுவிட்டு கூடைஎடு என்றிடவே
குளக்கரையில் என்னைக் கொன்றாலும் தொடுவதில்லை
என்று சான்றோரில் இளையவனும் சொல்லிடவே
மன்றுதனையாளும் மன்னவனும் ஏதுரைப்பார்
வைகை யணையிலவன் வளர்த்தியில் குழிதோண்டி
கையைக் கீழ்வைத்து கழுத்துவரை மண்போட்டு
குட்டைதனில் மண்கோரி இவன்தலையில் வைஎன்றான்
குட்டைமண் தூக்கிவைத்தான் கண்ணீர் வழிந்ததுவே

பட்டத்துயானை கொண்டு தட்டினான் அவன் தலையை
தலையும் மிகஅற்று தண்ணீரில் தான்விழவே
குவையும் அந்தகெங்கைக் கொண்டுவந்து காத்திடுமாம்
பின்னா லொருவனையும் பிடித்துக்கொடு வாருமென்றான்
முன்போல் ஒருவனையும் முன்கூட்டி வாருமென்றான்
குட்டை யெடென்று கூறினான் மாபாவி
திட்டமுடன் நாடாண்ட தெய்வ குலச்சான்றோர்
முன்னிறந்த மன்னனிலும் மோசமோ நாங்களுந்தான்
இன்னமிந்தக் குட்டை யாங்கள்தொடோ மென்றனராம்
பின்னுமந்தச் சோழன் பிடித்தொரு வன்தனையும்
சொன்ன இடத்தில் குழிதோண்டி வைகையிலே
அண்டையிலே மண்எடுத்து அவன்தலையிலேவைத்து
கொன்றான்காண் வைகைதனில் குஞ்சரத்தை விட்டிடறி
நன்றி மறந்து நாடாண்ட சோழமன்னன்
கொன்றான் காண்ரண்டு குலதெய்வச் சான்றோரை
பொய்கையிலே விழவே முத்தர் அதைக்கண்டு
வைகையிலே உன்னை வந்தெடுக்கும் நாள்வரைக்கும்
கெங்கையிலே இருவென்று கிருஷ்ணரும் வைத்துவிட்டு
வைகைக்கரைக்கு வரவென்று இருக்கையிலே
அப்போது வித்யா தரமுனிவர் தானறிந்து
செப்போடு வொத்த திருமா லருகேகி
மாயவரே உம்முடைய மதலையேழு பேரில்
காய மழித்தான் கரிகாலச் சோழனவன்
என்ற பொழுது எம்பெருமா ளப்போது
அன்றுபுட் டேயருந்தி அவளாட்போல் கோலமது
கொன்று குமாரர்களைக் குசல்செய்த தும்பார்த்து
அன்றுவை கையடைத்து அடிகள்மிகப் பட்டவரும்
ஸ்ரீரங் கந்தன்னில் சிறந்தகோ பத்தோடே
சாரங்கர் வந்து தானிருந்தா ரம்மானை

விளக்கம்:

பூலோகத்தில் வாழ்ந்த மக்கள் பொய் குணம் கொண்டு அதாவது கலியன் குணத்தை பெற்று தீமைகளைப் புரிந்து வாழ்ந்தார்கள். திருமாலை வணங்கும் தன்மை இல்லாமல் கலியனின் தீய விளைவுகளில் நடந்தார்கள். பல பல சாதிகளாகப் பிரிந்து இனவெறி கொண்டு நிம்மதி இல்லாமல் தடுமாறினார்கள். ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் கண்டதை உண்டு உடல் பருத்து காணப்பட்டார்கள். பொய்யும் களவும், கொலையும் செய்து மாறி மாறி அடித்து கொண்டும் மக்களை ஒருவருக்கொருவர் ஏமாற்றியும், அநியாயமாய் வாழ்க்கை நடத்தினார்கள். நீதிநெறி இல்லாமல் கலியனும் மன்னவனாய் ஆண்டு வந்தான்.

சோழன் வினை

கலியுகத்தில் சோழநாட்டில் மழை அதிகமாக பெய்ததால் வைகை

அணை நிரம்பி அணை உடைத்தது ஏரிகள் குளங்கள் எல்லாம் தண்ணீர் நிரம்பி மக்கள் வெளியே செல்லமுடியாமல் ஊருக்குள் புகுந்து விட்டது. வெள்ளப்பெருக்கினால் விவசாய நிலங்கள் மற்றும் உள்ள இடங்களிலும் தண்ணீர் பெருகி சம நிரப்பாக காணப்பட்டதால் மக்கள் அவதிக்குள்ளானார்கள். இந்நிலை மாற்ற நாட்டை ஆளும் மன்னரால் தான் முடியும் என்று சோழ மன்னரிடம் மக்கள் முறையிட்டார்கள். மக்கள் துன்பத்தை போக்கி மனுநீதியை காக்கும் மன்னவரே வைகை அணையில் ஏற்பட்ட உடைப்பை உடனே அடைக்க வில்லை என்றால் நம் நாடு தண்ணீரால் அழிந்து போகும்.

அந்த தேசத்தை பெருமையோடு ஆண்டு கொண்டிருக்கும் மன்னா இப்போது உடனடியாக இந்த அணையின் உடைப்பை அடைக்க முன்வாருங்கள் என்றனர் . வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் எல்லா பொருட்களையும், நிலங்களையும் அழித்து கடலுக்குள் இழுத்து சென்றுவிட்டது, என்று சோழ நாட்டில் வாழ்ந்த மக்கள் கதறி அழுது முறையிட்டதால், உடனடியாக வைகை அணையைப் பார்வையிட்டு உடைப்பை அடைக்க ஏற்பாடுச் செய்தான்.

அங்கு வாழ்ந்த எல்லா இன மக்களையும் வரும்படி அழைப்பு விடுத்தார். எல்லோரும் பெரிய கற்களையும் மற்றும் பெரிய மரங்களையும் போட்டு அடைக்குமாறு உத்தரவிட்டான். அணையை பல பகுதிகளாக பிரித்து எல்லோரும் சேர்ந்து அடைக்க முயன்றும் முடியாமல் ஆகிவிட்டது. அணையை அடைக்க முடியாததால் மன்னன் பயம் கொண்டு வாய் பேச முடியாத நிலையை அடைந்தார். அப்போது அவனுக்கு ஆறுதலாக பேச நீசக் குலத்தில் பிறந்த ஒருவன் வந்து மன்னனிடம் சொல்வான் மன்னவரே! இந்த வெள்ளப் பெருக்கை தடுப்பது இந்த மக்களால் ஆகாத காரியம். ஆனால் ஒரு வழி உண்டு.

தெய்வ குலத்து, சான்றோர் மக்களை பத்திரகாளி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து வளர்ப்பு பிள்ளைகளாக பலசாலிகளாக வளர்த்து வருகிறார். அந்த தெய்வக் குலத்து, சான்றோரை அழைத்து அவர்கள் மூலம் இந்த அணையின் உடைப்பை அடைத்தால் தான் இந்த உடைப்பை சரிச் செய்ய முடியும்.அல்லாமல் வேறு எவராலும் இந்த உடைப்பை அடைக்க முடியாது அவர்கள் தர்ம சிந்தனையும், தெய்வ பக்தியும் உடையவர்கள் என்றுக் கோள் சொல்லி குடிகெடுக்க வந்த ஈழக்குலத்தை சேர்ந்தவன் கலிப்பிடித்த நீச மன்னனிடம் தூண்டினான்.

அதை கேட்ட மன்னன் அவசர புத்தியால் தடுமாறி அந்த நீசன் சொன்னதை நம்பி நமக்கு நல்ல ஒரு விடிவுகாலம் கிடைத்துவிட்டது என்று, மனம் மயங்கிய மன்னன் மந்திரியிடம் பத்திரகாளி வளர்க்கும் சான்றோர்களை அழைத்து வரக் கட்டளையிட்டான். உடனே மந்திரியானவர் சேவகர்களுடன் சென்று மன்னனின் ஆணையை சான்றோர்களிடம் கூறி அவர்களை அழைத்து வந்தார்கள்.

சான்றோர்களை கண்ட மன்னன் மிகவும் சந்தோசமாக வரவேற்று நிலையான புகழின் உச்சியில் நிற்கின்ற சான்றோர்களே! என் ஆணையை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு இந்த அணையின் உடைப்பை அடைக்க முன்வாருங்கள் என்றான் . இந்த வைகை அணையின் உடைப்பை உங்களால் தான் அடைக்க முடியும். எனவே அதை நல்ல முறையில் அணையை அடைத்து முடிக்க வேண்டும் என்று வேண்டி நின்றான்.

மன்னன் கூறியதை கேட்ட சான்றோர்கள் சோழ மன்னனிடம் மன்னவரே! நீங்கள் எங்களிடம் இவ்வாறு சொன்னது தகாத செயல் ஆகும். நாங்கள் இது போன்ற வேலைகளைச் செய்பவர்கள் அல்ல என்பதை நீங்கள் அறியவில்லையா? யாராலும் வெல்ல முடியாத வீரர்களையும் பெரும் படைகளையும் உமது ஆணைப்படி வென்று ஜெயித்து உமக்கு வெற்றி வாகை சூடி தந்தோம். ஆனால் மண் சுமந்து குட்டையை தூக்கி செய்யும் வேலை செய்வது எங்களுக்கு ஏற்றது அல்ல நாங்கள் அதை செய்யவும் மாட்டோம் என்றார்கள்.

மாயக் கலியின் ஆணவ தன்மையினால் மன்னன் அதிகாரம் கொண்டு, சான்றோர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளாமல், நடந்து முடிந்த பெருமைகளைப் பற்றி இப்போது பேச வேண்டாம். குட்டையில் மண்சுமந்து உடைப்பை அடைக்கும் வேலையைச் செய்யுங்கள் என்று உத்தரவிட்டார். உங்கள் திறமையால் அணையை அடைத்துத் கௌரவத்தை காப்பாற்றுங்கள் என்ற மன்னனின் அதிகார கட்டளையை கேட்டு அவர்கள், எங்களுக்கு இந்த வேலைச் செய்து பழக்கமில்லை என்றாலும் நாங்கள் சான்றோர்கள் குட்டையைத் தொட மாட்டோம் கொன்றாலும் குட்டை எடுக்க மாட்டோம் என்று மறுத்தார்கள்.

சோழ மன்னன் கோபம் கொண்டான் பலவிதமாக வசை மொழிகளை பேசி பழித்தான். மன்னன் பேசிய தரம்கெட்ட பேச்சுக்களை கேட்டும் குட்டை எடுக்கச் சம்மதிக்கவில்லை சான்றோர்கள். உடனே மன்னன், மன்னனாகிய எனக்கு மரியாதை தராமல் நான் இட்ட வேலைகளைச் செய்யாததால் உங்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் என்று வெகுண்டெழுந்தான். மேலும் தன் படைவீரர்களை விட்டு சான்றோர்களை கைது செய்ய அவசர ஆணைப் பிறப்பித்தான்.

மேலும் மன்னன் யானைகளை கொண்டு வந்து எந்த தவறும் செய்யாத சான்றோர்களை நன்றி கெட்ட மன்னன் கோபம் கொண்டு கொல்ல நினைத்தான். கொடும்பாவி. சான்றோர்களின் பிறப்பின் உயர்வை பற்றி அறியாத மூடன் ஏவலர்களை விட்டு யானைகளின் உதவியால் வைகை ஆற்றின் கரையில் சான்றோர்களின் தலையை இடறச் செய்து கொல்லும்படி ஆணையிட்டான்.

இவ்வாறு மன்னனின் ஆணைப்படி காவலர்கள் சான்றோர்களில் ஒருவனை வெறித்தனமாக யானையின் உதவியால் கொடூரமாகக் கொன்று விட்டார்கள். அது மட்டுமல்ல மற்றும் சான்றோன் ஒருவனை அழைத்து கொண்டு காரணம் காட்டி மிரட்டி குட்டையில் மண் எடுத்துக்கொண்டு அணையில் கொட்டும் படிச் சொன்னார்கள். ஆனால் அவர் மறுக்கவே நன்நெறியோடு நாட்டை ஆண்டு வந்த திருமாலினுடைய பிள்ளைகள் என்றுப் பாராமல் குட்டையில் நாங்கள் மண் சுமக்க மாட்டோம் என்ற காரணத்தினால் யானையின் காலால் இடறிக் கொன்றுவிட்டார்கள். இப்படி கடுமையாக சான்றோர்கள் இரண்டு பேர்களை யானையின் காலால் இடற செய்து கொலை செய்ததால் மன்னன் கொடும்பாவியானான்.

தன்மானங்கள் எல்லாம் துறந்து, சான்றோர்கள் செய்த பெருந் தன்மையான வீரச் செயலால் கிடைத்த வெற்றிகளை மறந்து நன்றிகெட்ட சோழன்

அவனுடைய கௌரவத்தை காப்பாற்றுவதற்கு மட்டும் ஆணவம் கொண்டு இரண்டு சான்றோர்களை கொன்றுவிட்டான். இவ்வாறு சான்றோர்களை கொடூரமாய் நடத்தப்பட்ட துயர செய்தியை வித்யாதர முனிவர் கேள்விப்பட்டு, திருமாலிடம் சென்று உலகத்தை பாதுகாத்தருளும் மாயப் பெருமானே! உம்முடைய பிள்ளைகள் ஏழு பேர்களில் இரண்டு பேர்களுடைய உயிர்களை யானை மூலம் காய படுத்திக் கொன்று விட்டான் சோழ மன்னனாகிய கரிகாலன் என்று தெரிவித்தார். வித்யாதர முனிவர் சொன்னதை கேட்ட திருமால், உடனே அங்கிருந்து புறப்பட்டு வைகை கரைக்கு வந்தார்.

அங்கே மன்னன் வைகை அணையின் உடைப்பை அடைக்க வீட்டிற்கு ஒருவர் வர வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்தான். அதன்படி எல்லா வீடுகளில் இருந்தும் ஆள் வந்தது. ஆனால் புட்டு வியாபரம் செய்து தன் வாழ்கையை நடத்திக் கொண்டிருந்த அந்த மூதாட்டியின் சார்பாக யாரும் வரவில்லை. நாரயண மூர்த்தி வைகைக்கரையில் வந்தப்போது உடைப்பை அடைப்பதற்கு ஆள் இல்லாமல் ஒரு பங்கு இருந்தது. அது புட்டு விற்று பிழைப்பு நடத்தி கொண்டு வந்த பாட்டியின் பங்கு ஆகும். அந்த பாட்டியிடம் வந்து கூலியாக புட்டு சாப்பிட்டு விட்டு, அய்யா நாராயணர் பாட்டியின் கூலியாள் போல் வேடம் கொண்டு அந்த பங்கிற்காக மண் சுமக்க சென்றார்.

சோழ மன்னன் மன்னனின் வெறி செயலால் என்னுடைய பிள்ளைகளை பழி செய்து கொன்று விட்டானே! என்று மனம் வருந்தி அய்யா குட்டையில் மண் சுமக்க செல்லாமல் ஒரு மரத்தடியில் ஒய்வாக இருந்த போது, கணக்கர்கள் அந்த முதாட்டியின் சார்பாக ஆள் அனுப்பியதை அறிந்து தேடி வருகின்ற போது எம்பெருமான் மரத்தடியில் ஒய்வு நிலையில் காட்சி கொடுக்க அவர்கள் ஒரு சாதாரண வேலையாள் என்று எண்ணி எம்பெருமானை மன்னனின் முன்பு நிறுத்தினார்கள். மன்னன் கோபம் கொண்டு அடிக்க அந்த அடியானது இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் உணரும்படி செய்தார்.

இதனால் வந்திருப்பது இறைவன் என்பதை அறிந்து அவரடியில் விழுந்து அணையின் உடைப்பை அடைக்க வேண்டினான் மன்னன். மக்களை பாதுகாக்கும் பொருட்டு இறையவரும் உடைப்பில் அய்யாவின் திருக்கரத்தால் மண் எடுத்து சென்று பொன்னடியை அடைப்பில் பதித்து மண்ணை கொட்டியதால் அணையின் உடைப்பும் அடைப்பட்டது. இவ்வாறு அடிமை போல் வேலை செய்து, புட்டு விற்கும் கிழவியின் பங்கை அடைத்து முடித்ததால் பாட்டியும் மன்னனின் தண்டனையிலிருந்து தப்பி அய்யாவின் செயலால் காப்பாற்றப்பட்டார். இப்படியே அய்யா அடிமை வேலை செய்துவிட்டு ஸ்ரீரங்கத்தில் வந்து அமர்ந்திருந்தார்.

************

# DAY 17

மாகாளி தானறிந்து மக்களைத்தான் கொன்றதினால்
ஒகாளி சோழன் ஊர்வறுமை யாகிடவும்
பன்னிரண் டாண்டு பாரில்மழை பெய்யாமல்
உன்னினாள் மனதில் உடனே மழைசுவறிப்
பெய்யாமல் சோழன் பேருலகம் பஞ்சமதால்
அய்யமது ஈயாமல் அறிவழிந்து வாடினனே
இறந்தசான் றோர்களுட ஏந்திழைமா ரெல்லோரும்
அறத்தால் பெரிய ஆயனையும் உள்நினைத்து
சிறந்த தவம்புரிய சென்றனர்கா ணம்மானை
சென்ற தவத்தின் செய்திகே ளன்போரே
அழுக்குக் கலையணிந்து அணிந்தபொன் தாளாமல்
இழுக்குச் சொல்லீந்த ஈழன் பழிகொள்ளவும்
இறந்த மன்னவர்கள் எழுந்திருந் தெங்களையும்
சிறந்த மணத்தோடு உடன்சேர வந்திடவும்
பழிசெய்த சோழனுசர் பகலநரி ஓடிடவும்
அழிவாகிச் சோழன் அவன்மாண்டுப் போயிடவும்
வரந்தாரு மென்று மாயவரை நெஞ்சில்வைத்துப்
பரமானப் பெண்கள் பாரத் தவசுநின்றார்

ஸ்ரீரங்கம் விட்டுச் சுவாமி அனந்தபுரம் ஏகல்

இப்படியே மாதர் இங்கே தவசிருக்க
அப்படியே மாயன் அவர்ஸ்ரீ ரங்கமதில்
இருக்கும் பொழுது இரணியநீ சக்கலியன்
கருக்காக லோகம் கண்டவிட மேபரந்து
ஸ்ரீரங்க மானதிலே சேர்ந்திருக்கும் வேதியர்கள்
நிதங் குளறி நெறிதவறிப் போனதினால்
முறைவைத்த பூசை முந்தி முறையெனவே
மறையவனும் பூசை வந்தே முகித்திடவே
பொறாமல் மற்றொருவன் பூசையெனக் கென்றுசொல்லி
மறவாத மாயவரை வணங்கிநிட்டை செய்யவென்று
முப்பது வேள்வி மொகுமொகெனத் தான்வளர்த்து
இப்போ நான்வீழ்வேன் இதில்மாயன் வாராட்டால்
என்றவ னெண்ணி ஏற்றவோ மம்வளர்த்து
அன்றவன் வீழ ஆர்ப்பரிக்கு மவ்வளவில்
மறையவனை மாயன் வந்தெடுத்துப் புத்திசொல்லி
நிறையொத்த மாயன் நெடுமறையோ னைக்கூட்டி
ஸ்ரீரங்கம் விட்டுத் திருவனந் தம்நோக்கிச்
சாரங்கர் போகத் தானேகும் வேளையிலே
நன்றான கேத்திரனும் நல்லமறை வேதியனும்
அன்றிளகிச் சென்று அரனார் திருக்கோவில்
வந்த பொழுது வானமதி லுள்ளோரும்

நந்நகோ பால நாரா யணரிடத்தில்
சென்று தொழுது தேவரெல்லாந் தெண்டனிட்டு
இன்று பெருமாள் இங்கே யெழுந்தருளி
வந்த வகையேது மாயவரே யென்றுசொல்லி
அந்தமுனி தேவர்களும் அச்சுதரோ டீதுரைக்க
நல்லதென்று அய்யா நாரா யணர்மகிழ்ந்து
வல்ல பரமே சுரரை மிகவாழ்த்தி
ஈசுரரே யென்றனக்கு இங்கிருக்கக் கூடாமல்
தேச மதைப்பார்த்துத் திருவ னந்தமேகி
இருக்கவே யென்று எழுந்தருளி வந்தேன்காண்
மருக்கிதழு மீசுரரும் மாமுனிவர் தேவர்களும்
பங்கம் இல்லாத பரமரிசி ஆனவரும்
சங்கமெல்லோரும் சேர்ந்து மிகக்கூடி
மாயனிடத்தில் மனமகிழ்ந்து ஏதுசொல்வார்
ஆயனே கலியன் அவனும் மிகப்பிறந்து
நீசனாய்த் தோன்றி நிரந்து பரந்திருந்த
தேசத் திருவனந்தம் செல்லவகை யேதுவையா
அல்லாமல் நீசன் அவனிடத்தில் போயிருந்தால்
எல்லா மவன்றனக்கு ஈடாகிப் போகுமல்லோ
கைவாய்த்து தென்று கலியனவன் கொண்டாடி
மெய்வாய்த்து தென்று மேலாக மாநீசன்
பரிகாசங் செய்வானே பார்முழுது மாநீசன்
வரியான பாவி வம்புமிக செய்வானே
ஆனதா லங்கேக அச்சுதரே ஞாயமில்லை
மான மழிந்தாச்சே மாகலியன் வந்ததினால்
எல்லாங் கலியை ஈடழிக்கப் பாருமையா
இல்லையே யானால் எங்களுக் கிங்கேதான்
சென்ற இடமெல்லாம் சிறைபோ லிருக்குதையா
என்றுதான் தேவர் ஈசர்முதல் சொல்லிடவே
அன்று அவர்களுக்கு அச்சுதரு மேதுரைப்பார்
நன்றுநன்று வானவரே நல்லபர மேசுரரே
கலியேது நீசம் காணேது வையகத்தில்
சலிவேது ராச்சியத்தில் தானேதும் நானறியேன்
அனந்தபுரம் போக ஆதியி லென்றனக்குத்
தனந்தசுக முனிவன் சாபமுண் டானதினால்
கொஞ்சநா ளானாலும் குடியிருக்க வேணுமங்கே
வஞ்சகங்க ளில்லாத மாயன்வழி கொண்டனராம்

விளக்கம்:

மாகாளி வைகை கரையில் நடந்து முடிந்த சம்பவங்களை கேள்விப்பட்டு இரண்டு மக்கள் கொல்லப்பட்டார்களா? என்று மிகவும் கோபம் கொண்டு ஓங்கார சக்திக் கொண்ட காளி ஆங்காரமாக என்னுடைய பிள்ளைகளை கொன்ற காரணத்தினால் சோழ நாட்டு மன்னனின் நாடு வறுமையால் கரிந்து போகும். 12 ஆண்டுகள் பாரில் மழை பெய்யாது. மக்கள் பஞ்சத்தால் கடுமையான முறையில் வேதனையும் அடைவார்கள். மன்னன் மதி கெட்டு

மனம் உருகித் திண்டாடுவான் என்று மனம் குமுறிச் சாபமிட்டாள் பத்திரகாளி. காளிதேவியின் சாபம் பலித்தது. நாட்டில் மழை இல்லாமல் போனது. செல்வ சிறப்போடு இருந்த சோழ நாடு மழை இல்லாத காரணத்தினால் வறுமை நிலையை அடைந்தது.

பத்ரகாளியின் சாபம் சோழ மன்னனை திண்டாட செய்தது. சோழ மன்னனால் கொலை செய்யப்பட்ட சான்றோர்களின் மனைவிகள் இந்த சம்பவத்தை அறிந்து வேதனை அடைந்தார்கள். ஆகவே அவர்கள் இரண்டு பேரும் வருத்தம் மிகக் கொண்டு மனதை ஒருநிலைப்படுத்தி திருமாலை நோக்கிக் கடுமையான தவம் செய்தார்கள். இருவரும் அணிந்திருந்த ஆடைகளை மாற்றாமல் கணவன் கட்டிய மாங்கல்யத்தை கழட்டாமல் தன் கணவனை மரியாதை இல்லாமல் கொன்று களங்கப்படுத்திய ஈழ மன்னன் உயிரை பழிவாங்க தவம் நின்றார்கள். அய்யாவை தியானித்து சோழ மன்னனால் கொல்லப்பட்ட சான்றோர்கள் இருவரும் மீண்டும் உயிரோடு எங்களோடு சேர்ந்து வாழவேண்டும்.

சீரும் சிறப்புமாக உலகமெங்கும் புகழ் பெற கூடிய அளவில் உடனே உயிர் பெற்று எழ வேண்டும் மறுபடியும் அவர்களோடு வாழ்ந்து நாங்கள் இன்பம் காண வேண்டும். எந்த தவறும் செய்யாத சான்றோரை கொலை செய்த சோழ மன்னனின் நாடு அழிந்து பகலில் நரி ஓடும்படி காடாக வேண்டும். சோழ மன்னன் நாடு இழந்து, பதவியிழந்து உயிரிழக்க வேண்டும் என்று நினைத்தது நடக்க வரம் வேண்டும் .இவ்வாறு நிபந்தனைகளை திருமாலிடம் கூறி சான்றோரின் மனைவிகள் கடும்தவம் புரிந்தார்.

## ஸ்ரீரங்கம் விட்டு சுவாமி அனந்தபுரம் எழுந்தருளல்

கணவனை இழந்த சான்றோரின் மனைவிமார்கள் இருவரும் திடம் கொண்ட மனதுடன் நினைத்தது நடக்க கடும் தவசு நின்றார்கள். திருமால் ஸ்ரீரங்கத்தில் இருக்கும்போது, முன் பிறவியிலிருந்து இரணியனாக இருந்த நீசப் பாவியின் வழி வந்த நீசனுடையத் தன்மையால் அநியாய செயல்கள் மிக வேகமாக பூலோகம் முழுவதும் பரவி தர்மம் அழிந்து அதர்மம் கொடி கட்டி எங்கும் பரந்தது. மாய பெருமான் ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருந்த போது பணிவிடைகள் செய்து கொண்டிருந்த வேதம் ஓதும் அந்தணர்கள் மற்றும் நல்லபடியாக செயல்பட்டு வந்த தெய்வ நீதம், தர்ம நீதம், மனு நீதம் ஆகிய நல்ல நீதி நெறிமுறைகள் எல்லாம் முறை தவறி விட்டது.

பூஜை வழிபாட்டு முறைகளும் முதலில் வந்தவர்களுக்கு முதல் உரிமை என்றும், வேதம் ஓதும் அந்தணரும் பூஜை முறைகளை ஒழுங்கில்லாமல் காலை, மாலை என்ற நேரம் சரியாய் பார்த்து பக்தியுடன் செயல்படுத்தாமல் முடித்தார்கள். ஒருவன் செய்வது மற்றவருக்கு பிடிக்காமல் அவனுக்கு எதிரியாக இன்னொருவன் முறைப்படி பூஜை செய்து வரவேண்டும் என்று வாதாடினார். யார் செய்கின்ற செயலுக்கும் தவறாமல் பலன் கொடுத்து காட்சியளிக்கும் திருமாலை வணங்குவதற்கு போட்டிபோட்டு கொண்டு சண்டைப் போட்டார்கள். ஸ்ரீரங்கத்தில் ஒருவன் ஒரே இடத்தில் முப்பது ஓமகுண்டங்களை குபு குபுவென பொறிப்பறக்க வேள்வி வளர்த்தான். செய்யும் பூஜை எனக்கு பலன் தராவிட்டால் ஓமக் குண்டத்தில் விழுந்து இறப்பேன்.

திருமால் எனக்கு காட்சி தராவிட்டால் ஓமக்குண்டத்தில் வீழ்வேன் எனத்தீர்க்கமுடன் இருந்தான். பிடிவாதமாக உயிரை விடுவேன் என்று திருமாலுக்குரிய மந்திரத்தை முறையாக சொல்லி யாகத்தை நன்றாக வளர்த்தான். ஆனால் திருமால் வரவில்லை. ஓம குண்டத்தில் விழுந்து விட நினைத்த அந்த நேரத்தில் வேதியனுக்கு திருமால் காட்சி கொடுத்தார். பின்னர் அந்த வேதியனிடம் கலியின் கொடுமையைப் பற்றி எடுத்துக் கூறினார். பின் நாராயணர் கலியின் கொடுமை பற்றி விவரமாக எடுத்துச் சொல்லி நெடுநீளமாக பல யாகங்களை வளர்த்த வேதியனை கூட்டிக்கொண்டு ஸ்ரீரங்கத்தை விட்டு திருவனந்தபுரம் நோக்கிப் புறப்பட்டார்.

அந்த நேரம் அங்கு காவல் காத்து கொண்டிருந்த காவல் தெய்வமான சேத்திரப் பாலனையும் அழைத்துக்கொண்டு வரும் வழியில், சிவபெருமானுடைய திருத்தலத்தை கண்டு மூன்று பேரும் உள்ளே வந்தார்கள். அங்கே சிவனும், வான லோக முனிவர்களும், தேவர்களும் சேர்ந்து, நாராயணரிடம் ஸ்ரீரங்கம் விட்டு வந்த காரணம் என்ன என்று கேட்டார்கள். நாராயணர் சிவனை தியானித்து, ஈஸ்வர பெருமானே! ஸ்ரீரங்கத்தில் நடக்கும் செயல்பாடுகள் எனக்கு பிடிக்காமல் போனதால் அங்கு இருக்க மனமில்லை.

ஆகையால் கேரள நாட்டில் உள்ள திருவனந்தபுரம் சென்று அங்கேயே இருக்கலாம் என்றுப் புறப்பட்டு வந்தேன் என்றார். சிவபெருமானும், முனிவர்களும், தேவர்களும், மாயப்பெருமாளிடம் அய்யா கலியின் கொடுமை எங்கும் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் திருவனந்தபுரத்தில் கலி முற்றியச் செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. தாங்கள் அங்கே செல்ல காரணம் என்ன என்று கேட்டார்கள்.

ஈவு இரக்கமில்லாமல் மாயமந்திர செயல்களை நடத்தும் அவனுடைய நாட்டிற்குச் சென்று நீங்கள் அங்கு இருந்தால் கலியன் தான் நானே பெரியவன், எங்கும் நிறைந்தவன் என்கிற ஆணவம் அவனுக்கு உண்டாகிவிடும். மேலும் நாம் எல்லோரும் அவனுக்கு அடங்கியதுபோல ஆகிவிடுமே அய்யா! மேலும் எல்லாமே நான் நினைத்தபடி என் கைக்குள் அடங்கி விட்டது என்று கலியன் மிகவும் மகிழ்ந்து, உண்மையையும், சத்தியமாகிய மெய்ப்பொருளே எனக்குள் வந்துவிட்டது, எனக்கு இனி என்னக் கவலை என்று, கலியன் மிகவும் மகிழ்ந்து ஏளனமாக எல்லோரையும் மதிப்பிட்டு , அய்யா உங்களையும், எல்லா மக்களையும் எண்ணி கை கொட்டி நகைப்பானே நீசன். ஆகையால் அவனுடைய ஆதிக்கத்திற்குள் ஆளாகும் படி ஆகும். எனவே அங்கு செல்ல வேண்டாம் அய்யா என்று இரங்கி வேண்டினார்கள்.

மேலும் தேவர்களும், சிவனும், நீதி, நேர்மை, தர்மம், அன்பு, ஒழுக்கம் ஆகிய எல்லா செயல்பாடுகளும் கலியனின் வரவால் அழிந்து கொண்டிருக்கிறது. அதன் மீதமுள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்குள் நீங்கள் கலியனை தந்திரமாக அளிக்க வேண்டும். அதை விரைவில் செயல்படுத்துங்கள் அய்யா!. இல்லையெனில் நாங்கள் விடுதலை அடைய முடியாமல் செல்கின்ற இடமெல்லாம் சுதந்திரம் இல்லாமல் அடிமையாய் சிறைப்பட்ட கைதி போல் ஆகி விடுவோமே! அய்யா! என்று அய்யாவிடம் வேண்டினார்கள்.

இவ்வாறு அவர்களுக்கு ஏற்பட்ட நிலையை தேவர்களும், ஈஸ்வரரும் அய்யா நாராயணரிடம் எடுத்து கூறினார்கள். அவர்களின் உரையை கேட்ட மாய பெருமாள் அவர்களைப் பார்த்து திருவாய் மொழிந்து சொல்லுவார், நீங்கள் கூறியது எல்லாம் நன்மைக்கே, நன்மையானகாரியங்கள் தான் என்று நாராயணர் சொல்லுவார், நன்மையின் சிகரமான சிவபெருமானே! கலியன் செயல் கொடுமையானது தான் என்றாலும், நான் திருவனந்தபுரம் செல்ல சரியான காரணம் என்னவென்றால் ஆதிகாலத்தில் வியாசரின் மகனாகிய சுக முனிவரின் சாபம் ஒன்று எனக்கு இருக்கிறது. எனவே தான் நானே திருவனந்தபுரம் சென்று சிறிது நாட்களாவது அங்கு இருந்து விதியின் பயனை தீர்க்க வேண்டி இருக்கிறது, என்ற உண்மையை மறைக்காமல் உரைத்தார் மாயபெருமாள்.

கள்ளம் கபடமில்லாமல் தேவர்களிடமும் சிவனிடமும் சொல்லிவிட்டு அவர் செல்லும் வழியை தேடினார். இப்படியாக சிவபெருமானை சமாதானப்படுத்தி அனுப்பி விட்டு திருமாலுடன் காவல் புரிந்த சேத்திர பாலனையும், யாகம் வளர்த்த அந்தணனையும் மற்றும் உள்ள தேவர்களையும் அழைத்துக் கொண்டுக் கூட்டமாக எல்லோருமாய் மாயப் பெருமான் முன் செல்ல மற்றுமுள்ளோர் அய்யாவைப் பின் தொடர்ந்தார்கள். கலி நீசனுடைய நாடாகிய திருவனந்தபுரத்தை நோக்கி வந்தார்கள்.

***********

# DAY 18

ஈசர்தனை யனுப்பி எம்பெருமா ளச்சுதரும்
வாசமுள்ள சேத்திரனும் மறையவனுந் தேவர்களும்
சங்க மதுகூடித் தத்திதத்தி யாய்வரவே
வங்கத் திருவனந்தம் வழிநோக்கித் தான்வரவே

## பிரம்ம ரிஷிகள்

வழியிலோ ரற்புதந்தான் மாயவனார் கண்டுமிகக்
களிகூர்ந் தவருடனே கட்டாக ஏதுரைப்பார்
மாமுனியே தேவர்களோ வழியி லொழுங்கொழுங்காய்
ஓமுனியே நின்றதையும் உரைப்பீர்கா ணென்றுரைத்தார்
அப்போது மாமுனி அருண முனிவனொன்று
செப்போடு வொத்த திருமாலை யும்பணிந்து
மாயவரே நான்முகனும் வாழும் பிரம்மமதில்
ஆய கலையிருஷி ஐம்பத் தொருநான்கோர்
பிரமன் பிறப்பைப் புகுந்தெடுத் திவ்விருள்ஷி
வரமான புத்தகத்தை மாறாட்டஞ் செய்ததினால்
அறிந்தந்த வேதாவும் அவர்கள் தமையழைத்துச்
செறிந்த இருஷிகளைச் சிலைக்கல்லாய்ச் சாபமிட்டார்
அப்பொழு திவ்விருஷி அயனைத்துதித் திச்சாபம்

எப்பொழு திச்சாபம் ஏகுமென்றார் மாயவரே
வேதா தெளிந்து விஷ்ணுஸ்ரீ ரங்கம்விட்டுத்
தீதோர் திருவனந்தம் செல்லவரும் வேளையிலே
வந்து சிலைதனையும் மாயவனார் தொட்டிடுவார்
சிந்து திருக்கைதான் சிலைமேலே பட்டவுடன்
தீருமுங்கள் சாபமென்று சிவயிருஷி யானோர்க்குப்
பேருல கம்படைத்த பிரமன் விடைகொடுத்தார்
அந்தப் பொழுதில் ஐம்பத்தொரு நான்குரிசி
இந்தக் கற்சிலையாய் இவரிருந் தாரெனவே
மாமுனிவன் சொல்ல மாயவரும் நல்லதென்று
தாமுனிந்து கற்சிலையைத் தான்தொட்டா ரம்மானை
உடனே இருஷிகளாய் உருவெடுத்து மாலடியைத்
தடமேலே வீழ்ந்து தானாவி யேகுவித்து
அன்று பிரமா அடியார்க்கு இட்டசாபம்
இன்றகல வைத்து இரட்சிக்க வந்தவரே
எங்களுக்கு நல்லகதி ஈந்துதா ருமெனவே
திங்கள்முக மாயருட திருப்பாதம் போற்றிநின்றார்
நல்லதுதா னென்று நாரா யணர்மகிழ்ந்து
வல்ல இருஷிகளே வாழ்வெங்கே வேணுமென்றார்
மேலோக வாழ்வு வேணுமோ அல்லவென்றால்
பூலோக வாழ்வு போதுமோ வென்றுரைத்தார்
அப்போ திருஷியெல்லாம் அவனியி லெங்களுக்கு
இப்போ வரங்கள்தந்து ஏகவைத்தால் போதுமையா
நல்லதுதா னென்று நல்ல இருஷிகட்கு
வல்லத் திருமால் வரங்கொடுப்பா ரம்மானை
பிச்சையது வாங்கிப் பெருமை யதாயருந்தி
மிச்சமது வைக்காமல் விழிபரந்து பாராமல்
சீமைக்கொரு இருஷி செல்லுங்கோ ஆண்டியெனத்
தாண்மை பரதேசி தானாகி வீற்றிருந்து
பூசை பெலிகள் பீடமிட் டேராதிருந்து
ஆசைக் கருத்தை அறுத்து வொருநினைவாய்
மாசணு காமல் மனதில் நமைத்துதித்து
ஓசை யுடனே உலக மதில்நீங்கள்
வைகுண்ட மென்று வையகத்தே வாழுமென்று
பொய்குண்டம் நீக்கிப் பூலோக மேயிருங்கோ
தந்த வரத்தில் தப்பி நடந்ததுண்டால்
வந்தங் கிருந்து வருத்தியுங்கள் தம்மையெல்லாம்
அவரவர்கள் செய்த அக்குற்றந் தான்கேட்டு
எவரெவர்க்குந் தக்க இயல்பே தருவோமென்றார்
நல்லதுதா னென்று நாடி இருஷியெல்லாம்
செல்லப்பர தேசிகளாய்ச் சென்றாரே சீமையிலே
இருஷி களையனுப்பி எம்பெருமாள் தான்மகிழ்ந்து
துரிச முடனனந்த சீமைநோக் கிநடக்கத்
தேவர்களும் வானவரும் ஜேஜே யெனநடக்கத்
தாவமுட னனந்தம் தானோக்கி மால்நடக்க
அனந்த புரம்நோக்கி அச்சுதனா ரேகுகையில்

விளக்கம்:
பிரம்மரிசிகள்

கலி நீசனுடைய நாடாகிய திருவனந்தபுரத்தை நோக்கி வருகின்ற பாதையில் ஒரு அதிசயத்தை கண்டு ஆச்சரியப்பட்டு நின்றார். மனதில் வியப்படைந்த அய்யா நாராயணர் தன்னோடு வந்தவர்களிடம் கூறுகிறார், மகாபெரிய சக்திகளை பெற்ற முனிவர்களே! தேவர்களே! வந்த வழி பாதையின் வரிசை வரிசையாய் ஓங்கிய நிலையில் முனிவர்கள் சிலை நிற்பதற்கு காரணம் என்ன? தெரிந்தால் கூறுங்கள் என்று கேட்டார். அதற்கு பதிலாக தெய்வ கணங்களில் ஒருவனான அருணன் என்கிற முனிவர் மாய பெருமானிடம் கூறுவார், எங்கும் நிறைந்திருக்கின்ற மாய பொருளே! இவர்கள் நான்கு முகம் கொண்ட பிரம்மா வாழும் பிரம்ம லோகத்தில் ஆயக் கலைகளை கற்று தேர்ந்தவர்கள். இந்த ஐம்பத்து ஐந்து பேரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு பெரிய தவறு செய்துவிட்டார்கள்.

தவறு என்னவென்றால் பிரம்ம லோகத்தில் பிரம்மா வைத்திருந்த உயிர்களை பிறவி செய்யும் விதி நூலை திருடி சென்றார்கள். பரமசிவனிடம் வரமாகப் பெற்ற படைப்பு தொழிலை செய்கின்ற விதிமுறை நூலினை திருடி மறைத்து விட்டார்கள். அவர்கள் செய்த தவறை அறிந்த பிரம்மா இந்த ஐம்பத்து ஐந்து பேர்களையும் கல் சிலையாக மாறும் படிக் கட்டளையிட்டார். உடனே இவர்கள் எல்லோரும் சிவனையும், திருமாலையும் தியானித்து, பிரம்மாவின் காலில் விழுந்து வணங்கி எங்களுக்கு இச்சாபம் எப்போது தீரும் என்றார்கள். இந்த சாபத்திலிருந்து விடுபட நாங்கள் என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

அவர்களிடம் இரக்கம் கொண்டு தெளிவான முறையில் திருமால் ஸ்ரீரங்கத்தில் இருக்க பிடிக்காமல் அங்கிருந்து புறப்பட்டு தீமையை ஒழிப்பதற்காக கலியன் ஆட்சி செய்யும் திருவனந்தபுரம் செல்வதற்கு வருகின்ற சமயத்தில் கற்சிலையாக நிற்கின்ற உங்கள் செயல் கண்டு அது உங்கள் பக்கத்தில் வந்து அவருடைய கை விரல்களால் தொடுவார். தாமரை மொட்டு போல் சிவந்த மிகவும் சக்தி வாய்ந்த திருமாலின் திருக்கரங்கள் உங்கள் மீது படுகின்றப் போது உங்களுடைய சாபம் மாறும் என்றார்.

சிந்து நதியின் புனிதம் பெற்ற திருமாலின் தெய்வீகம் நிறைந்த திருக்கரங்கள் உங்கள் மேல் வைத்த உடன் உங்கள் சாபம் தீர்ந்து போகும். ராமாவதாரத்தில் அவரது திருவடிகள் பட்டுக்கல் பொன்னானது. அவருடைய திருக்கரங்கள் உங்கள் மேல் பட்டு நீங்களும் நற்கதி அடைவீர்கள் . கால் வண்ணம் அகலிகையைப் பெருமைப்படுத்தியது. அதுபோல் கைவண்ணம் கொண்டு நீங்களும் உயர்வு அடைவீர்கள். பெருமானின் அருள் அவ்வளவு சக்தி படைத்தது ஆகும் என்று தெரிவித்தார்.

இவ்வளவு பரந்த உலகம் முழுவதிலுமுள்ள உயிர்களைப் படைத்த பிரம்மா சொல்லி அனுப்பினார் பெருமாளே! என்றுச் சொன்னார் அருணன் என்ற முனிவர். ஆகையால் பிரம்மாவின் சாபம் பெற்ற மனிதர்கள் ஆகிய ரிஷிகள் அன்று முதல் ஐம்பத்து ஐந்து பேரும் கல் சிலையாக நின்று கடும் தவம் புரிந்து வருகிறார்கள், என்று அவர்களுடைய முன்ஜென்ம செய்தியை மிகப்பெரிய அருண முனிவர் மாய பெருமானிடம் சொன்னபோது பெருமாளும் நல்லதுதான்

என்று அகமகிழ்ந்து கற்சிலைகளாய் நின்ற ரிஷிகளை தன் திருக்கரத்தால் வருடினார். திருமாலின் கரம் பட்ட உடன் ரிஷிகள் எல்லோரும் கல்லுரு மாறி நல்லுருப்பெற்று திருமாலின் திருவடியை பற்றித் தழுவினார்கள். புகழ்பெற்ற திருமாலின் திருவடியை பணிந்து வணங்கினார்கள்.

இருகரம் குவித்து தலைமேல் கைவைத்து மும்முறை வலம் வந்து தொழுதார்கள். முன் ஜென்மத்தில் பிரம்மதேவனிடம் சாபம் பெற்ற சிவனடியார்களாகிய எங்களை கோபத்தில் பிரம்மா கல்லாக மாறி போகும்படி சபித்த சாபத்தை, இப்பொழுது மாறும்படி செய்து பாதுகாத்த பரம்பொருளாகிய மாயப்பெருமானே! எங்களை மன்னித்து நற்கதியும் தந்து மோட்சத்திற்கு செல்ல அனுமதி தாரும் அய்யா என்று வேண்டினார்கள். சந்திரனை போல் ஒளி பொருந்தி, சாந்தமான முகத்தை உடைய திருமாலின் பெருமைகளை, உலகம் அளந்து ஓங்கி நிற்கின்ற உத்தமரின் பாதத்தை மறுபடியும் ,மறுபடியும் வணங்கி மகிழ்ந்தார்கள்.

அப்போது அய்யா நாராயனார் வலிமையான சக்திகளை பெற்ற ரிஷிகளே! உங்களுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டும், சிவலோகம் சென்று வாழ விரும்புகிறீர்களா? இல்லை என்றால் இந்த பூலோக வாழ்க்கை போதுமா? என்று கேட்டார். அதைக் கேட்ட ரிஷிகள் எங்களை பூலோகத்திலே வாழ வைத்தால் போதும் என்றார்கள். பூலோக வாழ்வு போதும் என்றால் நீங்கள் பூலோகத்தில் வாழும் மக்களின் தர்மம் வாங்கி மனநிறைவோடு சாப்பிட வேண்டும். ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொருவராக தனி தனியாக சென்று எந்த குறைபாடுகளும் இல்லாமல் திடமான எண்ணத்தோடு, பொறுமையான குணம் கொண்டுப் பணிவோடு அமைதியாக இருக்க வேண்டும். பேராசை என்ற எண்ணம் கூடாது. மனதை ஒருநிலைப்படுத்தி கள்ளம், கபடம் இல்லாமல் என்னையே நினைத்து இருக்க வேண்டும்.

குற்றமற்றவர்களாக சிறந்தவர்களாக பெயர் பெற்று பூலோகத்தில் வாழுங்கள். வைகுண்ட நாராயண தஞ்சம் என்று மனதைக் கட்டுப்படுத்தி பூலோக வாழ்க்கை போதும் என்ற நிறைவோடு வாழுங்கள். இப்படியாகக் கூறிய வழிமுறைகளை மீறாமல் நடக்கவேண்டும். மீறி நடந்தால் நீங்கள் செய்தத் தவறுகளை நான் விசாரித்து அறிந்தேனேயானால் தகுந்த தண்டனை விதிப்பேன் என்றார். ரிஷிகள் எல்லோரும் சம்மதம் என்று கூறி அய்யாவின் கட்டளையை ஏற்று தனி தனி தேசம் சென்றார்கள். திருமாலின் அருள் ஆசி பெற்று ரிஷிகள் பூலோகத்தில் வாழ ஒவ்வொருவராக பல தேசங்களுக்கு பண்டாரம் போல் சென்றார்கள்.அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்து புத்திமதிகள் சொல்லி அனுப்பிய மாயவரும் திருவனந்தபுரம் நோக்கி நடந்தார்.

தேவலோக தேவர்களும், வானவர்களும், காட்டுப்பாதை வழியாக அய்யாவுடைய அன்புக்கொடி மக்கள் போல் அய்யாவின் துணையோடு அனந்தன் என்கிற வனத்தை கடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்கு வரும்போது அங்கு மேலும் ஒரு அதிசயமும் கண்டார் அய்யா நாராயணர். மெய்கொண்டோர் வரும் போது, பொய்கொண்டு இருப்பவர்களுக்கெல்லாம் உயர்வு கொடுத்து காப்பாற்றும் கருணைத் தெய்வம் அல்லவா அய்யா நாராயணர்.

********

# DAY 19

## எக்காள துர்க்கை

புனந்தனிலோர் பொருப்புப் பூவையுருப் போல்கிடக்கக்
கண்டெம் பெருமாள் கால்கொண் டுதைத்திடவே
குன்றுபோ லேயுடம்பும் குஞ்சரம்போல் கைகாலும்
துண்டு மலைபோல் துய்யமூக்கு முலையும்
வாய்கண் ணொருமலையாம் வயிறுமூணு மலையாம்
கொண்டை பன்னிரண்டு குறுக்கமுண் டன்போரே
பண்டே திருமால் பம்பழித்தத் தாடகைபோல்
நின்றாளே யண்டபிண்டம் நிறைந்த சொரூபமதாய்
கண்டாரே எம்பெருமாள் கனத்தவி சேடமென்று
தேவர்களே வானவரே சேத்திரனே வேதியனே
பாவலரே கல்தான் பரும்பெண்ணாய் வந்ததென்ன
சொல்லுவீ ரென்று திருமா லுரைத்திடவே
வெல்லும் புகழ்தேவர் விளம்புவா ரம்மானை
ஏம னிணையான எக்காளத் துர்க்கையிவள்
சாமி சிவனார்தன் சொல்லையிவள் தட்டினதால்
கோபித் திவளைக் குன்றுபோல் சாபமிட்டார்
ஏகி வரும்போது இவள்தானு மீசுரரை
வணங்கியிச் சாபமெப்போ மாறுமென்றாள் மாயவரே
அணங்குக்கு ஈசர் அருளினது கேளுமையா
அனந்த புரமதிலே ஆனநதி மேலே
வனந்தமால் பள்ளிகொள்ள வருகின்ற அவ்வழியில்
உன்சாபந் தீர்த்து உன்னை உலகதிலே
பின்சாப மிட்டுப் போக விடைதருவார்
என்று சிவமுரைக்க இப்படியே வந்தவளும்
குன்றுபோ லேகிடந்தாள் குருவேயுன் பாதமதால்
அவள்சாபந் தீர்ந்து ஆயிழை போல்வடிவாய்
இவள்தானும் வந்தாள் எனச்சொன்னார் தேவர்களும்
நல்லதென்று நாரணரும் நாரிதனைக் கொண்டாடி
வல்லவளே யெக்காள மடந்தையே யுன்றனக்கு
ஏதுனக்கு வேணுமென்று என்னோடு கேளுஎன்றார்
வாதுக்கு வல்லகியாள் மாய ருடன்கேட்பாள்
நாரணரே அய்யாவே நான்தான் முற்காலமதில்
பாரமுள்ள செந்திருஷி பாரியாய் நானிருந்தேன்
அப்போது என்றனக்கு அழகிது இல்லையையா
செப்போடு வொத்த சிவகாமி போலழகு
நன்றாக என்னுடைய நல்லபர்த் தாவுடனே
ஒன்றாக வாழ்ந்து உறவா டிருக்கையிலே
என்பேரி லிச்சை ஏமன்மிகக் கொண்டாடி
வம்புசெய்தென்னுடையமன்னவனைகொன்றான்காண்
ஆனதா லேமனுக்கு அழிவுவர வேணுமென்று
மானத் தவமிருந்து வருந்தினே னீசுரரை
அப்போது ஈசுரரும் அடியாள் மனந்திருத்தி

இப்போது அந்தகனை இறக்கவைத்தால் ராச்சியத்தில்
நருட்பெருத்துப் பூலோக நாடுதரியா தெனவே
பொறுத்துக்கோ கொஞ்சம் பூவையே யென்றுரைத்தார்
என்னை மனந்திருத்தி எமனோடே சேர்த்தாலும்
மன்னனை வதைத்ததுதான் மறவாம லெப்போதும்
திவசமொரு நேரம் சிவனாரை யானோக்கிப்
பவத இயமனுக்குப் பகையாகக் கேட்டிருந்தேன்
ஆனதா லீசர் அறிந்தே யெனைநோக்கி
ஈன முடன்பேசி இகழ்த்தினா ரீசுரரும்
கொஞ்சம் பொறுக்கவென்று கூறினேன் பெண்கொடியே
மிஞ்சவல்லோ செய்தாய் எனவெகுண் டாதிபரன்
மலைபோ லுடம்பும் வயிறு மிகப்பெருத்து
அலைபோற் பரந்த அங்கம் பெரும்புடமாய்க்
கல்லது போற்கிடந்து காலனைக் கொல்லும்வகை
வல்ல வகையாலும் வருந்திக்கோ என்றுசொல்லிக்
கோபித்தார் முன்னே குன்றுபோ லேகிடக்கச்
சாபித்தா ரென்னை சாமியுன் பாதமதால்
தோன்றினே னென்சாபத் துயரறுத்தேன் மாயவரே
வீன்றிய அந்தகனை வேரோ டறுத்திடவே
வரந்தா ருமையா மாயவரே யென்றுசொல்லி
சிரமுரத்தப் பெண்கொடியாள் தெண்டனிட்டாள் மாயவரை
அப்போது மாயவரும் அவளை முகம்நோக்கி
இப்போது பெண்கொடியே யான்சொல்லக் கேட்டிடுநீ
அந்தகனைக் கொல்லவென்று அருந்தவசு பண்ணிடுநீ
வந்த யுகமாறி வலியபெலத் தர்மயுகம்
உதிக்கும் பொழுதில் உன்தவ சின்படியே
சதிக்குகந்து தானால் சண்டனழி வாகுமென்றார்
அப்போது பெண்கொடியும் மானத் தவம்வளர
இப்போ விடையருளும் என்றுகேட்டு வேண்டியவள்
நின்றாள் தவத்தில் நீலியாய்ச் சண்டனுக்கு
வண்டுறியக் கன்னி மன்னன் பழிவாங்க
ஆதியைப் போற்றி அருந்தவசு பண்ணிடவே
சோதித் திருமால் திருவனந் தம்நோக்கி
நடக்கத் திருமால் நளின முடன்மகிழ்ந்து
வடக்குக் கயிலாச வழியே வருகையிலே

விளக்கம்:
எக்காள துர்க்கை

ஆதி திருமால் அனந்தபுரம் வனத்தில் பகவான் வந்ததும் அங்கு ஒரு வினோதமான மலைகள் கிடந்ததை கண்டார். மலையானது பெண்ணின் உருவம் அமைப்பில் கல்லாகக் கிடந்தது . அந்த விசித்திரமான கல்லை கண்ட நாராயணர் உடனே அவருடைய திருப்பாதங்களால் மிதித்தார். என்ன அதிசயம் அந்த திருமாலின் திருப்பாதம் பட்ட உடன் அந்த மலை கல்லானது கந்தமலை போன்ற உடலமைப்பும், யானை துதிக்கை போன்ற வடிவத்தில் பெரிய கைகளும், கால்களும், உறுப்புகளும் உண்டாகி, உடைக்கப்பட்ட மலைப் போல்

வடிவம் இல்லாமல், மூக்கும் வடிவமற்ற கனத்த மார்பகங்களும் உடையவளாய் , கண், வயிறு எல்லாம் மலைக்குன்று போல் அமைப்பும் கொண்டு, தலையில் இருந்த கொண்டையோ பன்னிரண்டு முள நீளம் இருந்தது.

மொத்தத்தில் பெரிய பாறை இடுக்கில் ஒளிந்து நின்று பார்ப்பது போல் தென்பட்டது. ஆனால் உருவ அமைப்போ ராம அவதாரத்தில் திருமால் பாணத்தால் அழித்த தாடகையின் உருவ அமைப்பை போன்று கோரமாய் நின்றாள். உடல் எல்லாம் சதைப்பகுதியாக அண்டம் முழுவதும் நிறைந்து வடிவம் இல்லாத உருவம் கொண்டவளாக தென்பட்டாள். அந்த உருவத்தை கண்ணால் பார்த்த காருண்ய மூர்த்தியே! ஆச்சரியத்தோடு, இது பார்க்க முடியாத விபரீதக் காட்சியாக உள்ளது.

தேவர்களே!, முனிவர்களே! தெய்வங்களே! துணையாக வந்த அந்தணர்களே! புகழ் பாடும் புலவர்களே! வாருங்கள் வந்து பாருங்கள். இந்த அற்புதமான விந்தையை வந்து பாருங்கள் என்று அழைத்தார். கல்லானது பெண்ணானக் காரணத்தை நீங்கள் கண்டுபிடித்து சொல்லுங்கள் என்றார் திருமால். பதட்டம் அடைந்த தேவர்கள் பதில் சொன்னார்கள்.

அய்யா இந்த மலைக்கல் அல்லது பெண் உருவமாக மாறி நிற்கும் காரணம் என்ன என்பதும், இவர் யாரென்று எங்களுக்கு தெரியும் என்று தேவர்கள் சொல்ல துவங்கினார்கள். திருமால் ஆனந்தமாகக் கேட்டு நிற்க தேவர்கள் கூறுகின்றார்கள். இவள் பெயர் எக்காளதுர்க்கை ஆகும். இந்த பெண் எமனை போன்ற சக்தி படைத்த ஆணவம் கொண்ட துர்க்கை. சிவபெருமானுடைய சொல்லை மதிக்காமல் ஆணவத்தினால் எதிர்த்து பேசியதால் சிவபெருமான் இந்த துர்க்கையின் மீது கோபம் கொண்டு மலைக்கல்லாய் மாறிப்போக சாபமிட்டார். அப்போது துர்க்கையானவள் சிவப்பெருமான் அடிபணிந்து எனக்கு இந்த சாபம் எப்போது மாறும். இதற்கு நான் என்னப் பணிவிடைப் புரிய வேண்டும் என்று கேட்டாள். சிவபெருமான் திருவாய் மலர்ந்து இந்த சாபம் தீர வழியொன்று இருக்கிறது என்கிறார்.

நாராயண மூர்த்தி அனந்தபுரம் செல்வதற்காக வருகின்றப் போது அவர் பாதம் பட்டு உன் சாபம் தீரும் என்றார். ஆகையால் நான் சிவபெருமான் இட்ட சாபம் தீர ஆதி ஆனந்தம் என்கிறப் பெரிய வனத்தில் மலைப்போல், உமது வரவை எதிர் நோக்கித் தவம் இருப்பதாக தேவர்கள் சொன்னார்கள். துர்க்கையின் முன் ஜென்மத்தை பற்றிய தேவர்கள் சொன்னதும் கல்லுக்கு வாழ்வு தந்த நாயகன், சொல்லுக்கு உலகாளும் தூயவன், புவிமீது தர்மயுகம் விதைக்க வந்தவர் தரணி எல்லாம் ஒரு குடைக்குள் ஆளவந்த மாலவன், மனமிரங்கி எக்காளதுர்க்கையிடம் கூறுகிறார்.

எமனை போன்ற சக்தி வாய்ந்த பெண்ணே! உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். வம்புக்கே பெயர் பெற்ற வல்லமை பொருந்திய துர்க்கை, மாயப் பெருமாளிடம் வரம் கேட்டாள். நாராயண பரம்பொருளே! என் கல்லுரு போக்கி நல்லுருதந்த மெய் சுடரே! நான் என்னுடைய முன்ஜென்ம பிறவியில் வாழும்போது, அய்யா நீர் மிகப்பெரிய சாதனையில் கந்தன் அவதாரம் எடுத்து, சூரனை அழித்த கிரேதாயுகத்தில், செந்திலாண்டவரோடு யுத்தம் செய்யும்போது துணையாயிருந்த செந்திரிஷிக்கு[அக்னி ரிஷிக்கு] மனைவியாயிருந்தேன்.

அந்த காலத்தில் நான் மிகவும் பேரழகியாவும், நல்ல ஒழுக்கம் உடையவராகவும், நீதி நேர்மையோடு, என் கணவராகிய செந்திரிஷியோடு சந்தோசமாக வாழ்க்கை நடத்தி இணைபிரியாத தம்பதிகளாக இருந்தோம். அப்போது என்னுடைய பேரழகு கண்டு எமன் என் மீது காம இச்சை கொண்டு மயங்கிப் போனான். அந்த மயக்கத்தை தவிர்க்க முடியாத எமன், என் மீது கெட்ட எண்ணம் கொண்டு என்னை அடைவதற்கு முடியாமல் அதற்கு தடையாய் இருந்த என் கணவனான செந்திரிஷியை கொன்று விட்டான். என் கணவனை கொன்று என்னுடைய வாழ்க்கையை அழித்து என்னை தனியாக தவிக்க விட்டான். எனவே எமனே அழித்துவிடவேண்டும் என்று சிவனை நோக்கி கடுமையாக தவம் இருந்தேன்.

நான் செய்த கடும் தவத்தால் சிவபெருமான் என்முன் தோன்றி மனம் தளராமல் பிடிவாதமாக தவம் புரிகின்றாய், என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். நான் எனது கணவனை கொன்ற எமனை பழிவாங்க வேண்டும் என்று பழிவாங்கும் வரம் தர வேண்டுமென்று பணிந்தேன். ஆனால் சிவபெருமான் என் தவத்தை ஏற்று வரம் தர மறுத்து என்னுடைய பிடிவாதக் குணத்தை மாற்றி கொள்ளும்படி சொன்னார். ஏனென்றால் இப்போது எமன் அழிந்துவிட்டால் தேசத்தில் பாதிப்புகள் ஏற்படும்போது பூமியில் மக்கள் தொகை பெருகி பூலோகம் சுமை தாங்கி கொள்ள முடியாது போய்விடும். பூமியின் பாரம் அதிகமாகி போகும். ஆகையால் பெண்மணியே சிறிது காலம் பொறுத்து கொள்ளுமாறும் நடந்ததை மறந்து மனதை பக்குவ படுத்தி கொண்டு எமனோடு வாழும்படி என்னிடம் சொன்னார்.

ஆகையால் அய்யா என் கணவர் செந்திரிஷியை எமன் கொன்றதால் என்னால் அதை மறந்து, அவனோடு வாழ மனமில்லாமல் நேரம் தவறாமல் சிவபெருமானை நினைத்து வருந்தி அவன் எதிரியாக இருந்து அவனை அழிக்க வரம் கேட்டேன். அதனால் சிவபெருமான் என் மேல் கோபம் கொண்டு அவர் பேச்சை நான் மதிக்கவில்லை என்று எனக்கு கடும் சாபத்தை தந்தார். அந்த சாபத்தால் என் உடல் ஒழுங்கில்லாமல் தேகம் மிகப் பெரிய மலையாக மாறி விட்டது. என் நிலையை கண்ட சிவ பெருமான் என்னிடம், என் பேச்சை கேட்காத காரணத்தால் இந்நிலை பெற்றாய்.

இனி அவதார புருஷன் ஆகிய நாராயணர் வரும் வரை கற்சிலையாக பூமியில் படுத்த நிலையில் இருந்துகொண்டு, உயிர்களைப் பறித்து செல்லும் எமனை எவ்வாறு அழிக்கலாம் என்று உன் திறமையை பயன்படுத்தி எப்படி வேண்டுமானாலும் வரம் வேண்டிகொள் என்று சினம் கொண்ட சிவன் பேசிவிட்டார். திரேதாயுகத்திலிருந்தே குன்றுப்போல் கிடக்கின்றேன் என்றாள் எக்காளதுர்க்கை.அவ்வாறு சாபம் பெற்ற நான் உம்முடைய புனிதமான திருப்பாத மகிமையால் சாபம் நீங்கி விமோசனம் பெற்று புதியவளாக மறுபிறவி எடுத்தேன் மாயபெருமாளே! ஆகையால் அய்யா வீணாக என் கணவனுடைய உயிரைப் பறித்த அந்த எமனையும், அவனுடைய வம்மிசத்தையும் இல்லாமல் செய்து அழித்திட சக்தி வாய்ந்த வரத்தை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்.

அப்போது மாயப் பெருமாள் பொறுமையோடு அவளிடம் பெண்மணியே! இப்போது நான் சொல்வதை கவனமாக கேட்பாயாக! எமனை கொல்ல வேண்டும் என்றால் மீண்டும் ஒருமுறை வலிமையான தவம் செய்ய

வேண்டும். கலியுகம் முடிந்து மரணமில்லாத சக்தி வாய்ந்த தருமயுகம் வரும்போது உன்னுடைய தவத்தின் பலன் நிறைவேறும். இவன் செய்த குற்றம் உண்மையாகி தண்டனைகுரியதாக இருந்தால் நிச்சயம் அவனுக்கு தண்டனையாக அழிவு உண்டு என்று, திருமால் சொன்னதைக்கேட்ட தான் செய்த தவம் வெற்றியடைய வேண்டும் என்கின்ற நினைவோடு இப்போது எனக்கு அருள்புரிய வேண்டுமென்று பெருமானின் திருவடிகளைப் பணிந்து அனுமதி பெற்றாள்.

அவள் நினைத்ததை சாதிக்க பிடிவாதமாய் மனம் தளராமல் மீண்டும் தவம் செய்து எமனை கொல்ல வேண்டும் என்ற கொலைவெறியில் இரக்கமற்ற நிலையில் கடும் தவமிருந்தாள். வன்மையான முறையில் இதயத்தின் கவலையால் ஊறிப்போன எக்காளதுர்க்கை (சுவாகா தேவி) அவள் கணவனை கொன்ற எமனை பழித்தீர்க்க நாராயணரை மனதில் நினைத்து உள்ளத்தை ஒரே நிலைப்படுத்தித் தவம் செய்தாள். சூரிய ஒளி பிரகாசிப்பதுப்போல் ஒளி கொண்ட திருமால் மீண்டும் அவர் திரும்பி நடந்து வந்து கொண்டிருந்த போது அன்பான மனதில் பெருமிதம் கொண்ட வராக சந்தோஷத்துடன் புனிதமான மலையாகிய பொன் மலையை கண்டார்.

## DAY 20

வானோர்க்கு அருளல்

தெய்வலோகத் திலுள்ள தேவாதி தேவர்களும்
வைகுண்ட லோகமதில் வாழுகின்ற தர்மிகளும்
சிவலோகம் வாழும் சிட்டர்முதல் வானவரும்
தவமான வேதச் சதுர்மறையோன் தன்னுகத்தில்
கருதி ரிஷிமுதலாய்க் கட்டாக நாற்புவியில்
இருக்கின்ற வானவர்கள் எல்லோரு மெண்ணமுற்று
மான வரம்பு மகிமைகெட் டேகுமுன்னே
வான மதுவிட்டு வடகயிலை போவோம்நாம்
வந்தார்கள் அந்த வடகயிலை வந்திருந்து
சந்துமிகப்பேசி தானுரைப்பார் அப்போது
கயிலை வரம்பழிந்து கட்டுமிகத் தப்பினதால்
அகில மழிவதற்கு அடையாள மித்தனைதான்
அல்லாமல் குறோணிமுதல் அந்நீசக் கலியன்வரை
எல்லாஞ் சரியாகி எவ்வோர்க ளானாலும்
கல்லாத பொல்லாக் கலியனுட மாய்கையினால்
நல்லோராய் மேற்பிறந்து நளினமுற்று வாழ்வாரென்று
வேதா கணக்கில் விதித்துரைத்தார் முன்னாளில்
நாதாந்த வேதம் நழுவிமிகப் போகாதே
சீதாஉன்னுடைய சீர்பாதஞ் சேரவென்று
நாதா வைகுந்தா நாராயணாவெனவே
இப்படியே தேவர் எண்ணமுற்று வாடினரே
முப்படியே யுள்ள ஊழிவி தியெனவே
கடைச்சாதி யான கலிச்சாதி யானதிலே
படையாமல் நம்முடைய பங்குவம்மி சத்தோராய்

ஒண்ணா மதுகுலந்தான் உயர்தெய்வச் சான்றோரில்
வண்ணமுள்ள வேதா மனுவாய்ப் பிறவிசெய்ய
ஒன்றாக நாமளெல்லாம் உவந்துதவஞ் செய்யவென்று
நின்றார் தவத்தில் நிறைவோன் பதம்போற்றி
தங்கள் குலமான சான்றோர்கள் தங்குலத்தில்
எங்கள் தமைப்பிறவி இப்போசெய்ய வேணுமென்று
பிறந்திறந்த போதும் பின்னுமந் தப்பிதிரில்
மறந்திடா வண்ணம் மனுவி லுதித்திடவும்
ஆதிமகா மூலத்து ஆதிநா ராயணரே
நாதியா யெங்களையும் நாடிமிக வந்தெடுத்து
எங்கள் துயரம் எல்லா மவர்மாற்றி
சங்கடங்க ளில்லாத தர்ம பதியருளிக்
கிரீடமுஞ் செங்கோலும் கீர்த்தியுள்ள முத்திரியும்
வீரியமாய்த் தந்து மேலோக மும்கிழ
எண்ணுஞ் சாகாமல் இருக்கும் பதவிதந்து
மண்விண் புகழ வரந்தாரு மென்றுசொல்லி
நின்றா ரதையும் நெடியோன தையறிந்து
கொண்டாடி யேதெனவே கூறினார் தேவருடன்
நின்ற நினைவை நெடுமால் தனக்குரைக்க
அன்றந்தத் தேவருக்கு அலையாத புத்திசொல்லி
நல்லதுதான் தேவர்களே நாடுவது காரியந்தான்
வல்ல தவசு மனம்பிரியாச் செய்யுமென்றார்

விளக்கம்:
வானோர்க்கு அருளல்

பொன் மலையை கண்ட ஆதிநாராயணர், அம்மலையின் பசுமை கைலாயம் போல் காணப்பட்ட அழகுக் கண்டு அவ்வழியே வரும் போது தேவலோகத்தை சார்ந்த முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களும், ஒன்று சேர்ந்து கூட்டமாக கூடி வரும் வைகுண்ட வாசிகளும், சிவலோகத்தில் வாழ்கின்றவர்கள் முதல் பரலோகத்தார்களும், வானலோக ரிஷிகள் வரை சேர்ந்து கொண்டார்கள். மற்றும் தவலோகமாக விளங்குகின்ற வேத சாஸ்திரத்தில் வல்லவராகிய பிரம்ம லோகத்தில் உள்ளவர்களும், சேர்ந்து நான்கு லோக வாசிகளும் ஒரே நோக்கமாக தெய்வத் தன்மை சீர் கெட்டு , அதன் பெருமை அழிவதற்கு முன்பாக எச்சரிக்கையோடு சிவபெருமான் இருக்கின்ற கைலாயம் சென்று விடுவோம் என்று வேகமாக நடந்தார்கள்.

கலியன் கைலாயம் சென்று பரம சிவனிடம் வரம்பெற்றதால் கட்டுப்பாடுகள் எல்லாம் தவறிப்போனது. ஆகையால் தான் அகில உலகமும் சீர்குலைந்து அழிவதற்கு காரணமானது. மேலும் குறோணியாகிய அரக்கன் முதல் பாவியாகிய கலியன் வரை , ஞான அறிவு இல்லாத தீய எண்ணம் கொண்டு வஞ்சமாக கலியனின் , மாய வலையில் விழுந்து, மீண்டும் நல்லவர்களாய் பிறவி எடுத்து பெருமையோடும் , அன்போடும் தர்மயுகம் வாழ்வீர்கள் என்று, வேத ஆகமங்களின் விதிமுறைகளாய் பிரம்மா ஆதிக்காலத்திலே எழுதி வைத்துள்ளார். இந்த நான்கு லோகத்தில்

உள்ளவர்களுக்கும் எழுதி வைத்த நெறிகள் தவறி போய் விடக்கூடாது என்று நினைத்து நல்லதொரு முடிவுக்கு வர வேண்டும் என்றும் எல்லோரும் ஒரு மனதாய் வருந்தி இருந்தார்கள்.

முன்ஜென்மத்தில் எழுதப்பட்ட ஊழ்வினையின் விதிப்படியே எல்லாம் நடக்கிறது என்றுத் தேவர்கள் நாராயணரிடம் சொன்னார்கள், ஏழாவது யுகமாகிய கலியுகத்தை மிகவும் கீழ்த்தரமாக நடத்துகின்ற கலியனுடைய இனத்தில், இனி நாங்கள் பிறக்காமல் உயர்வானத் தன்மையுடைய, மாற்றமில்லா சிறப்புடையவர்களாய் முதலுரிமைப் பெற்ற குலமாகிய, தெய்வ கன்னிமார் பெற்றெடுத்த சான்றோர்கள் வம்சத்தில் பிறவி செய்ய வேண்டும் என்று பிரம்மாவிடம் தேவர்கள் சொன்னார்கள்.

அதற்கு ஏற்றபடி நாங்கள் உயர்ந்த தவத்தை செய்வோம் என்று தவம் மேற்கொண்டார்கள். நிறைவாக திருமால் திருவடி போற்றித் தவம் செய்தார்கள். அய்யா நாராயணரே! உம்முடைய பிள்ளைகளாகிய சான்றோர்களின் குலத்தில் எங்களை இப்போது பிறவி செய்துவிடுங்கள் என்று வேண்டிக்கொண்டார்கள். அய்யா! அப்படியே நாங்கள் சான்றோர் குலத்தில் பிறந்து இறந்த பிறகும், மறுபிறவி எடுக்க வேண்டிய நிலை வந்து விட்டால் மீண்டும் அதே சான்றோர்களின் குலத்தில் எங்களை பிறவி செய்ய வேண்டும் என்று மன்றாடினார்கள்.

ஆதிசேடன் மேல் பள்ளி கொண்டிருந்த அனந்த சயனமே! அகில உலகத்திற்கும் மூலப்பொருளான ஆதிநாராயண பரம்பொருளே! அனாதைப் போல் நிற்கின்ற எங்களை உம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு விருப்பத்தோடு ஆதரித்து அன்பாய் அணைத்துக் கொள்ளும் அய்யா! அதேபோல் எங்கள் துன்பம் துயரம் முன்வினை பாவம் போக்கி விட வேண்டும். எங்கள் குற்றங்குறைகளை பொறுத்து எங்களுக்கு அருள் புரிய வேண்டும் அய்யா.

கர்ம வினைகள் இல்லாத சொர்க்கலோக பூமியாகிய தர்மயுக பதவியை அருள வேண்டும் அய்யா! எங்களை உம்முடைய பிள்ளைகள் என்று சொல்லுவதற்கு அடையாளமாக முடி சூடி ஆளும் பட்டமும், கையில் செங்கோலும், வீடு பேறு அடைய முடியும் தந்து தர்மயுகம் ஆளும் மகாசக்தியை உலகம் போற்றும் படியாக தந்து மேலோகத்திற்கு சென்று மகிழும் படியான மரணமில்லாத வாழ்க்கை வாழ ஒளிமயமான பிரகாசத்தை தந்தருளும். மற்றும் பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழும்படியாய் உள்ள வரங்களைத் தர வேண்டும் என்று பொன்மலையில் உயர்வான தவம் புரிந்தார்கள்.

இதை திருமால் ஞான அறிவால் உணர்ந்து மனதில் மிகவும் ஆனந்தம் கொண்டு எல்லாம் நிறைந்த பரம்பொருள் ஒன்றும் அறியாதவர் போல் வானவர்களிடம் உங்கள் தவத்தின் நோக்கம் என்ன என்று கேட்டார். தேவர்கள் தவத்தின் காரணங்கள் எல்லாவற்றையும் திருமாலுடன் விவரமாக கூறினார்கள். அவர்கள் சொன்ன காரணங்கள் கேட்ட திருமால் முனிவர்களே உங்கள் தவம் நிறைவேறும். நீங்கள் எடுத்த இந்த முடிவு நல்லதுதான் தேவர்களே! நீங்கள் செய்யும் வலிமையான தவம் மிகவும் மேலானது. மனதை ஒருநிலைப்படுத்தி தவம் செய்யுங்கள் என்று அய்யா நாராயணர் வானோர்க்கு அருள்புரிந்தார்.

அப்படியே வானோர்க்கு அருள்பாலித்து விட்டு திருமால் அங்கிருந்து புறப்பட்டு திருவனந்தபுரம் செல்லும் போது வழியில் மற்றுமொரு அற்புதத்தை பார்கிறார் . சாபம் பெற்ற வரையும் அல்லல்பட்டு அவதிப்படுவோரையும் கண்டு ஆறுதல் சொல்லி அரவணைத்து காப்பாற்றும் அய்யா நாராயணர் அன்பு கொண்டவர் அல்லவா? அந்த ஆதி வைகுண்டர்.

## DAY 21

பசுவும் பெண்ணும்

அச்சுதரும் தானடந்து அனந்தபுர மேகுகையில்
பச்சுடம்பாய் நின்ற பசுவுமோ ரேந்திழையும்
நாராய ணாவெனவே நாடித் தவமிருக்கச்
சீராய்த் திருமால் சிறந்ததவங் கண்டருளி
ஏது பசுவே ஏந்திழையே வுங்களுக்கு
நேதுவில்லா வண்ணம் நெடுந்தவசு பண்ணினதேன்
அப்போ துபசுவும் அச்சுதருக் கேதுரைக்கும்
இப்போது மாயவரே என்னுடைய புத்திரனைக்
கொல்லும் படியாய்க் கோதை யிவள்தவசு
செல்லும் படியாய்ச் சிந்தை மிகக்கலங்கி
புத்திரனு மாண்டால் பிள்ளையா யென்றனக்கு
உத்திரக் கன்றாய் உடன்பிறக்க வேணுமென்று
நின்றேன் தவசு நீலவண்ண ருண்டெனவே
என்றே பசுவும் ஈதுரைக்க ஏந்திழையும்
நன்றாகப் பார்த்து நாரா யணருரைப்பார்
ஒண்டொடியே உன்றன் உற்றவழக் கேவுரைநீ
அப்போது பெண்கொடியும் அச்சுதரைத் தானோக்கிச்
செப்போடு வொத்த தேவியுஞ் சொல்லலுற்றாள்
அய்யாவே யெனக்கு ஆளான வீரனைப்போல்
மெய்யா யொருமதலை விமல னருளினர்காண்
மதலை வளர்ந்து வயதுபதினா லாகுகையில்
குதலை மொழிகேட்டுக் கொண்டாடி நான்மகிழ்ந்து
இருக்குமந் தநாளில் இப்பசுவின் புத்தினர்தான்
உருக்கமுட னென்பேரில் உள்ளாசை கொண்டான்காண்
அதட்டினே னானதற்கு ஆகட் டெனவுறுக்கி
மதட்டி மதலைதனை மாளவைத்தான் மாபாவி
ஆனதி னாலடியாள் அறமெலிந்து தான்வாடி
போனேன் பிரமா பூசாந்திரக் கணக்கில்
உள்ள விதியோ ஊழி விதிப்படியோ
கள்ளக் கணக்கன் கண்மாயமோ எனவே
பார்த்தேன் மகன்தான் படவிதி யங்குமில்லை
ஆர்த்தேன் நான்கோபம் அக்கினிபோ லெமீறி
சிவனுக் கபயம் செவியறிய விட்டேனான்
இவளுக்கு வேண்டி ஏதுசெய்வோ மென்றுசொல்லி

ஒருவரு மென்னுடைய ஊழிவிதி கேட்கவில்லை
வருவது வரட்டெனவே வந்தே தவசுநின்று
மகன்பழிதான் வாங்க மாயவரே உம்மருளை
அகமிருத்தி நானும் அருந்தவசு செய்தேனான்
என்றுரைக்க ஏந்திழையும் எம்பெருமா ளேதுரைப்பார்
நன்றுநன்று பெண்கொடியே நல்ல தவம்புரிந்தால்
நினைத்த படியே நிறைவேறு மென்றுரைத்துக்
கனத்த பசுவேநீ கட்டாய்த் தவமிருந்தால்
உன்தனக்குச் சித்திரனும் ஒருகன்றாய்த் தான்பிறந்து
என்றன் மகனார்க்கு ஏவல்செய்ய வைத்திடுவேன்
என்று பசுவதுக்கும் ஏந்திழைக்குந் தானுரைத்து
அன்று திருவனந்தம் அவர்நோக்கித் தானடந்து

சேத்திர பாலனுக்குச் சொன்னது

கேத்திரனும் வேதியனும் கிருஷ்ண ரடிபணிந்து
மூர்த்திகளுங் காணாத முதலே முதற்பொருளே
உன்மகவாய் வந்துதித்த உயர்ந்த குலச்சான்றோர்
தன்கமவோ ரங்கே தவித்துமுகம் வாடிருக்க
நீசனுட குடியில் நீர்போகக் காரியமோ
தேசமெல்லாம் நீசனுட செய்திகேட் டேயிருந்தும்
போவதோ தேவரீர் பொல்லா தவன்குடியில்
தேவரீ ரும்முடைய சிந்தையெள் போலறியேன்
என்றுரைக்கக் கேத்திரனும் ஏதுரைப்பா ரெம்பெருமாள்
நன்றுநன்று கேத்திரனே நான்சொல்லக் கேட்டிடுநீ
சான்றோர்க் குபகாரம் தான்செய்யு முன்னாகப்
பொன்றுகலி நீசனுக்குப் புத்திசொல்ல வேணுமென்றும்
அல்லாமற் குறோணி அவன்மாய யிவன்வரையும்
எல்லாந்தான் சொல்லுக்கு இடறுவை யாதபடி
இருந்துபுத்தி இவன்தனக்கு யான் சொல்லாதிருந்தால்
மறுத்து உரைப்பான் மன்றீரேழும் அறிய
சான்றோர்கள் தம்மிடத்தில் சாங்கமாய்ப் போயிருந்து
ஆன்றோர்தா னெங்களையும் அழியவைத்தீ ரென்றுரைப்பான்
ஆனதால் நானும் அதற்கிடைகள் வையாமல்
ஈன முறுநீசன் இடம்போறே னென்றுரைத்தார்
அப்போது கத்திரனும் அன்பா யகமகிழ்ந்து
செப்போடு வொத்த திருமாலைத் தெண்டனிட்டு
மாயனே உன்றன் மகிமையதை யாரறிவார்
ஆயனே வும்முடைய அளவறியக் கூடாது
என்று கேத்திரனும் இயம்புவான் பின்னுமொன்று
மன்று தனையளந்த மாயப் பெருமாளே
பூசை புனக்காரம் பெரியதீ பத்துடனே
நீச னுமக்கு நினைத்துநிதஞ் செய்வானே
எந்தனக் கென்ன இலக்குக் குறியெனவே
சிந்தை தெளிந்து செப்பி விடைதாரும்
என்றுரைக்கக் கேத்திரனும் ஏதுரைப்பா ரெம்பெருமாள்

இன்றுநீ கேட்டதற்கு இயல்புரைக் கக்கேளு
கலிநீசன் மாநிலத்தில் கால்வைத்து அன்றுமுதல்
சலிவாகி யென்மேனி தண்ணீ ரறியாது
எண்ணை யறியேன் இலட்சுமியை நானறியேன்
வண்ணத் துகிலறியேன் மறுபுடவை தானறியேன்
பூசை யறியேன் பொசிப்பறியேன் பூவறியேன்
ஆசை யறியேன் அக்கக் கிளையறியேன்
மெத்தை யறியேன் மேவுஞ் சொகுசறியேன்
ஒற்றைபோ லானேன் உட்கார்ந் திருக்கறியேன்
மேடை யறியேன் மெல்லியரை நானறியேன்
வாடையறியேன் மகிழுஞ் சிரிப்பறியேன்
தோழமையை நானறியேன் சுருதி மொழியறியேன்
ஆளவை குண்டம் அரசுமே டையறியேன்
இத்தனைகள் தானறியாது எண்ணமது நானறியேன்
புத்தியுள்ள கேத்திரனே பூசைபூ ஏற்பதெல்லாம்
மாயக் கலியறுத்து வாய்த்த நாடாள்வதர்க்கு
ஞாயமுள்ள பட்டம் நான்சூட்டித் தர்மமதாய்
பாராளபஞ்சவரை பக்கம் வைத்துநானிருந்து
இராச்சியத்தை யாளவைத்து இத்தனையு மேற்பதல்லால்
அதற்குமுன் பூசை புனக்காரமுத லேற்பதில்லை
இதற்குமுன் னேற்பவர்கள் எனக்காகா தேபோவார்
என்றந்தக் கேத்திரனுக்கு இத்தனையுந் தான்கூறி
அன்றந்த நீசன் அவ்வூரி லெம்பெருமாள்

விளக்கம்:
பசுவும் ஏந்திழையும்

கருணைக்கடலான அய்யா கண்ட இடங்களிலெல்லாம் உள்ள ஒவ்வொருவரின் அரும் சாபங்களையும், பெரும் துன்பங்களையும் போக்கி அவர்களுக்கு சாபவிமோசனம் கொடுத்த துன்ப துயரங்களுக்கு ஆறுதல் மொழியும் அன்பால் உரைத்து திருவனந்தபுரம் சென்று கொண்டிருக்கிறப்போது, அங்கே குழந்தை போல் நின்று கொண்டிருந்த பசுவையும் குழந்தையை பெற்றவளைப் போல் நிற்கும் ஒரு பெண்ணையும் கண்டார். ஆனால் இருவரும் தனித்தனியாக தவநிலையில் அமர்ந்திருந்தார்கள். நாராயணரே! மனமிரங்கும் என்று தன்னை மறந்த நிலையில் தவத்தில் இருந்தாள்.

நல்லெண்ணம் கொண்ட திருமால் சிறப்பு வாய்ந்த அவருடைய தவத்தை தன் சக்தியால் அறிந்து ஏக்கத்தோடு தவமிருக்கும் பசுவே! பெண்மணியே! நீங்கள் இருவரும் தொடர்பற்றவர்களாய் தனித்தனியே நீண்ட தவத்தில் நிற்பதன் நோக்கம் என்ன? என்று கேட்டார். திருமால் கேட்டவுடன் பசுவானது ஏக்கத்துடன் மாயப் பெருமானே! நான் பெற்ற என் அன்பு மகனை கொன்று விட வேண்டும் என்று பிடிவாதமாக இந்த பெண் தான் தவம் இருக்கிறாள். இவளுடைய தவம் நிறைவேறி என் மகன் சித்திர புத்திரன் இறந்து விட்டால், மறுபடியும் என் மகன் எனக்கு பிள்ளையாக என் வயிற்றில் பிறக்க செய்ய

வேண்டும் என்று நான் தவம் செய்கிறேன் என்றது பசு. காயாம் பூ மேனி கொண்ட கரியமால் அருள் புரிவார் என்று நம்பிக்கையோடு பசு சொல்லி ஏங்கியது.

பின்பக்கத்தில் நின்ற பெண்ணிடம் நாராயணர் பெண்மணியே! உன்னுடைய தவத்தின் நோக்கம் என்னவென்று சொல் என்று கேட்டார். அதற்கு அந்த பெண் நாராயணரே! அய்யா ஆதிமூலமே! எனக்கு நல்ல வீரம் கொண்ட ஒரு மகனை சிவபெருமான் எனக்கு வரமாகத் தந்து அருள்புரிந்தார். அந்த மகனின் வயது பதினான்கு ஆகும் போது பக்கத்தில் நிற்கின்ற பசுவின் மகனாகிய சித்திரபுத்திரன் கொன்றுவிட்டான்.

காரணம் சித்திரபுத்திரன் என் அழகில் மயங்கி என்னை கூடும் நோக்கத்தில் ஆசைகொண்டு நெருங்கினான். நான் அதற்கு சம்மதம் தர மறுத்தேன். அதற்கு அவன் என்னிடம் உன்னைப் பழி வாங்குவேன் என்று சவால் விட்டான். என் விருப்பத்தை ஏற்று கொள்ளாத உன்னை என்னப் பாடுப்படுத்தி வேதனைப் பட வைக்கிறேன் பார் என்று கூறி ,என்னை பழி வாங்கும் விதமாக என் ஆசை மகனைக் கொன்று விட்டான் சுவாமி!. இரக்கமில்லாத பாவி என் மகனை கொன்றதால் நான் தனிமையாகி என் மகனின் பிரிவைத் தாங்க முடியாமல் வேதனைப்பட்டு உடல் மெலிந்து துடித்து போனேன்.

என் மகன் இறந்ததால் அந்த கவலையிலிருந்து மீள முடியாமல், இப்படி நடந்தது ஏன் என்று அறிய பிரம்மதேவரின் பூலோகப் பிறப்பு, இறப்பு ஆகமத்தில் என் மகன் இப்படி சாவதற்கு விதி இருக்கிறதா? எனப் பார்த்து வர பிரம்மலோகம் சென்றேன். ஏனென்றால் இந்த இறப்பு கணக்கரின் கவனக்குறைவால் நடந்ததா? அல்லது தந்திரமாக மகனை கொல்ல செயல்படுத்தப்பட்ட சதி செயலா என்று தெரிந்து கொள்ள பிரம்மலோகம் சென்று தேடி பார்த்தேன். அப்படி நான் பார்த்ததில் என் மகன் இறக்க எந்த ஒரு விதியும் இல்லை.

ஆகவே நான் கோபம் கொண்டு கொழுந்து விட்டு எரிகின்ற தீயை போல என் கட்டுப்பாட்டை இழந்து சிவபெருமானுக்கு கேட்கும்படியாக கூக்குரலிட்டு அழுது மன்றாடினேன். ஒருவர் கூட என் நிலையை புரிந்து என் கவலைக்கு ஆறுதல் சொல்லவில்லை. இரக்கம் காட்டவில்லை.

ஆகையால் துணிச்சலுடன் கடுமையான தவம் செய்து என் மகனை கொன்றவனை பழிவாங்க நீர்தான் அருள் புரியவேண்டும் அய்யா உம்மை நான் என் அகத்திலே நிறுத்தி இடைவிடாது நினைத்திருந்தேன் என்று ஏக்கத்தோடு எடுத்துரைத்தாள். அதை கேட்டு நடப்பது எல்லாம் நன்மைக்குதான் பெண்மணியே! மனம் தளராமல் இறை நம்பிக்கையோடு தான் எண்ணியக் காரியம் யாவும் நடக்கும். திடமான மனதுடன் தவம் செய் என்று நல்லறிவு புகட்டினார்.

அடுத்ததாக பசுவிடம் அய்யா கூறினார் , பசுவே நீயும் ஒழுங்கான முறையில் மனதை கட்டுப்படுத்தி இடைவிடாமல் தவம் செய் .உன்னுடைய மகனான சித்திர புத்திரனும் உன்னுடைய வயிற்றில் கன்றுக்குட்டியாக பிறப்பான். அப்படி கன்றுக்குட்டியாக பிறந்து என்னுடைய சான்றோர் குல மக்களுக்கு நல்ல முறையில் சேவகம் செய்யும் படியாக நான் வழி செய்கிறேன் என்றார்.

இப்படியாக யாருக்கும் எந்த பாதிப்பும் வராத முறையில் நடுநிலையாக நின்றுப் பசுவிற்கும், பெண்மணிக்கும் மீண்டும் தவம் செய்யக் கூறிவிட்டு அங்கிருந்து அனந்த புரம் நோக்கி வந்தார்.

## சேத்திரபாலனுக்குச் சொன்னது

அய்யா நாராயணர் பசுவுக்கும், பெண்ணுக்கும், அருள் வாக்களித்துவிட்டு திருவனந்தபுரம் நோக்கி சென்றார். அப்போது சேத்திரபாலனும் வேத அந்தணரும் பரந்தாமனின் மலர் பாதங்களை வணங்கி, பணிவோடு நாராயணராக அவதரித்த ஆதிமூலம் பொருளே! உம்முடைய மக்களாக பூலோகத்தில் பிறந்த சான்றோர் குல மக்கள் கொடுமைகள் தாங்க முடியாமல் வாடி இருக்கிறார்கள்.

அங்கே அவர்கள் அப்படி இருக்க தாங்கள் இப்போது கலியனுடைய நாடாகிய கேரள நாட்டிற்கு நீங்கள் செல்ல காரணம் என்ன? ஐம்பத்தாறு தேசத்து மக்களும் கலியனுடைய கொடிய செயல்களை தெரிந்து கொண்ட பிறகு அங்கு செல்ல என்ன காரணம்? தங்களது பயணத்தை பற்றி எங்களால் எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லையே என்று சிரித்தவாறு கேட்க, எம்பெருமான் நாராயணர் கூறுகிறார்,

சேத்திரபாலரே! சான்றோர் குல மக்களுக்கு நல்ல காரியம் செய்வதற்கு முன்பாக, அழிவைத் தேடி போய் கொண்டிருக்கிற கலியனுக்கு நான் சில அறிவுரைகள் சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல குறோணி உலகத்தில் தோன்றி அவனை அழித்தது முதல், கலியுகம் தோன்றியது வரையுள்ள அனைத்து சம்பவங்களுக்கும் நான் காரணம் கிடையாது. நீசர்களுடைய செயலால் அவர்களுக்கு அழிவு வரும். அப்போது சான்றோர்களுக்கு உதவி செய்து ,நீசர்களை நான் திட்டமிட்டு அழித்து விட்டதாக என்னைக் குறை கூறுவார்கள்.

ஆகையால் என் மீது பழி சொற்கள் வராத முறையில் சான்றோர்களுக்கும், பழி சொற்கள் வராத முறையிலும் இரக்கமில்லாத நீசனிடம் உண்மையான விவரங்களைச் சொல்லப் போகிறேன் என்றார். அய்யா நாராயணர் சொன்னதும் சேத்திரபாலன் நிறை மனதோடு திருமாலை வணங்கி, மாயப் பெருமானே! அளவின் வல்லமையை யாரால் அறியமுடியும். ஆதியும். அந்தமுமாய் இருக்கின்ற ஆதி பரம்பொருளே! தங்களின் ஞான அறிவை யாராலும் கணக்கிட முடியாது என்று பதில் சொன்னார். மீண்டும் நாராயணரிடம் பெருமையோடு பூலோகத்தைத் திருப்பாதங்களால் முக்கால் அடியாக அளந்த விஸ்வ ரூப வாமன வடிவே! மாயபெருமாளே! நீர் அங்குச் சென்றால் , கலிநீசன் உமக்கு பூஜை வழிபாடுகள் செய்வானே!

உங்களுக்கு பணிவிடைகள் செய்வதாக நினைத்து தினமும் வழிபாடுகள் செய்தால் இதுவரையிலும் நாங்கள் உமக்கு செய்த பணிவிடைகள் அடையாளம் தெரியாமல் போய்விடுமே! அப்படி ஆகாமல் தெளிவான நல்ல முடிவு எடுத்து எங்களை காத்தருள வேண்டுமென்று சேத்திரன் கூறினான். இவ்வாறு தன்னுடைய நிலையைக் கூறிய சேத்திரபாலனுக்கு, அய்யா! ஆறுதலாக பதில் சொல்வார், சேத்திரனே! கலிநீசன் தோன்றிய காலம் முதல் இன்று வரை

என்னுடைய மனம் மிகவும் களைப்படைந்து போய் விட்டதால், என் தங்கதிருமேனியை நான் நீராட்டவில்லை. என் அன்புக்குரிய லட்சுமியை காணவில்லை. என் உடையை மாற்றி வேறு உடைத் தரிக்கவும் இல்லை. அன்போடு நடக்கின்ற பணிவிடைகளையும் ஏற்கவில்லை.

பஞ்சணையில் உறங்கும் நிலையை மறந்தேன். ராஜபோகம் துறந்தேன். ராஜ சிம்மாசனத்தை மறந்தேன். பணிவிடைகள் செய்கின்ற தெய்வலோக பெண்களை மறந்து, தேவர்களோடு ஆடிப்பாடும் ஆனந்தமும் இழந்தேன். பாடி பஜனை செய்யும் இனிய பக்தி கானங்களையும் , குரல் இனிமையையும் நான் ரசிக்கவில்லை. வைகுண்ட லோகத்தை மறந்தது போல் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்கிற சிந்தனையே எனக்கு இல்லாமல் போய்விட்டது.

இனிமேலும் நான் பூ மாலைகளையும் பூஜை வழிபாடுகளையும், இன்பங்களையும் ஏற்றுக் கொள்வது எதனால் என்றால், மாய வேலைகளை செய்து கொண்டிருக்கும் கலியனை தானே அழித்து தர்ம யுகம் படைக்க வேண்டும் என்பதற்காகவே! நீசக் கலியழித்து நியாயமான நல்ல செயல்களைச் செய்து முடிசூடும் பெருமாள் பட்டம் சூட்டி சான்றோர் மக்களோடு தர்மயுகம் ஆள்வதற்காகத் தான்.

அதுவரையிலும் பூஜைகளையும் பூ மாலைகளையும் நான் ஏற்க மாட்டேன். நான் எண்ணிய காரியத்தை ஈடேற்றாமல் எந்த விதமான இன்பங்களையும் விரும்பமாட்டேன். தர்மம் தோன்றாமல் எனக்கு நிம்மதி இல்லை. அப்படியே வேறு யாராவது பூஜைகள், பூ மாலைகளையும் ஏற்று கொண்டால் அவர்கள் எனக்கு எதிரியாவர்கள் என்று தெளிவான முறையில் சேத்திர பாலனுக்கு மாய பெருமாள் கூறினார்.

************

## DAY 22

புலச்சிக்கு அருளியது

நீச னிடத்தில் நீலவண்ணர் வந்ததுதான்
தேச மறிய செச்சை புலச்சிகண்டு
ஒளித்தா ரொருஇடத்தில் ஊர்தேச முமறிய
விழித்தாள் புலச்சி விதமறிந் தெல்லோரும்
ஸ்ரீரங்கமீதிருந்து சிறந்து வந்த வேதியனும்
தீவாங்கி புலச்சியிடம் தீபாராதனைக் கொடுக்க
நீச னறிந்து நெருங்கமணி மேடைவைத்து
வீசை முறுக்கி விசையாக அந்நீசன்
கோவில் சிவாலயங்கள் கொந்துகொந் தாயமைத்துப்
பாவித்துப் பூசை பண்ணத் துணிந்தனனே
மேடைக்குக் கால்கள் மிகுத்தத்தங்கத் தால்நிறுத்தி

வாடைக் கமகமென வாத்தியங்கள் நின்றதிர
தீபம் புலச்சி தீவட்டித் தான்கொடுக்கப்
பாவக் குடும்பத்தோர் பண்ணினார் பூசையது
நம்பூரி வேதியர்கள் நாடி யகமகிழ்ந்து
பம்பைப் பரத்தை பகட்டுக்கை காட்டலோடு
நாடி மகிழ்ந்து நல்ல அனந்தபுரம்
கோடிநூ றாயிரம்போல் கூண்டரிய தீபமொடு
தேடரிய மாமறையோர் சிந்தைகளித் தேயிருக்க
நாடதிக மாகி நல்ல அனந்தபுரம்
மாத மும்மாரி வருசிக்கத் தான்பொழிந்து
வாரமுடன் செந்நெல் மாறாம லேவிளைந்து
தென்னங் குலைசிதறித் தேர்ப்போ லலங்கரித்து
என்னென்ன பவிசு எல்லா மிகப்பெருத்து
ஒப்பில்லாத் தேசம் உற்ற அனந்தபுரம்
செப்பத் தொலையாது சிறந்தப் பெருமையது
நன்றாகச் சீமை நாடோறு மேவாழ்க
அன்றுஸ்ரீ ரங்கர் அங்கே யகமகிழ்ந்து
நீசன் நினைத்த நினைவுபோ லெம்பெருமாள்
தேசப் பவிசும் சிறப்பு மிகக்கொடுத்து
நீசன் தனக்கெதிரி நீணிலத்தி லில்லையென்று
தோசக் கலிப்புவியைச் சூட்டியர சாளுகையில்

விளக்கம்:
புலச்சிக்கு அருளியது

நாராயண மூர்த்தி சேத்திர பாலனுக்கு எடுத்து சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு கலி நீசன் வாழுகின்ற கேரள நாடான திருவனந்தபுரம் வந்தார். கலி நீசன் நாட்டிற்கு மகா சக்தி வாய்ந்த பெருமாள் வந்ததை ஆடு மேய்த்து கொண்டு நின்ற புலட்சி என்ற பெண் கண்டு கொண்டாள். அவளை கண்ட நாராயண மூர்த்தி அவள் கண்ணில் படாமல் இருக்க இலைமறை காய் போல் ஒழிந்து கொண்டார். அப்போது வந்திருப்பது இறைவன் என்று அறிந்தவுடன் தன் கையில் இருந்த எச்சில் துப்புவதற்காக வைத்திருந்த அந்தப் பாத்திரத்தில் தீபாரதனை செய்து இறைவனை வழிப்பட்டாள்.

பின்னர் ஊர்மக்களுக்கு தெரியப்படுத்தினாள். ஊர் மக்கள் அனைவருக்கும் தெரியப் படுத்தினதால் இந்த செய்தியறிந்து, கலி நீசனும், நாராயணர் அமர்ந்திருக்க ரத்தின கற்களால் ஆன அலங்கார மேடை அமைத்தான். தனக்கு வரப்போகும் ஆபத்தை தடுப்பதற்கு நான்கு திசைகளிலும் சிவாலயங்களில் பூஜை வழிபாடுகள் செய்து இறைவனை சரணடைந்து போல் பாவனை செய்ய உறுதியுடன் செயல்பட்டான்.

அய்யா அமரும் இடம் ஆகிய ஆசனத்தில் கால்கள் எல்லாம் சுத்தமான தங்கத்தால் அலங்கரிக்க ஏற்பாடு செய்தான். பூ மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு வாசனை திரவியங்களை ஒரு நறுமணம் கமழ செய்தான். மேளதாள வாத்தியங்கள் முழங்க செய்து, தீபம் ஏற்றுவதற்கு ஏற்றப் பொருள்களை எல்லாம் வாங்க செலவு செய்த பணங்களை ஆடு மேய்க்கும் புலச்சியிடம் பெற்றுக்கொண்டடான்.

கலி நீசனுடைய குடும்பத்தை சேர்ந்தவர்கள் பூஜைகள் செய்து சிறப்பித்தார்கள். கோவில்களில் பூஜை செய்யும் நம்பூதிரிகளும், வேத மந்திரங்களை ஓதும் அந்தணர்களும், பம்பை, மேழம் போன்றப் பஞ்ச வாத்தியம் இசைக்க செய்து அலங்காரம் செய்து, கை சைகைகளைக் காட்டி, கால்கள் தாளமிட நடனம் ஆட ஆட்களை நியமித்து சிறப்புப் புரிந்தார்கள். இவ்வாறு விழாவின் வருகைக்காக மக்கள் ஆடிப் பாடி மகிழ்ச்சியோடு திருவனந்தபுரத்தில் காத்திருந்தார்கள்.

கோடிக்கணக்கான தீபங்கள் ஏற்றிவைத்து சரவிளக்குகள் எங்கும் நிறைந்து ஒளி கொடுக்கவும் , திருமாலை வரவழைப்பதற்காக வேதம் ஓதும் வேத சாஸ்திர வல்லுநர்கள் வேதம் ஓதி கொண்டே இருக்க, கோலாகலப் பெருவிழாவை காண மிக ஆனந்தமாக நாட்டு மக்கள் எல்லோரும் செய்தி கேட்டு திருவனந்தபுரத்தில் வந்து குவிந்தனர். திருமாலுடைய பொற்பாதங்கள் திருவனந்தபுரத்தில் பட்டதால் மாதம் மூன்று தடவை தவறாமல் மழை பெய்தது. மழை தவறாமல் பெய்ததால் நெற்பயிர்கள் பல மடங்கு விளைச்சலை கொடுத்தது . தென்னை மரத்தில் தேங்காய் குலைகள் எல்லாம் நான்கு பக்கமும் அதிகமானக் காய்களோடு அலங்காரத் தேர் போல் பார்வைக்கு ஜொலித்தது.

அய்யா நாராயணர் திருவனந்தபுரத்திற்கு வந்ததால் அந்நாட்டிற்கு தேவையான பதினாறு வகை செல்வங்களும் பெற்று அளவுக்கதிகமான செல்வ வளத்துடன் விளங்கியது. எந்த தேசத்தோடும் ஒப்பிட முடியாத அளவில் முதன்மையான தேசமாக செல்வ செழிப்புடன் திருவனந்தபுரம் தென்பட்டது. சீரும் சிறப்புமாய் பெருமைப் பெற்று விளங்கியது. நீசக்கலியன் ஆண்ட கேரள நாடானது, நாளொரு வளர்ச்சி கண்டு மக்கள் எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்கள். சகல நலமும் பெற்றது கேரள நாடு.

ஸ்ரீரங்கத்தில் இருந்து புறப்பட்டு வந்து ஸ்ரீரங்கநாதர் கேரள நாட்டு செல்வ வளம் கண்டு மனதில் பூரிப்பு கொண்டார். நீசக்கலியன் பாவனை செய்து திருமாலை நம்ப வைத்து எல்லாவற்றையும் அடைய வேண்டும் என்று நினைத்தது போல், மாயப் பெருமாளும் மாயமான பவுசுகளை கொடுத்து அந்நாட்டிற்கு தேவையான செல்வ செழிப்புகளை தேவைக்கு அதிகமாகவே கொடுத்தார். ஆகையால் கலி மன்னன் திருமால் நமக்கு துணை புரிகிறார் என்று நிம்மதியோடு, நமக்கு பகையாக பூலோகத்தில் யாரும் இல்லை என்று எண்ணி பாவம் நிறைந்த பூமியை ஆணவத்துடன் ஆண்டான்.

அப்படியே முடிசூடி ஆட்சி செய்த கலி மன்னனுக்கு தனக்கு பின் நாட்டை ஆள ஆண் பிள்ளை இல்லை என்ற கலக்கம் தோன்றியது. வாரிசு இல்லையே என்று வருத்தம் கொண்டான். கலி மன்னன் கொஞ்சி விளையாட குழந்தை இல்லை என்று மூலப் பொருளாகிய ஆதிநாராயணனுடைய திருவடிகளை வணங்கி வழிபாடுகள் செய்தான்.

***********

# DAY 23

## கலியரசன் தவம்

மதலைய தில்லாமல் மனஞ்சலித்து மாநீசன்
குதலையி னேதுவினால் கொஞ்சம் சடைவாகி
ஆதித் திருமால் அடியை மிகப்போற்றிச்
சோதியே யென்றனக்குச் சிறுவனொன்று தாருமென்றான்
அப்போது நாராயணர் அகமகிழ்ந்து கொண்டாடி
இப்போது உனக்கு இங்கிருந் தால்மதலை
கிட்டாது காசிதனில் கீர்ந்த நதிக்கரையில்
திட்ட முடன்தவசு செய்யப்போ யங்கிருந்தால்
மதலையுட துயரம் மாறுங்கா ணுன்றனக்குப்
பதலைமொழி நீசனுக்குப் பகர்ந்தார்கா ணம்மானை
கேட்டந்த நீசன் கெட்டிதா னென்றுசொல்லி
நாட்டுக்குச் சீட்டெழுதி நருட்களையுந் தான்வருத்திப்
போனானே நீசன் புகழ்பெரிய காசிதனில்
சேனா பதிகள் திக்கெங்குஞ் சூழ்ந்துநிற்க
நீசன் தவசு நிற்க வொருமறையோன்
வாசக் குழலோடு மருவினன்கா ணம்மானை
கண்டந்த நீசன் காமம் பொறுக்காமல்
தண்டுமீ றிக்காமம் சலத்தில் விழுந்ததுவே
இரைநமக் கென்று எட்டியொரு கொக்காவி
விரைவாய் விழுங்க மிகுத்தகர்ப்ப முண்டாகித்
தண்ணீரில் பிள்ளை தான்பெற்று தம்மானை
வெண்ணிற மான மிகுத்தபிள்ளை தான்மிதந்து
போகும் பொழுதில் புனலரிஷி மாமுனிவன்
தாப முடன்சிசுவை தானெடுத்தா னம்மானை
மதலை தனையெடுத்து வளர்த்துப் பருவமதில்
குதலை தனையாற்றில் குளியோட நீச்சலதும்
தோணியே றுந்தொழிலும் சுருக்குக்கப் பலேற்தொழிலும்
ஆணிப்பொன் முத்து அதுவளருந் தலமும்
வெள்ளித் தலமும் மிகுத்தபொன்தலமும்
உள்ளவித்தை யான உற்றரச வாதமுதல்
கள்ள உபாயக் கபடுபலத் தந்திரமும்
வெள்ளை நீசன்தனக்கு விதமா யவர்வருத்திச்
செங்கோ மட்டியெனத் தேசநசு ராணிகளில்
பெண்கள் ரண்டுபேரைப் பேறாய் மணமகித்து
இருத்தினான் மாமுனிவன் ஏற்றசெங் கோமட்டியில்
பருத்த வெள்ளைநீசன் பண்பாக அங்கிருக்க
நின்ற தவசு நெறியழிந்து மாநீசன்
அன்றந்தப் பாவி அனந்தபுரம் வந்தனனே
வந்து சடைவாய் மாநீசன் தானிருக்கச்
சந்துபயில் மாயவரும் தானறிந் தேதுரைப்பார்
மன்னவனே யுன்றனக்கு மதலையது கிட்டினதோ
என்ன விதங்காண் ஏகிவந்த தென்றுரைத்தார்

அப்போது நீசன் அவனேது சொல்லலுற்றான்
இப்போது மாயவரே யான்தவசு நிற்கையிலே
மறையவனுந் தேவியோடு மருவினதைக் கண்டாவி
இறையவரே யென்றனக்கு இந்திரியந் தானிளகி
ஆனதால் தவசு அழிந்தே னதினாலே
ஈனமுடன் மதலை இல்லையென்றா ரீசுரரும்
மதலையில் லாதிருந்தால் வையகத்துக் கேராது
குதலையல்லோ வேணும் குவலயத்தை யாளுதற்குச்
செங்கோ லரசு செலுத்தியர சாளுதற்கு
முன்கை சிரைத்து முறைகர்மஞ் செய்திடவும்
பிள்ளையில்லா தேயிருந்தால் போதுமோ புண்ணியரே
வள்ளலந்த மாலும் மறுத்துரைப்பா ரம்மானை
சொந்தமுள்ள சோதிரியைச் சுறுக்காய் வரவழைத்து
உந்தனக்குப் பிள்ளை உண்டோதா னில்லையென்று
வருத்திக்கே எப்போ வகைசொல்வான் சோதிரிசி
பொருத்தமா யாயன் புகன்றாரே நீசனுக்கு

மருமக்கள் வழி

நல்லதென்று வேதியனை நாடி யவனழைத்துச்
சொல்லவென்று நீசன் தொகுத்தவனோ டேகேட்க
அப்போது சோதிரிசி அந்நீ சனைப்பார்த்து
இப்போது கேள்நீ ஆகமத்தி லுள்ளமுறை
பெற்றாலு முன்மகவு பேருலகம் ஆளாது
மற்றோர்பெற் றுன்மருகன் ஆளுவான் வையகத்தை
என்றேதான் சாஸ்திரமும் இசையுதுகாண் மன்னவனே
அன்றேதான் சோதிரியும் அந்நீசனுக் குரைத்தான்
நல்லதென்று நீசன் நாடி யகமகிழ்ந்து
வல்ல வகையாலும் வைத்தபங்குக் கிட்டுமென்று
சோதிரியைத் தானனுப்பித் துயர்நீங்கி யேயிருந்தான்
ஆதி முறைப்படியே அவன்மரு கன்றனக்குப்
பட்டந்தா னென்று பறைசாற்றி யாண்டிருந்தான்

விளக்கம்:

## கலியரசன் தவம்

கலியரசன் தனக்கு குழந்தை இல்லையென்று மனம் வருந்தி, அய்யாவிடம் வந்து எங்கும் நிறைந்து ஒளிமயமாய் இருப்பவரே! எனக்கு பின் நாட்டை ஆள்வதற்கு வாரிசாக ஒரு ஆண் குழந்தை பிறக்க அருள் புரிய வேண்டும் என்று கேட்டான். அது கேட்ட நாராயணர் கலியனுக்கு கெட்ட காலம் நெருங்கியது என்று நினைத்து கலியனை பார்த்து மன்னா! நீ இந்த நாட்டில் இருந்தால் உனக்கு குழந்தை கிடைக்க வாய்ப்பில்லை. காசியில் உள்ள புனித நதியாகிய கங்கை நதிக்கரையில் முழு நம்பிக்கையுடன் தவம் செய்தால் உனக்கு நிச்சயம் குழந்தைக் கிடைக்கும் என்றார்.

பொன் மேனி வண்ணனாகிய நாராயண மூர்த்தி கூறியதைக் கேட்ட கலியரசன் நம்பிக்கையோடு தவம் செய்வதற்கு செல்ல நினைத்தான். ஆகவே கேரள நாட்டில் உள்ள தலைமையிடம் முதல் குடிமக்கள் வரை எல்லோரையும் அழைத்து அனைவரிடமும் தவம் செய்யப் போகும் செய்தியை சொல்லிவிட்டுப் புனிதப் பூமியாகிய காசிக்கு சென்றான். கலியரசன் கங்கை நதிக்கரையில் இறைவனை நினைத்து கடுமையான தவம் செய்துக் கொண்டிருந்தான்.

அப்போது அங்கு ஒரு அந்தணன் அவருடைய மனைவியோடு உறவாடிக் கொண்டிருந்த அந்த காட்சியைப் பார்த்தான். தவநிலையில் இருந்த கலியரசன் கண்களால் கண்டு காம இச்சை கொண்டு தவக்கட்டுப்பாட்டை இழந்து, மனதை கட்டுப்படுத்த முடியாமல் காமம் தலைக்கேறி அவனுடைய உடம்பில் இருந்த இந்திரியம் வெளியாகி புனித நதியான கங்கை நீரில் விழுந்தது.

அங்கே இரைத்தேடி காத்து கொண்டிருந்த கொக்கு இரைக்கிடைத்துவிட்டது என்று அதை வேகமாக விழுங்கி விட்டது. அவன் உடம்பில் இருந்து வெளியான கருவாகி இந்திரியத்தை எடுத்து விழுங்கியதால் உடனடியாக கர்ப்பமாகி குழந்தையை தண்ணீரிலே பெற்று போட்டுவிட்டது. கொக்கு ஈன்ற அற்புதமான குழந்தை மிகவும் வெண்மையான நிறத்துடன் புனித கங்கை நதியில் மிதந்து வருவதை நதிக்கரையில் அமர்ந்து இருந்த மாமுனிவராகிய புனல்ரிசி பார்த்து தண்ணீரில் வந்து கொண்டிருந்த குழந்தையை அவர் தூக்கி எடுத்து நல்ல முறையில் வளர்த்து வந்தார்.

பெற்ற குழந்தையை வளர்ந்து குழந்தை பருவம் கடந்து வந்துவிட்டது. வளர்ந்த குழந்தைக்கு சகல பயிற்சிகளையும் கற்றுக்கொடுத்தார். தண்ணீரில் நீந்தி குளிக்க நீச்சல் பயிற்சி ,கப்பலேறி தொழில் செய்யும் பயிற்சிகள், இரும்பு, பொன் , முத்து போன்ற விலை உயர்ந்த பொருட்கள் கிடைக்கும் இடங்களை கண்டறியும் கலைகளை எல்லாம் கற்று கொடுத்தார்.

மற்றும் இரும்பை பொன்னாக மாற்றும் மாயவித்தை, பொய் களவு, சூது, வாது செய்வது போன்ற தீய செயல்களையும், மோசமான தந்திரத்தையும், கொக்கு பெற்று புனல்ரிஷி வளர்த்த பிள்ளைக்கு தீய செயல்களையும் கற்று கொடுத்து வெண்ணீசன் என்ற பெயரையும் வைத்தார். இவ்வாறு வெள்ளை நிறம் கொண்ட நீசனுக்கு நல்லது எதுவும் கற்று தராமல் தீய வழியை நாடும் படியே வளர்த்தார். திருமண பருவம் அடைந்தவுடன் கீழ்த்தரமான இடத்திலிருந்து திருமணம் செய்து வைத்தார் புனல்ரிஷி.

(மழைநீர் கடலில் விழுந்த அந்த நீருடன் கலந்து உப்பு நீராக மாறிவிடுகிறது. ஆனால் அந்த நன்நீரானது சிப்பிக்குள் விழுந்து சிப்பி மூடி கொண்டால் அது விலை உயர்ந்த முத்தாகி விடுகின்றது. அது போல குழந்தை வளர்வதால் புகழ் பெறாது. வளர்க்கும் விதத்தில் தான் புகழின் உச்சத்தை தொடுகிறார்கள்.

யார் வயிற்றில் எந்த நிலையில் இருந்தாலும் பிறக்கின்ற குழந்தைகள் பிறப்பு எடுத்து அதை வளர்க்கும் பெற்றோர்களும் சரி, பாதுகாப்பவர்களும் சரி வளர்க்கும் தன்மையால் குழந்தை நல்ல பெயர் எடுப்பதுவும், தீயப் பெயர் எடுப்பதுவும் தானாகவே உருவாகின்றது. நல்லவிதமாக வளர்க்கும் பிள்ளைகள்

மற்றவர்களால் போற்றி புகழ்பெற்ற சான்றோன் என்ற பெயர் பெறுகிறது. தீயவர்களால் தீய செயல்களும், செயல் முறைகளையும் கற்று வளரும் பிள்ளைகள் வளர்ந்து ஆளாகி திருடன், கொலைகாரன் என்ற பட்டம் வாங்கி வாழ்க்கையில் கெட்டுப் போகின்றது.)

அதுபோல கொக்குப் பெற்று புனல்ரிஷி வளர்த்த பிள்ளை நல்லபடியாக வளர்க்க தவறிவிட்டார். திருமணம் கூட சரியான இடத்தில் பார்த்து முடிவு செய்யாமல், வெள்ளை நிற நீசனுக்கு, செங்கோமட்டி நாட்டில் வாழ்ந்த தாசி வம்மிசத்தை சார்ந்த இருபெண்களை திருமணம் முடித்து, செங்கோமட்டி புரத்திலே உள்ள பெண்களின் தாய் வீட்டிலேயே தங்கி இருக்க ஏற்பாடு செய்தார் புனல் ரிஷி.

அப்படியே செங்கோமட்டி நாட்டில் இரண்டு பெண்களையும் திருமணம் செய்து கொண்டவன் மாமனார் வீட்டில் மருமகனாகத் தங்கியிருந்தான். இவ்வாறிருக்க புனித கங்கை நதிக்கரையில் தவம் செய்வதற்காக சென்ற அரசன் அவனுடைய ஒழுக்க நெறியிலிருந்து தவறியதால் செய்த தவத்தை சரியாக முடிக்காமல் காசியில் இருந்து புறப்பட்டு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தான்.

மாய சக்தியால் எல்லா விவரத்தையும் அறிந்து கொள்ளும் தன்மை கொண்ட திருமால், கலியனின் நிலையை அறிந்தும், அறியாதது போல் கேரள நாட்டு மன்னர் தவம் செய்ய சென்ற காரியம் வெற்றி பெற்றதா? குழந்தை பாக்கியம் கிடைத்து விட்டதா? தவத்தை வெகுவிரைவில் முடித்து விட்டீரே என்று புன்னகையோடு கேட்டார் மாய பெருமான் . மாய பெருமான் கேட்டவுடன், மாய பெருமானே! என் தவம் வெற்றிப் பெறவில்லை. நான் சீர்குலைந்து போனேன்.

நான் காசிக்கு சென்று புனிதக் கங்கை நதியில் தவத்தில் இருக்கும் போது அந்தணன் ஒருவன் அவனுடைய மனைவியோடு உறவாடிக் கொண்டிருந்தான். நான் அதை என் கண்களால் கண்டுப் பரவசமடைந்து நிலை தடுமாறி என் மனதை கட்டுப்படுத்தும் சக்தியை இழந்து விட்டதால் என்னுடைய வீரியம் வெளிப்பட்டுவிட்டது. ஆகையால் என்னுடையத் தவத்தை முழுமையாக முடிக்க இயலவில்லை.

இழிவான நிலையில் இருந்த என்னிடம் ஈஸ்வரர் இனி உனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்று சொல்லிவிட்டார். நான் பாதியிலே தவம் நிறைவுப் பெறாமல் திரும்பி வந்தேன் என்றான். குழந்தை இல்லாமல் நான் நாட்டிற்கு மன்னனாயிருந்து என்ன பலன், எனக்கு பின் நாட்டை ஆள எனக்கு வாரிசு இல்லையே என்று மிகவும் வருத்தம் கொண்டான் கலி மன்னன். அதை கேட்டு இரக்கம் கொண்ட நாராயணர் கலி மன்னனுக்கு ஆறுதலாக, நீ உன்னுடைய ஜாதகத்தில் உள்ள ராசிபலனுக்கு குழந்தை பாக்கியம் உண்டா? இல்லையா? என்றுத் தெளிவாக அறிந்து கொள்ள அரண்மனை ஜோதிடரை அழைத்துக் கேட்டு தெரிந்துக் கொள்ளேன். அவர் அதற்கான வழிமுறைகளை சொல்வார் என்றுக் கூறினார்.

மாயபெருமாள் மிகவும் பொருத்தமான முறையில் கலிநீசனுக்கு மிக தந்திரமாக புத்தி புகட்டினார். கலிநீசன் இது நல்ல யோசனைதான் என்று ஜோதிடனை அழைத்து அவனுடைய ஜாதகத்தை கொடுத்து விளக்கம் கேட்டான்.

மருமக்கள்வழி

அரண்மனை ஜோதிடர் ஜோதிட ரீதியாக கலியரசரின் ஜாதகத்தை கணித்து பார்த்துவிட்டு மன்னா! உம்முடைய ஜாதகத்தில் ஆகம விதிமுறைப்படி உமகென்று குழந்தை பிறந்தாலும் அம்மகவுக்கு உன்னுடைய நாட்டை ஆளும் விதி இல்லை. உம்முடைய மருமகனுக்கு தான் நாட்டை ஆளும் பலன் உள்ளது. உம்முடைய ஜோதிட சாஸ்திரத்தில் மருமக்கள் வழி தான் நாடு ஆளும் பாக்கியம் பெற்றுள்ளது என்பதை மிக தெளிவாக கூறுகிறது மன்னவரே! என்றான்.

சோதிடன் ஜாதக பலனை சொன்னது கேட்ட கலி மன்னன், மனதில் திருப்தி அடைந்து, விதியின் வழி நடக்கட்டும் என்று ஜோதிடரை அனுப்பிவிட்டு ஆதி காலத்தில் இருந்து வந்த குல வழக்கத்தின்படி மருமகன் என்கிற வாரிசுகே நாட்டை ஆளும் ராஜ பட்டம் சூட்டப்படும் என்று அனைவருக்கும் தெரியப்படுத்தி மன நிம்மதியோடு நாட்டை ஆண்டு வந்தான்.

**********

# DAY 24

திட்டமுடன் நீசன் தேசமதை யாளுகையில்
முன்னீசன் விந்தில் உதித்துவளர்ந் தேயிருந்த
அந்நீச னான அசுபக் கிரிவளமை

வெண்ணீசன்

சொல்லவே நாதன் தொகுத்துக்கே ளன்போரே
வல்லசெங் கோமட்டி வையகத்தி லந்நீசன்
வெள்ளி மலையும் மிகுத்ததங்கப் பொன்மலையும்
கள்ளமில்லா வாதம் கைகண்ட வித்தையதாய்
நிதியிற் பெருத்து நெருங்கப் படைகூட்டிப்
பரியானை ஒட்டகங்கள் பலபடைகள் சேகரித்து
ஆளும் படையும் ஆயுதங்க ளஸ்திரமும்
வேழும் பெரிய வெகுவாணு வங்கூட்டித்
தன்னோ டினங்கள் சதாகோடி யாய்ப்பெருத்து
என்னோ டெதிர்க்க யாதொருவ ரில்லையென்று
அவன்தா னொருவேதம் ஆகமங்கள் தான்பிரித்து
எவர்தா னெதிரியென்று எண்ணமுற்று மாநீசன்
நட்சேத் திரத்தை நகட்டிருபத் தெட்டாக்கி
வைத்தானே மாதம் வருசமது மாறாய்
முன்னீசன் வைத்த முறைமை யிலுங்கூட்டிப்
பின்வந்த நீசன் பிரித்தானொன் றேற்றமுடன்
அரிநமா வென்ற அட்சரத்தை விட்டவனும்
விரியாய் அனாதியென விளம்பினான் வையகத்தில்
இப்படியே வைத்த இவன்வேத மானதுக்குள்

அப்படியே மற்றோரை அகப்படுத்த வேணுமென்று
பணமா னதைக்கொடுத்துப் பகட்டினான் மானிடரைச்
சிணமாக மானிடவர் சேர்ந்தா ரவன்வேதமதில்
இப்படியே வேதமொன்று இவன்பலத்தா லுண்டாக்கி
அப்படியே தானிருக்க அவனேது தானினைப்பான்
ஆணுவங்கள் சேனை ஆயுதங் கள்வெகுவாய்
வாணுவங்கள் ரெம்ப வம்மிசத்தோ ரெம்பரெம்ப
படையாலு மற்றொருவர் பணத்தாலும் நம்மையுந்தான்
தடைசெய்து நம்மைத் தடுப்பவரா ரென்றுசொல்லி
ஆரா ரெதிரியென்று அவன்பார்த் திருக்கையிலே
பூராய மாயொருவன் போதித்தா னவன்றனக்குச்
சோழனென்றும் சேரனென்றும் துய்யபாண் டியனென்றும்
வேழமுடி மன்னர் விபரீதமா யாண்டிருந்த
தேச மைம்பத்தாறு உண்டுகாண் செந்துரையே
வாசமுட னாண்டு வகையா யிருக்கையிலே
வேசையொரு தாசி வழிநுதலாள் தன்வயிற்றில்
பேசரிய வோர்மதலை பிறந்ததுகாண் மாயமுடன்
மதலை பிறந்து வையகத்தி லேயிருந்து
குதலை வளர்ந்து குடுமி வளர்க்கையிலே
சேரனுக்குஞ் சோழனுக்கும் சிறந்தபாண் டியனுக்கும்
வாரமுள்ள தெய்வ மாதருட சாபமதால்
அவர்கள் கிளையிறந்து ஆணுவங்கள் தானழிந்து
இவர்களும் போய்க்கடலில் இருந்தார்கள் கல்லெனவே
ஆனதினால் மூன்று அவனிதனை யாளுதற்கு
மானமுள்ள பேர்கள் மறுத்தேதா னில்லாமல்
மாயமுடன் தாசி மகன்தானும் சீமைதன்னை
ஞாயமில்லா வண்ணம் நாடாண் டிருந்தனனே
சென்றால்தா னந்தச் சீமைநமக் காகுமென்று
அன்றேதான் சொல்ல அவன்கோபத் தால்வெகுண்டு
வந்தானே யந்த மாநீசன் தன்பேரில்
செந்தார மாயன் சேனை வருவதையும்
அறிந்தே நீசன்தனக்கு அச்சுதருஞ் சொல்லலுற்றார்
வெறிந்தமுள்ள நீசன் வேண்டும் படைகூட்டி
நசுறாணி யான நல்லவெண் ணீசனுக்குத்
துசுவான மாநீசன் திருமாலின் தன்னருளால்
ஏற்றுக் கொடாமல் இவன்வெற்றி கொண்டனனே
ஏற்றுமந்த நீசன் மாறியவன் போயிருந்தான்
அப்போது அந்த அன்னீத மாநீசன்
இப்போது படையை யாம்வெற்றி கொண்டோமென்று
கோட்டைபின்னு மிட்டுக் கொடிய விருதுகட்டித்
தாட்டிமையா யுலகில் சட்டமது வைத்தனனே
வைக்கும் பொழுதில் மாயவரைத் தானோக்கிச்
செய்க்கும் பெரிய திருமாலே யென்றனக்குக்
கைக்குள்ளே ஏவல் கருத்தாகச் செய்வதற்கு
மெய்க்குணம்போ லுள்ள விதமான சாதியொன்று
வருவித்து என்றனுட மணிவாசல் காத்திருக்கத்

தருவித்து நல்ல சாதியொன் றென்றுரைத்தான்
அப்போது மாயன் அதற்கேது சொல்லலுற்றார்
இப்போது உன்றனக்கு ஏவல் தொழில்கள்செய்ய
ஆகின்ற பேரை அழைத்துக்கோ என்றுரைத்தார்
வேகுன்ற நீசன் விளம்புவா னமைச்சருடன்
ஆரைக் கொடுவரலாம் அருகில்விட்டு வேலைசெய்ய
ஏரையொத்த மந்திரியே இயம்பு மெனக்கேட்டான்
அப்போது மந்திரிகள் அந்நீசனுக் குரைப்பார்
இப்போது வேறொருவர் இருந்தாலா காதெனவே
நல்லவகை யான நாடுஞ்சான் றோர்களைத்தான்
வல்லவகை யாலும் வருவித்து வைப்பீரால்
ஆகுமந்தச் சாதியென்று அந்நீசனுக் குரைத்தார்
வேகும் பொழுதில் வெற்றிசான் றோர்களுக்கு
ஆள்விட்டு வருத்தி அதிக நிதிகொடுத்து
வாள்கொடுத்து ஆயுத பாணி மிகக்கொடுத்துப்
பட்டயமுங் கொடுத்துப் பாரயிறை கூலிவிட்டுச்
சட்டைக்குல் லாகொடுத்துத் தலைப்பா மிகக்கொடுத்து
வாசல் மணிமேடை வகையாகக் காரெனவே
வாசமொழிக் கலியன் மாய்கையால் சான்றோர்கள்
ஊழி விதியால் உடையோனை நெஞ்சில்வைத்துக்
காளி வளர்த்த கண்மணிகள் காத்திருந்தார்

விளக்கம்:-

வெண்ணீசன்

கலி மன்னன் மன உறுதியோடு இருக்கும் வேளை கங்கைக்கரையில் தவம் இருக்க சென்ற கலியனுடைய வீரியம் வெளியாகியதை கொக்கு எடுத்து விழுங்கியதால், அதன் மூலம் உருவாகி பிறந்த குழந்தைதான், கலிநீசனின் வாரிசான வெண்ணீசன் என்கிற அசுபகிரி என்ற பெயரை உடையவன். அந்த செழிப்பான நாடாகிய செங்கோமட்டி என்ற தேசத்தில் வெண்ணீசன் என்ற அசுபகிரி செல்வ செழிப்பு உடையவனாக உயர்ந்து அவனுக்கு என்று பலவிதமான படைகளையும் பெருக்கி சேர்த்து கொண்டான்.

புனல் ரிஷி கற்றுக்கொடுத்த வியத்தகு வித்தைகளைப் பயன்படுத்தி, சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளியங்கிரி மலையைப் போல் தங்கத்தாலான பொன்மலை ஒன்றையும் அமைத்து, உல்லாசமாக வாழ்ந்து வந்தான். மற்றும் குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள், இன்னும் காலால் படைகள் போன்ற எல்லா படைகளையும் சேர்த்து பலவிதமானப் போர்க் கருவிகளும், ஆயுதங்களும் மிகப் பெரிய திரிசூலம், சக்தி வாய்ந்த ஆயுதங்கள் எல்லாம் சேகரித்து கொண்டான்.

கோடிக்கணக்கான மக்களை கூட்டு சேர்த்து தன்னை எதிர்த்து போர் செய்ய யாராலும் முடியாது என்ற ஆணவத்தில் கர்வம் கொண்டிருந்த அவனுடைய கட்டளைகளை நிறைவேற்ற தனியாக ஒரு வேதத்தையும், பல ஆகமத்தையும் உருவாக்கி தனக்கு நிகராக எவருமில்லை என்ற அதிகார தோரணையில் இருந்தான்.

நட்சத்திரங்களை கலியரசன் 27 நட்சத்திரங்களாக பிரித்து வைத்து இருந்தான். அதை வெண்ணீசன் மாற்றி 28 என்றும் மற்றும் ஒரு நட்சத்திரத்தை கூட்டி புதிய முறையை கொண்டு வந்தான். அவன் வைத்தது தான் சட்டம் என்றும், பழைய மாத, வருட, கணக்குகளை மாற்றி ,சிங்கம் மாதம் என்றும் ,கொல்லம் ஆண்டு என்றும் மாற்றினான். [உதய மார்த்தாண்ட வர்மா கிபி 825 ஆகஸ்ட் 15 முதல் புதுச்சட்டம் கொண்டு வந்தார்.]

ஆதிகாலத்தில் கலியன் உருவாக்கியிருந்த விதி முறைகளை விட அதிகப்படியான மாற்றத்துடன் புதிதாக தோன்றிய அசுபகிரியான வெண்ணீசன் சரியான நடைமுறைகள் எல்லாம் கூட்டியும் குறைத்தும் பிரித்து வைத்தான்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்திலிருந்தே ஓதி வந்த ஹரி ஓம் நமோ நாராயணா என்ற நாராயண மந்திரத்தை இரணியன் என்ற அசுரன் அலட்சியப்படுத்தி இரண்யாய நம என்று கூறும்படி அன்று அவன் அதிகாரத்தில் சட்டம் வைத்தது போலவே, அவனுக்கு மிஞ்சிய வெண்ணீசனானவன் "வீரியாயன் ஆதி" என்ற பெயரை உச்சரிக்கும் படியாக ஆணையிட்டான் . எந்த கருத்துக்களும் அடங்காத வீரா என்கிற மந்திரத்தை உருவாக்கி கொண்டு வந்த புதிய வேதத்திற்கு மெருகூட்டினான். ஆதி கொள்கைகளை எதிர்க்கும் வீரன் என்று பறைசாற்றினான்.

மக்கள் எல்லோரையும் அவன் வசப்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு, பணம், பொருட்களை கொடுத்து ஆடம்பர வாழ்க்கையையும் கொடுத்து, மக்கள் எல்லோரையும் மதி மயங்கச் செய்தான். முன்னால் இருந்த கலிமன்னன் நினைத்ததை விட பின்னால் வந்த வெண்ணீசனாகிய அசுபக்கிரியானவன் மிக வேகமாக மக்களை அவனுடைய புதிய வேதத்தில் சேர்த்து கொண்டான். எல்லா மக்களும் அவனுடைய பொருளுக்கு ஆசைகொண்டு பகட்டு வாழ்க்கை வாழலாம் என்று அவன் கூறிய வேதத்தில் சேர்ந்து கொண்டார்கள். ஆதலால் அவன் கலி சக்தியால் ஏற்படுத்திய புதிய வேதமும் செயலுக்கு வந்தது.

புதுமை படைத்து வெற்றியுடன் கொண்டிருக்கும்போது ஆள்பலம், ஆயுதப்பலம் எல்லாமே எந்த கஷ்டமும் இல்லாமல் விரைவில் கிடைத்தது. வம்சாவளி மக்கள் அதிகமாக பெருகி வந்தனர். எனவே அவன் தற்பெருமை கொண்டு வரும் பணத்தை கொண்டு, நம்மை எவரும் எந்த வகையாலும் தடுக்க முடியாது, தன்னை எதிர்க்க வல்லவன் யாரும் இல்லை என்று இறுமாப்புடன் இருந்தான். அப்போது முன்னாள் நடந்து முடிந்த விவரங்களை நன்றாக அறிந்த ஒருவன், வெண்ணீசனிடம் சென்று சில விவரங்களை தெரியப்படுத்துகிறான்.

மன்னவரே! சோழன், சேரன், பாண்டியன் என்ற மன்னவர்களாகிய மூவரும், செல்வ செழிப்பும் உடையவர்களாய், யானை பலம் கொண்டவர்களாக, நம் நாட்டை ஆண்டு கொண்டிருந்தார்கள். ஐம்பத்தாறு தேசங்கள் பாரத நாட்டிலிருந்தது. பேரும் புகழும் பெற்று செல்வ செழிப்போடு நீதி நெறிமுறைகள் தவறாமல் ஆட்சி நடந்து கொண்டிருந்த போது, தாசி குலத்தில் பிறந்த பெண் ஒருத்தியின் வயிற்றில் ஒரு அதிசயமான குழந்தை பூலோகத்தில் பிறந்து, அந்த குழந்தை பருவ வயதை அடைந்தபோது, முன்னொரு காலத்தில் தெய்வகன்னிமார்களின் பிள்ளைகளை வளர்த்த பத்திரகாளியின் சாபத்தால்

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அவர்களுடைய பிள்ளைகளை இழந்து ஆண் வாரிசே இல்லாமல் போய்விட்டார்கள்.

ஆகையால் மூன்று மன்னர்களும் நாட்டை துறந்து சென்று கடலுக்குள் மறைந்து கற்சிலையாக நின்றார்கள். எனவே அவர்கள் விட்டு சென்ற மூன்று இராச்சியத்தையும் சேர்த்து ஆட்சி செய்வதற்கு தானம், தர்மம், நீதி, நேர்மை என 32 அறங்களையும் மறந்து, செயல் படுகின்ற, மாயத்தன்மையுடன் பிறந்த தாசியின் மகன் நாட்டை கைப்பற்றி ஆண்டு வந்தான்.

நியாயம், நீதி, நெறி தவறிய விதத்தில், ஒழுக்கத் தன்மையை இழந்து நாட்டை ஆண்டு வருகிறான். இப்போது நாம் அங்கே படையெடுத்து சென்று போரிட்டு நாட்டை நமதாக்கிக் கொள்ளலாம் என்று கூறினான். அந்த விவரங்களை கேட்டவன் பேராசை கொண்டு ஆவேசத்தோடு படைகளையும் திரட்டி கொண்டான். அவன் வருவதை தனது ஞான அறிவால் அறிந்த திருமால் கலிநீச மன்னனிடம் முன்னரே தெளிவுபடுத்தி விட்டார்.

அதை அறிந்து கொண்ட மூர்க்கனாகிய கலிநீசன் மார்த்தாண்ட வர்ம அவனுடைய எல்லா படைகளை திரட்டினார். படைகளை திரட்டிக் கொண்டு கலிநீசனை எதிர்க்க வந்த வெண்ணீசனை விட, இழிவான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த கலிநீசன், திருமாலின் உடைய முன்னெச்சரிக்கையுடன் தோல்வி அடையாமல் வெற்றி பெற்றுவிட்டான். தோல்வி கண்ட வெண்ணீசன் திரும்பி செங்கோமட்டி நாட்டிற்குச் சென்றான். வெற்றி பெற்ற கலிநீசன் நான் போரில் வெற்றி பெற்று விட்டேன் என்ற பெருமிதத்தால் ஆணவம் கொண்டான்.

வெற்றி பெற்றவுடன் அவனுடைய அரண்மனையை சுற்றி பாதுகாப்பு சுவரை விரிவுபடுத்தி வெற்றிக்கொடி நாட்டினான். உடனே அவனுடையத் திறமையை வெளிப்படுத்தும் விதமாக பல புதுமையான சட்டங்களை உருவாக்கினான். அப்போது கலிநீசன் மாயபெருமாளை பார்த்து என் வெற்றிக்கு காரணகர்த்தாவாக விளங்குகின்ற ஒப்பில்லா தன்மை கொண்ட திருமாலே! என்னுடைய ஆசைக்கு அடிபணிந்து நான் கொடுக்கும் வேலைகளை செய்ய நீதியோடும் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் உயர்ந்த இனத்தவரை வரவழைத்து என்னுடைய மாளிகையை காவல் காப்பதற்கு தந்து அருள வேண்டும் என்று கேட்டான். உனக்குத் தேவையானதை செய்ய வேண்டிய ஆட்களை தேர்வு செய்ய என்னால் ஆகாது நீதான் தேர்வு செய்ய வேண்டும் என்றார்.

உடனே கலி நீசன் திருமாலிடம் கோபம் கொண்டு மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை செய்தான். அரண்மனையை பாதுகாக்க யாரை நியமிக்கலாம் என்று எல்லோரிடமும் ஆலோசனைக் கேட்டான். அங்கிருந்த மந்திரிகள் மற்றும் மன்னர்களும் இந்த கேரள நாட்டிற்கு பாதுகாப்பாக இருப்பதற்கு வேறு நாட்டில் உள்ளவர்கள் வருவது நல்லதல்ல. நல்ல சிந்தனை கொண்ட சான்றோர் குல மக்கள் தான் நன்றாகச் செயல்படுவார்கள். ஆகையால் அவர்களை வரவழைத்தால் நன்மையான செயல்களை செய்வார்கள் என்று கலி நீசனிடம் சொன்னார்கள். உடனே சான்றோர்களை அழைத்து வர தூதுவர்களுக்கு பணம் கொடுத்து அனுப்பினான்.

தூதுவரை அழைத்து வந்தவுடன், கலி நீசன் அவர்களிடம் இனிமையாக பேசி நல்ல வரவேற்பு அளித்து அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளை நீக்கி பதவி பொறுப்பையும் கொடுத்தான். கலியின் விதியால் சான்றோர்களும் அவன் பேசிய பேச்சிற்கு மயங்கி பதவி பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். வீரர்கள் அணியும் சட்டை, தொப்பி, தலைப்பாகை ஆகியவற்றையும் உரிமையும் கொடுத்து அவர்களை மிகவும் கவுரவித்து அரண்மனையில் தனக்கு மெய்காப்பாளராக இருக்கும் படி ஆணையிட்டான். நமது முன் ஜென்ம வினை என்று படைத்த சிவபெருமானை மனதில் வேண்டிக்கொண்டு பத்திரகாளி பாதுகாத்து வளர்த்த சான்றோர் மக்கள் கபடு அறியாது அரண்மனையை பாதுகாத்து வந்தனர்.

************

# DAY 25

## கலிநீசன் சாபம்

அப்படியே காத்திருந்து அவர்வருகும் வேளையிலே
முப்படியே வந்த முழுக்கலியன் தோசமதால்
அந்தநீ சன்தனக்கு அழிவுவரும் வேளையிலே
இந்தச் சான்றோர்கள் இவர்தூக்கம் வைத்திடவே
நீசனுட வம்மிசத்தோர் நேரக்கூறே யறிந்து
வாசமிட்டு நீசனையும் வதைத்தாரே யவ்வினத்தோர்
சீவன்போ கும்வேளைச் செப்புவான் சாபமொன்று
காவலாய் நீரிருந்து காட்டிக்கொடுத் தீரேயென்று
கோபித்தான் சான்றோரைக் கூறழியப் பேசியவன்
சாபித்தான் சான்றோர்க்குச் சத்தியில் லாநீசன்
என்குடும்பத் தோர்கள் இராச்சியத்தை யாளுமட்டும்
உன்குடும்பத் தோர்கள் ஊழியங்கள் செய்துமிக
அழுந்தப்படு வாரெனவும் அந்நீசன் சான்றோர்க்கு
விழுந்த மொழியாய் விரைந்துரைத்தா னேநீசன்
சொல்லியந்த நீசன் சோர்ந்திறந்தா னவன்றன்
வல்லி யுடன்பிறந்த மகன்தேசம் ஆண்டிருந்தான்
நீசனுட சாபம் நீணிலத்தில் சான்றோர்க்கு
மாய வலையாய் வளைந்ததுகா ணன்போரே
தேவ ரதையறிந்து திருமா லிடமேகி
மேவலர்கள் வந்து விளம்பினா ரப்போது
மாயவரே எங்கள் வழியில்வாழ் சான்றோர்க்குப்
பாவிநீ சன்சபித்த பழிசாபங் கேட்டீரோ
சாபத்துல்ப மெல்லாம் தானுரைத்தா ரச்சுதற்குத்
தாமத் திருமேனி தானுரைப்பார் தேவருக்கு
மன்னதியத் தேவர்களே வாய்த்தபுகழ் சான்றோர்க்கு
அந்நீசன் சாபம் அதுவுங் குறிதான்காண்
வம்புள்ள நீசன் வழக்கெல்லா மேற்பதற்கு
அன்புள்ள சான்றோர்க்கு அவனிட்ட சாபமது

எத்தனை குற்றம் இவர்செய்து போட்டாலும்
அத்தனையும் நீசன் அவனேற்கக் காரியந்தான்
நல்லதுகாண் தேவர்களே நாடுஞ்சான் றோர்களுக்குத்
தொல்லைவந்தா லுந்தீர தொகைவைத்த லக்குமுண்டு
சோழனுக்குச் சான்றோர் செய்தநன்றி மெத்தவுண்டு
வேழமிட் டிருப்பேரை வெட்டினான் பாரறிய
நீசனுக்குச் சான்றோர் நித்திரைக ளில்லாமல்
வாசல்நடை காத்ததற்கோ வலுதுயரச் சாபமிட்டான்
எல்லா மறிவார் ஈசர்முதல் லோகம்வரை
வல்லாண் மையான வாயத்ததே வாதிகளே
நாமென்ன செய்வோம் நாட்டில்விதி வந்ததற்குப்
போமென்னத் தேவருக்குப் பெரியோன் விடைகொடுத்து
மாயவரு மங்கே மனஞ்சடைத்துத் தானிருந்தார்
வாயக் கலிநீசன் வையகத்தை யாண்டிருக்க
நீசனிட்ட சாபம் நீதிச்சான் றோர்களுக்கு
மாயவினை போலே வளைந்ததுகா ணன்போரே

விளக்கம்:

கலி நீசன் சாபம்

கலி நீசனுடையக் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நம்பிக்கையோடு சான்றோர்கள் அரண்மனையையும் பாதுகாத்துக் கொண்டிருந்த சமயத்தில், குறோணி முதல் கலியன் வரைத் தொடர்ந்துப் பாவ வினைகளை செய்கின்ற அந்த குறோணியின் பிதிரில் வந்த கேரள நாட்டு மன்னனுக்கு ,கர்ம வினையால் மரணம் நெருங்கிவிட்ட நேரமும் வந்தது.

காலத்தின் கொடுமையால் காவல் காத்து கொண்டிருந்த மெய்க்காப்பாளர் ஆகிய சான்றோர்கள் எல்லோரும் பணியில் அயர்ந்து தூங்கி விட்டார்கள். அந்த நேரம் பார்த்து அரச குடும்பத்தை சார்ந்தவர்கள் சரியான தருணம் இதுதான் என்று அரண்மனைக்குள் புகுந்து சென்று, அரசகுலத்தினர் நீச மன்னனை வஞ்சகமாக அடித்து உதைத்து கொன்று விட்டார்கள். அவனுடைய உயிர் பிரியும் நேரத்தில் சாவுக்குக் காரணமானவர்கள் பாதுகாப்பு கடமை தவறிய சான்றோர்கள் தான் என்று தவறாகப் புரிந்துகொண்டு கலிநீசன் சான்றோர்களுக்கு சாபமிட்டான்.

எனக்கு பாதுகாப்பாக இருந்த நீங்கள் என்னை எதிராளியிடம் கொலை செய்யும்படி காட்டி கொடுத்து விட்டீர்களே! என்று தவறாக புரிந்து கொண்டு மரண போராட்டத்தில் சான்றோர் குலம் அழியும் என்று சபித்து, என்னுடைய ராஜ குடும்பத்தினர், இந்த கேரள நாட்டை ஆட்சி செய்யும் காலம் வரை அவர்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டும். உங்கள் வம்சாவளி மக்கள் எல்லாம் அடிமைகளாக வாழ்ந்துத் துன்பப்பட்டு அவதிப்படுவீர்கள் என்று வேதனையோடு மரணத்தருவாயில் சாபமிட்டு இறந்துபோனான். அவனுடைய சகோதரி வயிற்றில் பிறந்த அவருடைய மருமகன் நாட்டை ஆள வந்தான்.

கலியனுடைய ஜாதக கணிப்பு கூறியதுபோல மருமகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். கேரளத்து கலி மன்னன் இட்ட சாபமானது பூலோகத்தில் சான்றோர் குலத்தவர்களுக்கு உடனே பலித்துவிட்டது. அவர்களுக்கு ஏற்பட்ட சாபத்தை தேவர்கள் அறிந்து திருமாலிடம் சென்று முறையிட்டார்கள்.

எங்கும் நிறைந்திருக்கின்ற மாயபெருமானே! எங்களைப்போல் நேர்மையாக வாழுகின்ற சான்றோர்களுக்கு கலிநீசன் சாபமிட்டான். அந்த சாபத்தால் அவர்கள் அடையும் துன்பங்களையும் விவரமாக கூறினார்கள். பூலோகத்தை தனக்குள் அணிந்துக் கொண்ட “ஏரணியின் மாயோன்” தேவர்களை பார்த்து தேவாதி தேவனுடைய பிள்ளைகளாகிய சான்றோர்களுக்கு கலிநீசன் இட்ட சாபம் நன்மைக்கே! அதுவே கலி அழிவதற்கு அடையாளம். என் அன்பு மக்களுக்கு அவன் இட்ட சாபம் பலிக்காது. அவன் இட்ட சாபம் அவனை அழிக்கும்.

சான்றோர்கள் எவ்வளவு தவறுகள் செய்தாலும் அவர்களை தீமையான பலன்கள் எதுவும் அண்டாது. ஆகவே தேவர்களே நீங்கள் வருத்தப்பட வேண்டாம். என் பிள்ளைகளுக்குத் துன்பங்கள் நேர்ந்தாலும் அதை தீர்ப்பதற்கு நான் கலியை மொத்தமாக அழித்து விடுவேன். அழியும் நேரம் நெருங்கிவிட்டது.

சோழ மன்னனுக்கு என்னுடைய மக்கள் செய்த நன்றி மறவாத வீரச்செயல்கள் நிறைய உண்டு. அப்படிப்பட்ட வீரச்செயல்கள் புரிந்த இரண்டு பேர்களை யானையின் மூலம் உலகம் அறியும் படிக் கொன்றுவிட்டான்,அன்று! இன்று சேர மன்னன் மார்த்தாண்ட வர்மனுக்கு என் பிள்ளைகள் தூக்கமில்லாமல் நேர்மையான முறையில் அரண்மனை வாயிலில் நின்று காவல் காத்து வந்ததற்காகவா? இத்தனை பெரிய துன்பத்தை அனுபவிக்க சாபமிட்டான் பாவி பூலோகத்தில் நடக்கிற எல்லா செயல்களையும் பரமசிவன் முதல், பதினான்கு லோகங்களிலும் உள்ள எல்லோரும் அறிவார்கள்.

அதற்காக கவலைப்பட வேண்டாம். அவன் அழிவது உறுதி. நாம் என்ன செய்யமுடியும் .அவன் விதி,கலியுகம் முடிய போகிறது என்று தேவர்களுக்கு திருமால் பதில் உரைத்தார். மாயபெருமான் தன் பிள்ளைகளின் துயரத்தை நினைத்து மன நிம்மதி இழந்து திருவனந்தபுரத்தில் வாடிப் போயிருந்தார். வஞ்சகத் தன்மை கொண்ட உதய மார்த்தாண்ட வர்மாவின் மருமகன் நாட்டை ஆண்டுகொண்டிருந்தான். அப்போது அவன் இட்டச் சட்டமானது நீதி நேர்மையோடு வாழ்ந்த சான்றோர் மக்களுக்கு எதிர்பாராத விதமாக மாயமாய் வந்து, கர்மவினை போல் விடாமல் சுற்றி வளைந்து கொண்டது.

*********************

# DAY 26

தம்பி தமையனுக்குச் சத்துருப்போல் தானாகி
வம்புக்குங் கோளு மாநீச னோடுரைத்து
அடிக்கவே கைக்கூலி அவனுக்கே தான்கொடுத்து
முடிக்கும் வரையும் முறைமுறைக்கோள் சொல்லிடுவான்
இப்படியே சான்றோர் இவர்கள்நிரப் பில்லாமல்
அப்படியே நீசனுட அன்னீதத்தால் வேறாய்

கலிநீசன் கொடுமை

பிரிந்துதான் சான்றோர் பெருத்த கிலேசமுற்றார்
அறிந்துதான் நீசர் அவர்கள்தொக் காச்செனவே
தாலிக்கு ஆயம் சருகு முதலாயம்
காலிக்கு ஆயம் கம்பு தடிக்காயம்
தாலம தேறும் சான்றோ ருக்காயம்
தூலமுட னரிவாள் தூருவட் டிக்காயம்
தாலமதுக் காயம் தரணிதனிலே வளர்ந்த
ஆலமரம் வரைக்கும் அதிகஇறை வைத்தனனே
வட்டிக்கும் ஆயம் வலங்கைசான் றோர்கருப்புக்
கட்டிக்கும் ஆயம் கடுநீசன் வைத்தனனே
பாழிலே சான்றோர்க்குப் படுநீசன் கொள்ளுகின்ற
ஊழியங்க ளெல்லாம் உரைக்கக்கே ளன்போரே
பனைகேட் டடிப்பான் பதனீர்கேட் டேயடிப்பான்
கனத்த கற்கண்டு கருப்புக்கட்டிக் கேட்டடிப்பான்
நாருவட்டி யோலை நாள்தோறுங் கேட்டடிப்பான்
வாதுக்கு நொங்கு வாய்கொண்டு கேட்டடிப்பான்
நெடுமட்டைக் கேட்பான் நெட்டோலை தான்கேட்பான்
கொடுவா வெனவே கூழ்பதனீர் கேட்டடிப்பான்
சில்லுக் கருப்புக்கட்டி சீரகமிட்டே வூற்றிக்
கொல்லைதனில் சான்றோரைக் கொண்டுவா என்றடிப்பான்
மீச்சுக் கருப்புக்கட்டி மிளகுபல காரமிட்டு
வீச்சுடனே கொண்டு வீட்டில்வா வென்றடிப்பான்
வட்டிக் கருப்புக்கட்டி மணற்கருப்புக் கட்டியொடு
வெட்டக் கருப்புக்கட்டி வெண்கருப்புக் கட்டியொடு
தோண்டிக்கும் பாய்க்கும் சுமடதுக் குமோலை
வேண்டியதெல் லாமெடுத்து விரைவில்வா என்றடிப்பான்
காலைப் பதனீர் கண்முற்றா நொங்குகளும்
மாலைப் பதனீர் வற்றக்கா யும்பதனீர்
கொதிக்கும் பதனீர் கொண்டுவா என்றடிப்பான்
விதிக்குகந்த சான்றோர் விரைவாய்க் கொடுத்திடவே
இத்தனையும் வேண்டி இவன்கொண்டு போனாலும்
பத்தியுள்ள சான்றோர்க்குப் படுந்துயர மாறாதே
பனையிலுள்ள வஸ்து பலநாளு மிப்படியே
வினைகொண்ட பாவி வேண்டியவன் போனாலும்
சான்றோர்க்கு நன்மை சற்றுசெய்ய வேணுமென்று
மாண்டோர் கணீசன் மனதில்வைக்க மாட்டானே

உய்கொண்ட சான்றோர் உடம்புருகுந் தேட்டையெல்லாம்
நொய்கொண்ட நீசன் நோகப் பறித்தானே
இப்படியே சான்றோர் இவர்தேடுந் தேட்டையெல்லாம்
அப்படியே நீசன் அவன்பறித்துத் தின்றாலும்
ஞாயமுள்ளச் சான்றோர் நாமமது கேட்டதுண்டால்
நீசக்குலத் தோர்விரட்டி நெடுந்தூரங் கொண்டடிப்பார்
பின்னுமந்தச் சான்றோரைப் பொல்லாதான் கொள்ளுகின்ற
அன்னீத மெல்லாம் அருளக்கே ளாயிளையே
உப்பா லுவரா உபய மெடுத்தவரை
ஒப்பமுள்ள சான்றோரை ஊழியங்கள் கொண்டடிப்பான்
குளம்வெட்டச் சொல்லிக் கூலி கொடுக்காமல்
களம்பெரிய சான்றோரைக் கைக்குட்டை போட்டடிப்பான்
சாணார்கள் தம்பனையில் தான்முளைத்த ஓலையெல்லாம்
வீணாக நீசன் வெட்டித்தா என்றடிப்பான்
வெட்டிக் கொடுத்தாலும் வெற்றியுள்ளச் சான்றோரைக்
கட்டிக் சுமவெனவே கைக்குட்டை போட்டடித்து
சுமந்து போனாலும் தொகையெண் ணமுங்கேட்டுப்
பவந்து மொழிபேசிப் பணமுமிகக் கேட்டடிப்பான்
ஐயையோ சான்றோரை அந்நீசன் செய்ததெல்லாம்
வையமது கொள்ளாதே மாதேவுன் னோடுரைத்தால்
ஈசருக்கும் வேதா இவர்களுக்குந் தேவாதி
வாச முடன்பதறி வணங்கிநின்ற வேலையைப்போல்
நேசமுள்ள சான்றோர் நெடுநாளு மேபதறி
நீசனுக்குச் செய்த நிசவேலை யொக்குமல்லோ
ஈப்புலிபோல் நீசன் ஈயைப்போ லேசான்றோர்
நாய்ப்புலிபோல் நீசன் நல்லாடு போல்சான்றோர்
கீரியைப்போல் நீசன் கிராணம்போ லேசான்றோர்
பாரியைப்போல் நீசன் படுத்தினான் சான்றோரை
பண்டுநீ சன் ச பித்த படுசாபந் தன்னாலே
விண்டுரையா வண்ணம் விசையடக்கித் தாழ்ந்திருந்தார்
இப்படியே ஊழியங்கள் எண்ணலக்கில் லாதபடி
அப்படியே சான்றோர் அவனூழி யங்கள்செய்து
அல்லாமல் நீசன் ஆர்க்கமுள்ள சான்றோர்க்கு
வல்லாண்மை யான வரிசை யிறைகள்வைத்துக்
கரி இ றை பாட்டஇறை கண்டபாட் டஇறையும்
தரிசிறை காணாத தரைப்பாட் டஇறையும்
ஆமிசங்க ளில்லாத அன்னீத வம்பிறையும்
நேமித்து வைத்து நிலையுள்ளச் சான்றோரை
அடித்துக் கைகெட்டி ஆண்பெண் வரைக்குமிட்டு
இடித்தடைத்துப் பட்டினிகள் இரவுபகல் போட்டுப்
பெண்ணா ணுடைய பெருமை மிகக்குலைத்து
மண்ணாண்ட சான்றோரை வரம்பழித்து மாநீசன்
சாணாரைக் கண்ணில் தான்காண வொட்டாமல்
வீணாட்டஞ் செய்து விரட்டி யடித்துமிகப்
பம்பழித்துச் சாணாரைப் பலசாதி யின்கீழாய்த்
தும்பழித்து வேலை தூறுபடக் கொண்டனனே

பறையன் புலையன் பகல்வரான் போகுமிடம்
மறையொத்த சான்றோர் வந்தால் பிழையெனவே
முக்காலி கட்டி முதுகி லடித்துமிக
மிக்கான பொன்பணங்கள் வேண்டினான் பிழையெனவே
சாணான்தன் வஸ்து தரணி தனக்குயிராம்
ஆனாலுஞ் சான்றோர்க்கு அடியொருநாள் மாறாது
கோவில் சிவாலயங்கள் கூடங்கள்சிங் காசனங்கள்
நாவுலகுங் கள்ளாய் நாடி யிருந்தாலும்
சாணான்கள் ளேறியெனச் சண்டாள நீசனெல்லாம்
வீணாகச் சாணாரை விரட்டி யடிப்பான்காண்
சாணுடம்பு கொண்டு தரணிமிக ஆண்டாலும்
வீணுடம்பு கொண்டோர் விரித்துரைத் தோராமல்
சாணான்சா ணானெனவே சண்டாள நீசனெல்லாம்
கோணா துளத்தோரைக் கோட்டிசெய் தேயடித்தான்
தரணிதனில் வந்து தலையெடுத்த யாவருக்கும்
மரணம் வரைக்கும் வந்துதித்த அன்றுமுதல்
சேனைமிக வூட்டுதற்கும் தெய்வச்சான் றோரமிர்தம்
ஈனம தில்லாமல் யாபேர்க்கு மீந்தாலும்
பொல்லாத நீசன் பொறுதியுள்ளச் சான்றோரை
கல்லாதான் கூடிக் காணவிடா தேயடித்தான்
நீசன் குடியிருக்க நிறைந்தமணி மேடையெல்லாம்
வாசமுடன் சான்றோர் வஸ்துவல்லா லாகாது
அப்படியே சான்றோர் அவருதவி செய்திடினும்
எப்படியுஞ் சான்றோர் இடுக்கமது மாறவில்லை
எவரெவர்க்குஞ் சான்றோர் ஈந்துமிக வந்தாலும்
அவர்களுக்கு நீசன் அனுப்போ லுறவுமில்லை
பாலரியச் சான்றோர் படுந்துயரங் கண்டிருந்து
மாலதிகக் கோபமுடன் மாநீ சனைப்பார்த்து

விளக்கம்:

கலிநீசன் கொடுமைகள்

கன்னிமார்கள் பெற்ற சான்றோர் மக்கள் பத்திரகாளியின் இன்பம் ஊட்டி ஒரு தாய் வயிற்றுபிள்ளைகள் போல் ஆனந்தமாய் வளர்ந்த பிள்ளைகள் ஆவர் , கர்ம வினையின் காரணமாக அவர்களுக்குள்ளே மன குழப்பம் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் பகை கொண்டு எதிரியை போல் மாறினார்கள். ஒருவன் மற்றவனை கெடுதல் செய்ய வேண்டும் என்றே, இல்லாத கோள் வார்த்தைகளை கலி மன்னனிடம் வஞ்சகமாக சொல்லி கொடுத்தான்.

தன் உடன் பிறந்த அண்ணனை அடித்து உதைப்பதற்கு கைக்கூலியாக லஞ்சம் கொடுத்து பகை தீர்த்தான். தன் உடன் பிறந்தவர்களை ஒழித்துக்கட்டும்வரை விடாமுயற்சியாக, பலவிதமான குற்றங்களை கூறி வந்தான். இது போன்று பல சூழ்ச்சிகளினால் சான்றோர் மக்களுக்குள் நல்ல ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள்.

கோளும், பழிவாங்குதலும், வஞ்சக செயல்களும், இவர்களுக்குள் ஏற்பட்டதால் , கலியன் சான்றோர்களை தனிதனியாக பிரிந்து வாழ வைத்தான். இதனால் சான்றோர்கள் தனித்தனியாக பிரித்து எண்ணிக்கையில் குறைந்தவர்களாக பெரிய பாதிப்புக்கு உள்ளானார்கள். அவர்களின் ஒன்றுமை சீர்குலைந்து விட்டது. அவர்களின் பலவீனத்தை அறிந்து அதை தனக்கு சாதகமாக பயன்படுத்தி செயல்பட்டான்.

கணவன் ,மனைவிக்கு கட்டிய தாலிக்கு வரி விதித்தது முதல், தரையில் கிடக்கும் குப்பை கூளங்கள் வரை வரி விதித்தான். மரமேறித் தொழில் செய்பவர்களுக்கு வரி, சான்றோர்கள் வளர்க்கும் ஆடு, மாடு போன்ற மிருகங்களுக்கு வரி, நின்றால் வரி, உட்கார்ந்தால் வரி, குனிந்து நிமிர்ந்தால் வரி, இப்படி வெளிப்படையாகப் பல வரிகளை விதித்தான்.

மேலும் இயற்கையாக வளர்ந்த மரங்கள், ஆலமரங்கள், பனையேறும் தொழில் புரிய உதவும் பொருள்களுக்கு வரி, கிணற்றுக்கு வரி, குளத்துக்கு வரி, பனை ஓலை வைத்து செய்யக் கூடியப் பொருள்களுக்கு வரி, கருப்பு கட்டிக்கு வரி, அதாவது பதநீரினால் செய்யப்படுகின்ற அனைத்து பொருட்களுக்கும் வரி என்று மக்களுக்கு சுமைக் கொடுத்தான். இப்படியாக அவர்கள் உழைக்கின்ற கூலி எல்லாம் கலிநீச மன்னனுக்கு வரி கொடுப்பதற்கே சரியாக இருந்தது.

இதனால் சான்றோர் மக்கள் தங்கள் வாழ்வில் எந்த ஒரு முன்னேற்றப் பாதையும் தென்படாமல் அடிமைப் போல் வாடினார்கள். இரக்கமில்லாத மன்னன் பலவழிகளில் வரிசுமையை சான்றோர் மக்களுக்கு கொடுத்தான்.

மேலும் ஆண், பெண்கள் என்ற பேதம் இல்லாமலும், பெண்களின் மீது அனுதாபம் காட்டாமலும் இருபாலரும் முளங்காலுக்கு கீழ் ஆடை அணியக்கூடாது என உத்தரவுப் போட்டான். ஆண்களும் பெண்களும் மேலாடை அணிய கூடாது உத்தரவு போட்டான். பெண்கள் இடுப்பில் குடம் எடுத்தல் கூடாது இறக்கு என்று அடிப்பான். பெண்கள் தோளில் சேலை போட்டால் போடக்கூடாது என்று அடித்து துன்புறுத்துவான். இப்படியே வாழ்க்கையை பாழாக்கி சான்றோர் மக்களை அடிமை தனம் செய்து வந்தான். மேலும் மன்னன் மக்களிடம் கட்டிடம் கட்ட வேண்டும் என்று, அதற்கு தேவையான மரங்களை கொண்டு வரவேண்டும் என்றுக் கேட்பான். [கி.பி 1545 கொல்லம் ஆண்டு 720-ல் வீர ரவி வர்மா ஆட்சி நடந்தக் காலம்]

குடிக்கப் பதநீர் கேட்பான். கொடுக்க தாமதித்தால் உடனே அடிப்பான். தரமான பணக்கற்கண்டு கேட்பான். பனையேறும் தொழில் செய்பவர்களிடம் வீட்டிற்குத் தேவையான கருப்புக்கட்டி நாரினால் முடிந்த நார் பெட்டியில் வைத்துக் கொண்டுச் செல்லும்படிக் கேட்டு , அதில் ஏதேனும் குறை ஏற்பட்டு விட்டால் உடனே துன்புறுத்துவான். பனை ஓலைப்பெட்டி முடைந்து (உருவாக்கி) தினமும் கொண்டுக் கொடுக்க வேண்டும். நுங்கு, பதநீர், கள், மற்றும் பனை மட்டை, நார் குருத்தோலை, வட்டு கருப்பு கட்டி, சுக்கு போட்டுக் கருப்பு கட்டி ,வற்ற காய்ந்த கூப்பதனீர், மற்றும் சீரகம் போட்டு சுக்கு கருப்புகட்டி கேட்டு அடிப்பான்.

இப்படியாக அவன் கேட்பதை எல்லாம் கொடுக்க வேண்டும் பாவம் மக்கள் அவர்கள் முழு நேரத்தையும் அந்த மன்னனுக்கு பொருள் கொண்டு சென்று தொலைத்தார்கள். அவர்களுக்கு அன்னம் தண்ணீர் சாப்பிட நேரமில்லாமல் அவனுக்கே அடிமை வேலை செய்து அங்கும் இங்கும் நடந்து, ஓடாய் தேய்ந்தார்கள். முன்வாசல் வழியாக போனால் அடிப்பான். கொத்தடிமை போல் பின்வாசல் வழியாக தான் பொருட்களை கொண்டு செல்ல வேண்டும் சான்றோர்களை பனை ஏறி என்றும், இழிக்குலத்தவர்கள் என்றும் ஏசிப்பேசுவான்.

அதிகாலையில் சுண்ணாம்பு கலந்த பதனீர், பிற்பகலில் மாலை பதனீர்,சந்தியா வேளையில் சுண்ணாம்பு இல்லாத போதையேற்றும் கள், இப்படியாக அவன் கேட்கிற போதெல்லாம் கொடுத்தாலும் அவன் குணம் மாறாது. கிடைக்காத காலங்களிலும் இப்படி அவன் கேட்ட பொருட்களையும் கொடுத்து, அவன் விதித்த கடுமையான வரிகளையும் கொடுத்தாலும் சான்றோர்களுக்கு கொடுத்தத் துன்பம் மாறவில்லை.

சான்றோர்கள் அவன் விரும்பிய படியே செயல்பட்டார்கள். பணிவோடும், மரியாதையோடும் அடிமைகளாக நடந்த சான்றோர் மக்கள் பட்டத் துயரங்கள் தீரவில்லை. கற்பக விருட்சம் ஆகிய மரங்களில் இருந்து கிடைக்கிற எல்லா செல்வங்களையும் உழைப்பில் இடைவிடாமல் நேரத்தை செலுத்தி கஷ்டப்பட்டு என்றென்றும் கொண்டு கொடுத்தாலும், பாவி அவன் அவ்வளவு செல்வத்தையும் வாங்கி அனுபவித்தாலும், நிறைவு பெறாமல் சான்றோர் மக்களுக்கு கருணை காட்டி உதவி செய்ய எண்ணம் இல்லாமல் நீசன் இரக்கமற்ற கல் நெஞ்சனாகவே இருந்தான்.

பாவம் சான்றோர்கள் பனைமரம் ஏறி உழைத்துப் பெற்ற செல்வங்களை எல்லாம், வரி என்ற பெயரில் இழந்து வறுமையில் வாடினார்கள் . ஆனால் வாங்கி பறித்து வாழ்ந்த கலி நீசர்கள் சுகமாக வாழ்ந்தார்கள். வியர்வை சிந்தி அரும் பாடுபட்டு சேர்த்தப் பொருள்களை எல்லாம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மிரட்டி வாங்கிக் கொள்வான்.

நல்வழியில் நடந்து பிறருக்குத் துன்பம் கொடுக்காமல் நீதி நெறிக்கு கட்டுப்பட்டு வாழ்ந்த சான்றோர் குலத்தவர்களை, இவர்கள் இழிக் குலத்தவர்கள் என்று பக்கத்தில் நெருங்க விடாமல் ஓட ஓட விரட்டி விரட்டி அடித்தார்கள். அதுமட்டுமல்லாமல் கடுமையான வேலைகளை ஏவி துன்பப்படுத்துவார்கள்.

உற்பத்தியாகும் உப்பளங்களில் உள்ள உப்புகளை மூட்டைகளாக்கிச் சான்றோர் சுமக்க வைப்பான். ஆறு, குளங்களை வெட்டச் சொல்வான், அணைகளை கட்டச் சொல்வான், மண் சுமக்க ஏவி விடுவான். வேலை செய்தால் கூலிக் கொடுக்க மாட்டான். வேலைச் செய்யும்பொழுது சான்றோர்களுக்குத் தாகத்திற்கு தண்ணீர் கொடுக்க மாட்டான். அரும்பசிக்கு ஆகாரம் கொடுக்க மாட்டான். சிறிது நேரம் கூட ஓய்வு கொடுக்க மாட்டான்.

அவர்கள் பட்ட பாடுகளை எல்லாம் பகவான் நாராயணர் மனம் சகித்துக்கொள்ள முடியாமல் வைகுண்டத்தில் இருந்த மகாலட்சுமியிடம் மனக்கவலையோடு கூறுவார், என் மக்களாகிய சான்றோர்கள், வாழ்க்கை

போராட்டத்தை முடித்து கொண்டு, மணிமுடி சூட போகின்றவர்கள். அவர்களை திருட்டு பட்டம் கட்டி இழிகுலத்தோர் என்று பழித்து பேசுகிறான். தேவையில்லாமல் குற்றம் சொல்லி நஷ்ட ஈடு கேட்டு துன்ப படுத்துகிறான்.

கலி நீச மன்னன் மக்களுக்கு கொடுத்த சாதி கொடுமைகளை எல்லாம் உலக மக்களால் தாங்கி கொள்ள முடியாது. நாடும் தாங்கி கொள்ளாது என்று கவலையோடு நாராயணர் லட்சுமி தேவியுடன் கூறுகிறார். கைலாசத்தில் இருக்கின்ற சிவபெருமானுக்கு பிரம்ம லோகத்தில் வாழும் தேவாதி தேவர்கள் இருக்கின்ற இடத்திற்கு சென்று, பற்றுதலோடு தலைவணங்கி குனிந்து நின்று செய்கின்ற பணிவிடைகள் போல், நான் நேசித்து பெற்ற என்னுடைய பிள்ளைகள் நீண்ட நெடுநாட்களாக மனம் பதறியபடி பணிந்து அடிமைகளை போல் வேலைச் செய்கிறார்கள்.

ஆனால் கடித்து குதறும் புலியை போல் அரச குடும்பத்தார், சிறு புழுக்கள் போல் சான்றோர்கள் நலிந்து காணப்பட்டார்கள். கொடுமையான சிங்கத்தை போல் கலியனும், சிங்கத்திற்கு இரையாக போகும் மானை போல் சான்றோர்கள். கீரைக்கு பயந்து ஓடும் பாம்பு போல் சான்றோர்கள் வாழ்ந்தார்கள். சிறகடித்து பறக்கும் கருடனை போல் கலியன் ஆணவம் கொண்டு மேல் உச்சத்தில் நின்றான்.

கலியுகத்தில் ஆரம்பக் காலகட்டத்தில் மன்னனின் சாபமானது அவன் உயிர் பிரியும் நேரத்தில், மரணத் துடிப்போடு பழித்து கொடுத்த சாபம். ஆகையால்தான் சான்றோர்கள் அவர்களின் சக்திகளை எல்லாம் அடக்கி கொண்டு பொறுமையாக இருந்தார்கள். அதனால் கொத்தடிமைகளாக கலியனுக்கு வேலை செய்தார்கள். நீசன் ஏவுகின்ற வேலைகளை மறுப்பு சொல்லாமல் சான்றோர்கள் வியர்வை சிந்தி வேதனையோடு செய்தனர்.

பாவிக்கும், அவனை சார்ந்தவர்களுக்கும் பக்கபலமாக நின்று ஆதாயமான காரியங்கள் யாவையும் சான்றோர்கள் செய்தும் பல விதத்திலும் கொடுமைகள் தான் புரிந்தான். சான்றோர்கள் செய்து வந்த விவசாய தொழிலுக்கு தீர்வை கட்ட சொல்வான். மேலும் கீழ் சாதி என்று என்று தரக்குறைவாக பேசி வரி கட்ட வைப்பான் .

தரிசு நிலங்களுக்கு வரி, கண்ணை திறந்தால் வரி, திரும்பி பார்த்தால் வரி, என்று வரிக்கு மேல் வரி விதித்து அநியாய முறையில் துன்பங்களை செய்து சான்றோர்களை வறுமைநிலையை அடைய செய்தான். கலியன் விதித்த விதியின் கொடுமையால் சான்றோர்கள் நிலை குலைந்தனர். மேலும் கலியன் வரி கட்ட தவறியவர்கள் ஆண், பெண் என்று அனுதாபம் காட்டாமல், அடித்து கை, கால்களில் விலங்கிட்டு சிறையில் தள்ளி, ஆகாரம் எதுவும் கொடுக்காமல் பட்டினி போட்டு சித்திரவதை செய்திடுவான். சான்றோர்கள் அந்தஸ்தை இழந்து திண்டாடி போனார்கள்.

கலி நீசன் செல்வ செழிப்போடு கம்பீரமாய் காட்சி அளித்தும், சப்த கன்னிமார்கள் பெற்ற சான்றோர் மக்களை நிலைகுலைய வைத்தான். சான்றோரை எதிருக்கு எதிராக வரவிடாமலும், பாவி பக்கத்தில் நெருங்க விடாமலும், வீண் ஆர்ப்பாட்டம் செய்து கேவலமாக விரட்டி அடித்தான். தூய

மனதோடு வாழ்ந்த சான்றோரை பனை ஏறிச் சாணான் என்று கொச்சை படுத்தியும் ,வசை மொழிகள் பேசியும் தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்த்தான். கீழ்சாதி மக்கள் என்று ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், பெண்களை இடுப்பில் குடம் எடுக்க விடாமல் இறக்கி தலையில் எடு என்று அடிப்பான்.

"பூ மக்கள் நீதமுடன் போட்டத் தோள்சீலை தன்னை போடாதே என்றடித்தானே
சிவனே அய்யா
என் மக்கள் சான்றோர்கள் இடுப்பில் எடுத்தக்குடம்
ஏண்டி இறக்கென்றானே சிவனே அய்யா"

ஆண்களை முழங்காலின் மேல் துண்டு உடுக்க ஆணையிட்டான். வேஷ்டி உடுக்க சம்மதம் கொடுக்க மாட்டான். வேதாகமத்திற்கு ஒப்பான நாடார் குல மக்களை தலையில் தலைப்பாகை கட்ட விடாமல் பாவி, தலையில் பனை நாரை கட்டும்படி அடிப்பான். அவன் விருப்பத்திற்கு மாறாக செயல்பட்டால் கடுமையான தண்டனையும் கொடுத்து, அபராதமாக பணம் கட்ட செய்வான்.

குற்றம் செய்தால் முக்காலியில் கட்டி வைத்து அதற்குள் விட்டு அடிப்பான். உழைத்து சேர்த்த எல்லா பொருட்களையும் அடித்துப் பிடித்து கொண்டான். கலி நீசனுடைய அரண்மனை, அவன் அமரும் சிம்மாசனம் எல்லாமே சான்றோர்களின் உதிரம் சிந்தி வியர்வையால் நனைந்து சம்பாதித்த மரத்தாலானது ஆகும். அவர்களிடமிருந்து அத்தனையும் அபகரித்து கொண்டான்.

சான்றோர்கள் அவர்களுக்கு தேவையாக வைத்திருந்த எல்லா பொருட்களையும் கலி நீசன் கொடுத்தும், அவர்கள் துன்பமும், துயரமும் மாறவே இல்லை. சான்றோர் குலமக்கள் மேல் கலி நீச மக்களுக்கு அணு அளவு கூட கருணையோ நன்றியோ இல்லாமல் போய்விட்டது என்று மனதில் ஏற்பட்ட ஆதங்கத்தை நாராயணர் லட்சுமி தேவியுடன் எடுத்து சொல்லி ஆறுதல் அடைந்தார்.

************

# DAY 27

## ஸ்ரீபத்ம நாபர் கலியரசனுக்கு உபதேசித்தல்

கேளடா சூத்திராவுன் கிளையோடே மாளுதற்கு
வாளடா சான்றோரை வம்புசெய்து வாறதுதான்
உன்றனக்கு முன்கிளைகள் உள்ளோர்க்கும் நாள்தோறும்
என்றனக்கும் நன்மை இன்பமுடன் செய்துவரும்
சாணாரை நீயும் தடிமுறண்டு செய்கிறது
வாணாள்க் கிடறு வருமடா மாநீசா
தீத்தனலைச் சேர்த்து சிவகங்கையில் பிறந்த
பார்த்தன் வழிக்குலங்கள் பகைத்துன்னை சாபமிட்டால்

வான மிடியாலும் வான மழையாலும்
ஆன கடலாலும் அக்கினி தன்னாலும்
நாட்டை முடிக்குமடா நல்ல சாணாத்திகற்பு
கோட்டை இடியுமடா கோத்திரங்கள் தான்முடியும்
சேனையழியுமடா உன் செல்வமது குன்றுமடா
வான நட்சத்திரத்திரத்தாலும் வம்மிசங்கள் தான்முடியும்
என்று கலிநீசனுக்கு எம்பெருமாள் கூறிடவே
அன்று அந்த கலியன் அதற்கேது சொல்லலுற்றான்
உன் சாபமானாலும் உயர்காளி சாபமானாலும்
கன்னி சாபமானாலும் கபாலி சாபமானாலும்
சிவ சாபமானாலும் சக்தி சாபமானாலும்
ஜீவசெந்தெல்லாம் சேர்ந்து சாபமிட்டாலும்
என்றினிடத்தில் எள்ளளவும் வாராதே
வந்தாலும் அணுகாதே சிவமூல கருவிருக்கு
என்று கலியுரைத்தான் எம்பெருமாள் அச்சுதற்கு
அன்று அந்த மாயன் அதற்கேது சொல்லலுற்றார்
முன்னுகத்தில் கேளு முகமைந்து கொண்டோனும்
உன்னோடும் பிறவி ஒருயேழு உண்டுமடா
ஒண்ணாம் யுகத்துக்கு உற்ற குறோணியடா
மண்ணெல்லாங் குறோணி வந்தெடுத்து விழுங்குகையில்
பூதக் குருமுனிவன் புத்திசொன்னா னவ்வுகத்தில்
நீதமுடன் கேளாமல் நீசனவன் மாண்டான்காண்
அடுத்த யுகமதிலே அக்குண்டோம சாலினுக்குக்
கடுத்தமுள்ள கோவிரிஷி கடியபுத்தி சொன்னான்காண்
கேளா தேமாண்டான் கிளையோடே யந்நீசன்
பாழாகிப் பின்னும் பதிந்தமூன் றாம்யுகத்தில்
மல்லோசி வாகனென்று வந்த இருவருக்கும்
நல்லபெல ரோமரிஷி நாடிமிகப் புத்திசொன்னான்
கேளாதே மாண்டான் கிரேதா யுகந்தனிலே
தாழாத சூரபற்பன் தம்பி யவன்றனக்கும்
வீரவா குதேவர் விரைந்துமிகப் புத்திசொன்னார்
தாராமல் சூரன் தன்கிளையோ டேமாண்டான்
அவ்வுகத்தில் வந்த அசுர னிரணியற்குச்
செவ்வுகந்த சிங்கம் செப்பினதே புத்தியது
சற்றுமவன் கேளாமல் தான்மாண்டா னவ்வசுரன்
பத்தத் தலையான பார அரக்கனுக்குத்
தம்பிவி பீஷணனும் தான்சொன்னான் புத்தியது
வம்பிலவன் கேளாமல் மாண்டான் கிளையோடே
பின்னுந்துரி யோதனனாய்ப் பிறந்தான் மறுயுகத்தில்
மன்னுகந்த பீஷ்மரும் வாழ்த்திமிகப் புத்திசொன்னார்
கேளாமல் மாண்டான் கேடுகெட்ட மாபாவி
தாழம லுன்றனக்கு தற்சொரூபத்தோ டிருந்து
நாரா யணராய் நானுதித்து உன்றனக்குச்
சீரான புத்தி செப்புகிறேன் கேளடவா
உன்கிளையும் நீயும் உற்றார்பெற் றார்களுடன்
தன்கிளையோ டெநீயும் தரணியர சாளவென்றால்

பொல்லாங்கு செய்யாமல் புவியாளு என்றனரே
அல்லாமல் சான்றோர்கள் அபயமிடும் ஒலிகள்
என்னாலே கேட்டு இங்கிருக்க முடியவில்லை
மண்ணாண்டிருந்த மாகாளி மக்களல்லோ
சாதி தனிலுயர்ந்த சான்றோ ரவர்களுக்கு
நீதி யுடனிறைகள் இல்லாமல் நீக்கிவைத்துக்
காளி வளர்த்தெடுத்த கண்மணிக ளானோர்க்கு
ஊழியமுந் தவிருநீ உலகாள வேணுமென்றால்
அல்லாமல் சான்றோரை அன்னீத மாயடித்தால்
பொல்லாத நீசா புழுக்குழிக் குள்ளாவாய்
கற்புள்ள சாணாத்தி கதறியுன்னைச் சாபமிட்டால்
அற்படியும் உன்கோட்டை அழிந்துபொடி யாகுமடா
சாணாத்தி யுன்னைச் சாங்கமுடன் சபித்தால்
வாணாளழியு முன்றன் வம்மிசங்கள் தாமுடியும்
தீத்தழலில் விந்து சிக்கி மிகப்பிறந்த
பார்த்தன் வழிக்குலங்கள் பகைந்துநிந் தித்துண்டால்
கோட்டை யிடியுமடா கோத்திரங்கள் தாமுடியும்
நாட்டை முடிக்குமடா நல்லசா ணாத்திகற்பு
சேனை யழியுமடாவுன் செல்வமது குன்றுமடா
வான மிடிந்துன் வம்மிசத்தைக் கொல்லுமடா
திடம்பெரிய சாணாத்தி தினமுனைநிந் தித்ததுண்டால்
கடல்வந்துன் சீமைதனை கட்டா யழிக்குமடா
ஊக்கமுள்ள சான்றோர்க்கு ஊழியங்க ளில்லையென்று
ஆக்கமுடன் பறைதான் அடித்தவனி தானறிய
அல்லாதே போனால் அரசாள மாட்டாய்நீ
நல்லான சான்றோர்க்கு நாட்டு மிறைதவிர்த்து
இறைகூலி தானம் இட்டுக் கொடுத்தவர்க்குத்
தரைமீது நன்றாய்த் தழைத்திருக்க வைக்காட்டால்
குஞ்சரமு முன்னுடைய கொத்தளமுந் தானிடித்து
வஞ்சகமா யுன்றனக்கு வலியகர்மஞ் சுற்றுமடா
கர்ம வியாதிகளாய்க் கண்டமா லையுடனே
வர்மம்வந்து சிக்குமடா மாநீசா நீகேளு
தெய்வச் சாணாத்தி தினமுனைநிந் தித்ததுண்டால்
பொய்வகையால் கர்ம போகத்தால் நீமடிவாய்
என்றுநா ராயணரும் ஏற்றபுத்தி சொல்லிடவே
அன்றுஅந்த நீசன் அதற்கேது சொல்லலுற்றான்
மாயவரே நீர்கேளும் வாய்த்தசான் றோர்களைத்தான்
ஆயரே நீரும் அபுருவமாய்ச் சொன்னீரே
சாதிகட் கீழான சாணார்கள் தங்களுக்கு
வீரியமா யித்தனையும் விவரித்துச் சொன்னீரே
சாணார்க்கு வைத்த தலைவீத முள்ளஇறை - என்
என்வாணா ளழிந்திடினும் மாற்றிவைக்கப் போறதில்லை
என்சீவ னுள்ளளவும் ஏற்றசா ணான்தனக்கு
வன்பான ஊழியங்கள் மாற்றிநான் வைப்பதில்லை
நீர்தா னுமிந்த நிலைபேர்ந்து சாணாரின்
ஊரா னதிலே உறைந்திருக்கப் போனாலும்

கேட்பதில்லை சாணாரின் கேள்விநான் கேட்பதில்லை
தாட்பதல்லால் சாணாரின் சங்கடங்கள் கேட்பதில்லை
என்றந்த நீசன் இத்தனையு மாயருடன்
அன்றுரைக்கபின்னும் அருளுவாரச்சுதரும்
தாவியு ரைக்கச் சாற்றுவா ரச்சுதரும்
பாவி யுனது பவிசெல்லாந் தான்மாறி
ஆவிக்கு நரகம் ஆவதற்கோ என்னோடே
இந்த மொழியுரைத்தாய் ஏனடா மாநீசா
உன்றனுட ஊருவிட்டு ஓடிப்போ வென்றனையே
ஆனாலுஞ் சாணார்க்கு அடியும்பல ஊழியமும்
மானாந்திர இறையும் மாற்றிவை யென்றுரைத்தார்
அப்போது நீசன் அச்சுதரைத் தான்பார்த்து
வெப்போடு கோப வெகுளியாய்த் தானுரைப்பான்
மாலைகா லைநேரம் மாயவனே உன்றனக்குச்
சீலமுள்ளப் பூசை செய்துவ ருவதற்கு
நித்தமொரு நூறுபொன் நினக்குச் செலவுமுண்டே
அத்தனையுங் கிட்டிடுமோ அவனிறைகள் தான்தடுத்தால்
அல்லாம லென்றனக்கு ஆயிரத்தி நூறுபொன்
எல்லாத் திருப்பதிக்கும் என்றனக்கும் வேணுமல்லோ
என் வேலையாக இருக்கின்ற பேர்களுக்குப்
பொன்பதி னாயிரந்தான் போடணுமே சம்பளங்கள்
இப்பொன்னுக் கெல்லாம் யானெங்கே போவேனடா
அப்பொன்னுக் கெல்லாம் அவனை யடித்தல்லவோ
வேண்டித்தா னித்தனையும் விதானிக்க வேணுமல்லோ
ஆண்டியுன் சொல்லை யான்கேட்க ஞாயமுண்டோ
என்னோடு தானிருந்து இந்தமொழி சொன்னாயே
உன்னோடு யென்றனக்கு உறவென்ன நீபோடா
முன்னெல்லாம் நீதான் உதவியோ யென்றனக்கு
இந்நிலத்தை விட்டு எங்கானா லும்போடா
அதுக்கந்த நீசன் அடடா என்றிடவே
பொதுக்கென்ற கோபமதைப் புந்திதனி லடக்கிச்
சொல்லுவார் பின்னும் சீவனம்போ லுள்ளபுத்தி
பல்லுயிருக் கெல்லாம் படியளக்கு மாலோனும்
இத்தனையும் வேண்டி என்றனக்குப் பூசையது
நித்தமும்நீ செய்யெனவே நின்னோடு கேட்டேனோ
பூசைசெய்தாய் நீயும் பிராமண நம்பூரிகட்குத்
தேச மறியாதோ செப்பாதோ சாட்சியது
ஏற்கா திருப்பதற்கு ஏற்ற அடையாளம்
தெற்கே தலைவைத்துச் சென்றதுவுங் காணலையோ
பின்னுமந்தப் பூசை புனக்கார மானதெல்லாம்
பின்னுங் கடைச்சாதி புலச்சிகை யெச்சித்தீதான்
அறியலையோ நான்தான் அமுதேற் றிருப்பதுதான்
வெறிகொண்ட நீசா மேதினிகள் சொல்லாதோ
என்றந்த மாலும் இத்தனையுஞ் சொல்லிடவே
அன்றந்த நீசன் அதற்கேது சொல்லலுற்றான்

நான்தந்த தொன்றும் நாவில்வைக்க வில்லையென்றால்
என்தொந் தமாக என்னோ டிருப்பதென்ன
போபோ நீதானும் போகு மிடந்தனிலே
நீபோ வெனவே நிகழ்த்தினான் மாயவரை
அப்போது மாயன் அதிகக் கோபத்துடனே
இப்போது நீசனைப்பார்த்து ஏதுரைப்பா ரம்மானை

விளக்கம்:
ஸ்ரீ பத்ம நாபர் கலியரசனுக்கு உபதேசித்தல்

கற்பக விருட்சம் ஆகிய பனை மரத்தில் இருந்து கிடைக்கின்ற ஞானப்பாலாகிய பதனீரை ஈந்து கொடுக்கின்ற சான்றோர்களை படுத்தும் பாடுகளையும், துயரங்களையும் பார்த்துக்கொண்டிருக்கும் தகப்பனாகிய திருமால் தாங்கி கொள்ள முடியாத கோபம் கொண்டு, வேகத்துடன் வெகுண்டெழுந்து கலி நீசனை பார்த்து அறிவு கெட்ட முட்டாள், நான் சொல்வதை நீ கேளடா! உன்னுடைய தந்திரங்கள் இனி எடுபடாது. உன் இனத்தைக் கூண்டோடு அழிப்பதற்கு கொல்லும் ஆயுதமாக இருப்பது, நீங்கள் சான்றோரை கொடுமைப்படுத்தியதாகும். அதனால் வரும் கேடுகள் தான் என்பதை மறந்து விடாதே! உனக்கு முன்னால் உள்ள தலைமுறைக்கும், உன் நாட்டு மக்களுக்கும் கேடு காலம் நெருங்கிவிட்டது.

திருமாலாகிய எனக்கு நன்மையான காரியங்களை மட்டுமே மன நிறைவுடன் செய்து வருகின்ற சான்றோர்களாகிய என்னுடைய மக்களை தேவையில்லாமல் தடியால் அடித்து கொடிய செயல்களை செய்வதால், அது உன்னுடைய ஆயுளுக்கு ஆபத்தை நெருங்க செய்து கொண்டே வருகிறது என்பதைப் புரிந்து கொள். உன்னுடைய முன் ஜென்ம பிறவிகள் எப்படி உள்ளது என்று உனக்கு தெரியுமா? நான் விவரமாகக் கூறுகிறேன் கேள் என்று கூறுகிறார் அய்யா நாராயணர்.

ஐந்து முகம் கொண்ட எம்பெருமான் ஈஸ்வரர், உன்னுடைய இந்த கலிப் பிறவியை சேர்த்து மொத்தம் ஏழு முன்பிறவி செய்தார். உலகம் தோன்றியபோது, நீதான் முதல் முதலில் சிவபெருமான் செய்த வேள்வியில் குறோணியாக தோன்றினாய். அப்போது உலகத்தையே விழுங்கும் அளவுக்கு உன்னுடைய உடலும் செயலும் மிகவும் அவலமாகவும், அருவருப்பாகவும் இருந்தது. பூலோகத்தைக் காக்க வந்த பூதகுரு முனிவர் மூலம் உனக்கு அறிவுரைகள் சொல்லியும் கேட்கவில்லை. நாட்டின் நன்மைக்காகவும், உனக்கு உபகாரமாகவும், நீதிக்காகவும் நல்லது செய்ய போராடிய அவரை அவமதித்த காரணத்தினால் குறோணி மாண்டு போகும் நிலை வந்தது. அதில் நீ மாண்டுபோனாய்.

அடுத்து வந்த இரண்டாவது யுகமான சதுர யுகத்திலே நீ குண்டோம சாலியாக தோன்றினாய். உனக்கு கோவிரிஷி புத்திச் சொன்னார். ஆனால் நீ கேட்கவில்லை. கோவிரிஷி சொன்ன அறிவுரைகள் நீ கேட்காமல் அவரையும் நீ அவமதித்ததாய். உன்னுடைய அசுரகுலம் அப்போது அழிக்கப்பட்டது . அப்போது நீயும் மாண்டுபோனாய்.

மூன்றாவது யுகமான நெடிய யுகத்திலே மீண்டும் தில்லை மல்லாலன் மல்லோசி வாகனன் என்ற இரண்டு பேர்களாய் தோன்றினாய். அப்போது நல்ல முறையில் திருந்தி கொள் என்று ரோமரிஷி பல அறிவுரைகள் சொல்லியும் கேட்கவில்லை. ரோமரிஷி பல கருத்துக்களை சொல்லியும் அதை நீ அவமதித்தாய். அதனால் மாண்டுப்போனாய்.

நான்காவது யுகமான கிரேதா யுகத்தில் சூரபத்மன், சிங்கமுகன் என்ற இரண்டு பேர்களாய் தோன்றினாய். அப்போது நீ திருந்த வேண்டும் என்பதற்காக வீரவாகு என்பவரை தூதராக அனுப்பி அறிவுரை கூற வைத்தேன். அதையும் நீ கேட்கவில்லை. வீரவாகு கூறிய அறிவுரைகளை கேட்காத காரணத்தினால் உன்னோடு சேர்ந்த அசுர குலத்தை அடியோடு அழித்து, மீண்டும் அதே யுகத்தில் வல்லமையோடு இரணியனாய் பிறந்தாய். அப்போது உன் ஆணவத்தைக் குறைக்க உன் மகன் பிரகலாதனின் அறிவுரையை கேட்பாய் என்று, உனக்கு மகனாகப் பிறக்க வைத்து உன்னை திருத்தி விட முயற்சி செய்தேன். அதையும் ஆணவத்தால் அவமதித்தாய். அதனால் சிவந்த கண்களை உடைய சிங்க முகம் கொண்ட நரசிம்மனால் அழிந்து போனாய்.

பிறகு ஐந்தாவது யுகமான திரேதா யுகத்தில், பத்து தலையுடன் யானைப் பலம் கொண்டு இலங்கையில் ராவணனாய் தோன்றினாய். அப்போது பேராசையும், பெண்களை அபகரிக்கும் குணம் கொண்ட இழிவான செயல்களை புரிந்தாய். உன்னோடு பிறந்த தம்பியாகிய விபீஷ்ணன் பலவிதமாக அறிவுரை கூறியும், அதை அலட்சியப்படுத்தி அவனை புறக்கணித்தாய். ஆகையால் நீ ஆட்சி செய்த அருமையான இலங்கை மாநகரம் அடியோடு அழிக்கப்பட்டு தீக்கிரையாகிப் போனது.

மேலும் ஆறாவது யுகமான துவாபரயுகத்தில் துரியோதனனாக நூறு சகோதரர்களோடு பிறந்து அதிலும் ஆணவத்தோடு செயல்பட்டாய். அப்போது பூலோகத்தாரால் பாராட்ட கூடிய விதத்தில் சிறப்பு பெற்ற, வில்வித்தையில் சிறந்த பீஷ்மர் உன்னைப் பெருமைப்படுத்திக் அறிவுரைகள் கூறினார். அந்த பெருமை வாய்ந்த பீஷ்மரையும் நீ அவமதித்த காரணத்தினால் மகாபாரதப் போரில் தாக்கு பிடிக்க முடியாமல் மாண்டு போக நீயே காரணமானாய். இப்படியே முன் யுகங்களாகிய ஆறு யுகங்களிலும் நீ சற்றும் அடிபணியாமல் தற்பெருமை கொண்டவராகவே இருந்தாய். அதனால் அழிந்தாய்.

மறுபடியும் ஏழாவது யுகமான கலியுகத்தில் பிறவி எடுத்துள்ளாய். இந்த யுகத்தில் நீ ஆணவத்தோடு சான்றோர் மக்களுக்குப் பல துன்பங்களைக் கொடுக்கிறாய். உனக்கு நல்ல புத்தி ஈந்து உன்னை நல் வழிப் படுத்துவதற்காக நாரயணமூர்த்தியாகிய நானே உனக்குப் புத்தியுரைக்கின்றேன். அதையாவது கேட்டு தெரிந்து கொள் உன்னுடைய இனத்தவரும், நீயும் உன் குல சொந்த பந்தங்களும், உன் தாய், தந்தை மற்றும் உள்ள சொந்தங்கள், சுற்றங்கள் நல்வாழ்வு வாழ நீ மன்னனாகிய நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்ய வேண்டுமென்றால், பதினெட்டுச் சாதிகளிலும் மிக உயர்ந்த நிலையில் நீதி, நேர்மை, தவறாது சான்றோர் மக்களுக்குக் கருணைக் காட்,டி ஒழுங்கு முறை தவறாமல் நேர்மையான நீதியான ஆட்சிச் செய்ய விதித்துள்ள, அநியாய வரிச் சுமைகளை இல்லாதபடிச் சட்டத்தை மாற்றி விடு.

சப்த கன்னிமார்கள் பெற்று காளிதேவி கண்காணிப்பில் அன்போடு வளர்க்கப்பட்ட என்னுடைய கண்மணிகளுக்கு கவலை இல்லாமல் வாழ வழி செய். நீ இந்த அடிமைத்தனமான வாழ்வையும் கீழ்த்தரமான வேலைச் செய்வதையும் தவிர்த்து விடு. அவர்கள் பசி, தாகம் தீர தண்ணீர் கொடு. என்னுடைய சான்றோர் மக்களை அநியாயமாக துன்ப படுத்தினால் உனக்கு நிச்சயமாக தண்டனை உண்டு. நீ இதிலும் திருந்தாமல், பிறவி குணம் மாறாமல், நீதி தவறி கொடுங்கோல் ஆட்சி புரிந்தால், உனக்கும் புழுக்குழியாகிய நரகம் கிடைப்பது உறுதி.

கற்புநெறி தவறாத சான்றோர் மக்கள் உன் கொடுமைகளை தாங்க முடியாமல் வேதனையில் அழுது சபித்து விட்டால் உன் நாடும், அரண்மனையும், கோட்டை கொத்தளங்கள், எல்லாம் எரிந்து சாம்பலாகி விடும். எச்சரிக்கை மறந்துவிடாதே! சான்றோர் குல பெண்கள் ஏக்கமானது அதிகரித்து, மனம் நொந்து உனக்கு சாபம் விட்டால் நீ எரிந்து சாம்பலாகி விடுவாய். அவர்களின் கற்பு நெறியானது தீக்கனலாக மாறி உனது ஆயுளை முடித்து விடும். தெய்வலோக சப்த கன்னியர்களுக்கு, நான் அக்கினியாக காட்சி கொடுத்து, என்னுடைய நாதவிந்திலிருந்து தோன்றியவர்கள் தான் இந்த சான்றோர்கள் ஆகும். என் சக்தியோடு தோன்றியதால் அவர்கள் சான்றோர்கள் ஆனார்கள்.

தீமையை அறியாமல் நல்லதே செய்து பணிந்து நடப்பவர்கள். ஆகையால் சான்றோர்கள் எனப்பெயர் பெற்றார்கள். ஆக்கப்பூர்வமான தந்தையாக இருக்கின்ற என்னுடைய வாரிசாகிய என் மக்கள் உன்னைப் பழித்து விட்டால் நிச்சயமாய் நீ அழிவாய். உன் மனக் கோட்டை எல்லாம் மண் கோட்டை ஆகிவிடும். எல்லாம் அழிந்து விழுந்து தவிடுபொடியாகி, உன் குலமும் கோத்திரமும் அழிந்துபோகும்.

“கற்புடைய சாணத்திக் கதறியழுதுச் சாபமிட்டால்
பொற்புடையக் கோட்டைப் பொடிந்துவிடும் தன்னாலே”

அவர்களது கற்புநெறி அத்தகைய தன்மை உடையது. பாதுகாப்பு களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் அத்தனையும், வானத்திலிருந்து அக்கினி தோன்றி ஒன்றும் இல்லாமல் அழித்து விடும் எச்சரிக்கை. உண்மைப் பேசுகின்ற சத்திய நெறி தவறாத சான்றோர் குலப் பெண்மணிகள், உன் கொடுமை தாங்காமல் கண்ணீர் விட்டு கதறினால், நான் பள்ளி கொண்டிருக்கின்ற பாற்கடலானது கொந்தளித்து வந்து அவர்கள் கண்ணீரை கழுவி உன் நாட்டை அழித்து விடும்.

பண்பாடு மாறாத சான்றோர்களை அடிமை வேலை செய்ய வைக்க மாட்டேன் என்று உறுதி செய். அப்படியே நல்ல முடிவோடு நாட்டு மக்கள் அறியும்படி முரசு அடித்து பறைசாற்றி விடு என்று கூறினார். அவ்வாறு செய்யாமல் இருந்தால் உன் அகந்தையின் காரணமாக இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

பொறுமை குணம் படைத்த சான்றோர் மக்களுக்கு இதுவரை நீ செய்த கொடிய செயல்களை மாற்றி விடு. நேர்மையோடு வரிப்பணம், பதநீர், கருப்பட்டி, கல்கண்டு, ஓலை ,நுங்கு இவை எல்லாம் தொடர்ந்து முதல் தரம் பார்த்து தவறாமல் தந்தவர்களை நிம்மதியாக வளமோடு வாழ வைக்கவில்லை

என்றால் கண்டிப்பாக நீ அழிவாய். ஒருவேளை நான் சொல்வதற்கு தலையாட்டிவிட்டு உன்னுடைய சூழ்ச்சியால் ஏமாற்றினால் கர்மவினை உன்னை சூழ்ந்து கொள்ளும். அந்த கர்ம வினையால் உனக்கு கழுத்தை சுற்றி புண் உண்டாகி வயிற்றுக்கு உணவு அருந்த முடியாமல் நோயில் அவதிப்பட்டு தவிப்பாய் கபடா!.

தெய்வத்தின் அம்சமாக விளங்குகிற அவர்கள் அனைவரும் தினமும் கூடி உன்னை வெறுப்போடு இகழ்வதால் கர்மவினையை சம்பாதித்து மீள முடியாமல் மாண்டுப் போவாய். இவ்வாறு எம்பெருமான் நாராயணர் கலியனுக்கு ஏற்றபடி விவரமாக அவன் திருந்தி வாழ புத்திமதிகளை எடுத்து கூறினார். கழுதை அறியுமா கற்பூர வாசனை என்பது போல எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு கோபத்தோடு திருமாலிடம் பதில் பேசுகிறான்.

மாயபெருமானே! நீ சொன்னதை நான் கேட்டேன். இனி நான் சொல்வதை நீர் கேளும். உனக்கு சிறப்பாக தோன்றுகின்ற சான்றோர்களை புகழ்ந்து அதிசய பிறவி என்று சொன்னீரே! பதினெட்டு சாதிகளிலும் கீழ்சாதியாக இருக்கின்ற இந்த இழிவு குலத்தோருக்கு மிகவும் பற்றுதலோடு பேசுகிறீர். மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் என்று எத்தனை விதமாக விளக்கம் கொடுக்கிறீர்.

ஆனால் எப்படி புகழ்ந்தாலும் அவர்கள் எனக்கு இழிகுலம் தான். இந்த இழிகுலத்தோருக்கு விதித்த வரியை என்னால் மாற்ற முடியாது. நான் உமது எண்ணப்படியே அழிந்தாலும் சரி, எனது உயிரே போனாலும் சரி, அவர்களுக்கு விதித்த வரி அவர்களின் விதி ஆகும்.

அந்த விதி பயனால் நான் விதித்த வரியை மாற்றவே மாட்டேன். இது சத்தியம் என்னுடைய உயிர், என் உடலில் இருக்கின்ற வரையில் கடினமான பனையேறும் தொழில் செய்கின்ற சாணார்களின், வேலையை மாற்றி உயர்வான வேலை கொடுத்து அவர்களை உயர்ந்த நிலையில் வைக்க போவது இல்லை. அது நடக்கவே நடக்காது, நடக்கவும் கூடாது. என்னை பயங்காட்டும் செயலை மாற்ற வேண்டும். இந்த பயங்காட்டும் செயலுக்கு நான் அஞ்ச மாட்டேன். என் மீது கோபம் கொண்டு, அவர்களுக்கு உதவி செய்து அருள் கொடுக்க விருப்பம் கொண்டால் சான்றோர் வாழும் இடத்திற்கு தாராளமாக செல்லலாம். தடை ஒன்றும் இல்லை ஆனால் நீர் செல்வதை நான் கேட்க மாட்டேன்.

நான் உனக்கு பதில் சொல்வதில்லை. இப்போது நடப்பதை விட இன்னும் மோசமான சூழ்நிலையை உருவாக்கி கொடுமைகள் தான் செய்வேன். அவர்களை பற்றி நான் கவலைப்பட மாட்டேன் என்று அரசன் தன்னுடைய பலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி தீர்க்கமுடன் துணிந்து திருமாலிடம் கூறிவிட்டான். இத்தனை காலமும் திருமாலவரின் தயவை எதிர்பார்த்து இருந்த கலியன் ஒரு எதிரியிடம் கூறுவது போல ஆவேசத்துடன் பேசினான்.

பொறுமை இழந்து கோபத்தோடு பேசியதை எதற்கும் அசையாத சர்வவல்லமையும் கொண்ட திருமால் கோபம் தணிந்து, நினைத்த காரியம் நிறைவேற வேண்டுமாயின், கடவுளாக இருந்தாலும் பரிந்து பேச வேண்டும் ,

என்பதற்கிணங்க, இகழ்ச்சியாகவும் புகழ்ச்சியாகவும் பேசி பார்ப்போம் என்று நினைத்து படு பாவி பயலே! உன்னுடைய பகட்டு வாழ்க்கைக்கு காரணமாக இருக்கும் அனைத்து செல்வங்களையும் உழைத்தவர்கள் சான்றோர்கள் அல்லவா? அவர்களுக்கு கேடு செய்து உன் உயிரை வீண் பழிப் பாவம் செய்பவர்கள் செல்லும் நரகத்திற்கு சேர்க்க வா! என்னோடு எதிர்த்து பேசுகிறாய்? நான் யார் என்ன என்று தெரிந்து, என்னை விரட்டும் நோக்கிலே வார்த்தையை கொட்டிவிட்டாயே! ஏனடா? உன் ஊரை விட்டு போனாலும் எனக்கு கவலை இல்லை. சான்றோர் வாழும் இந்த இடத்திற்கு செல்லலாம் என்று சொல்லி, என்னை புறப்பட்டு போ என்ற நிலையை உருவாக்கினாலும் நான் அதை தாங்கிக் கொள்வேன்.

ஆனால் என்னுடைய சான்றோர் மக்களின் அடிமைத்தனத்தையும் மாற்றி வை அது போதும் என்றார். தலை முறைகளாக கட்டி வரும் வரிகளை உடனே இல்லாமல் அகற்றும்படி ஆணையிட்டு நடத்தும்படி கூறினார். நாராயணப்பெருமாள் கூறியதை பொறுத்து கொள்ளாத கலி அரசன் வாழ்க்கையை தீர்மானிக்கின்ற அவரை பார்த்து அக்னியை போல் சூடாகி, கோபத்தின் உச்சத்தில் நின்று, வெறுப்போடு பேச தொடங்கினான்.

மாயபெருமானே! நான் உனக்கு தினந்தோறும் அதிகாலை நேரத்திலும், அந்தி மாலை வேளையில் தவறாது தினம் இரண்டு தடவை பூஜை செய்கிறேன். முறைப்படி அந்தணர்களை கொண்டு வேத மந்திரங்களை ஓதி குறை இல்லாமல் முழுமையான பூஜைகள் செய்கிறேன். அதற்கு ஒவ்வொரு நாளும் பூஜை செலவு 100 பொன் அளவு பணம் செலவழிக்கிறோம் அது மிகப்பெரிய செலவாகும்.

அந்த பூஜைக்கு தேவைப்படும் பணம் எங்கிருந்து வரும். அவர்களிடம் வாங்கும் வரியை நிறுத்திவிட்டால் வருமானமே கிடையாது. மேலும் உமது செலவு மட்டுமா? இன்னும் 1100 பொன் தினமும், தேவைப்படுகிறது. எங்கள் கண்காணிப்பில் இருக்கின்ற கோயில்களுக்கு வேண்டுமல்லவா? அதற்கு எங்கே போவது, மேலும் இந்த அரசாங்கத்தில் உள்ள பணியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், சம்பளம் கொடுக்க வேண்டும். எத்தனை பேர்கள் உள்ளார்கள். அத்தனை பேருக்கும் 10000 பொன் சம்பளம் கொடுக்க வேண்டும். யாரிடம் கேட்பது? இப்படி பலவிதமான செலவுக்கு தேவைப்படும் போதெல்லாம் அவர்களிடம் தான் கொள்ளையடித்து வாங்க வேண்டும்.

இந்த பெரிய அளவு செலவுக்கு தேவைப்படும் பொருளுக்கு வேறு யார் யாரை தேடி போவேன் என்று வாடா, போடா என்று அடாவடித்தனமாக பேசினான். பாமர மக்களிடமும், நீ சொல்லும் பண்புள்ள, உனது சான்றோர்களிடம் தான் வாங்கி எல்லா காரியங்களையும் சமாளித்து நடத்த வேண்டுமே தவிர வேறு வழியில்லை என்று மரியாதை இல்லாமல் பேசினான்.

மேலும் கோபத்தை குறைத்து கொள்ள முடியாமல், மாய பெருமாளிடம், ஆண்டிக்கோலம் கொண்ட பண்டாரமே! உன்னுடைய அறிவுரையை கேட்டு நடக்கவும் நியாயம் இல்லை. இருந்தாலும் என்னுடைய நாட்டில் என்னோடு இருந்து கொண்டு மற்றவர்களுக்கு சாதகமாக பேசியதால் இன்று முதல் உனக்கும், எனக்கும் எந்த உறவும் இனி வேண்டாம். இங்கிருந்து நீ வெளியே போடா! என்று தரக்குறைவாக பேசினான்.

அட மாயவனே! நீ கேரள நாட்டிற்கு வருவதற்கு முன்னால் நாங்கள் வாழவில்லையா? நீ வந்துதான் எங்களை வாழ வைத்தாயா? என்னுடைய நிலத்தில் நீ இனி இருக்கக்கூடாது. இங்கிருந்து தூரமாய் போய் விடு. உன் விருப்ப படி எங்கு வேண்டுமானாலும் போடா என்றான். இவ்வாறு கலியன் வெறுப்போடு பேசிய பிறகும் மாயபெருமாள், சாந்தமாக நான் என்ன வார்த்தையை தவறாக பேசிவிட்டேன். நீ கோபப்பட, சான்றோர்களை கொடுமை படுத்தாதே! என்று சொன்ன காரணத்தால் தானே! நீ தானே என்னை வாடா போடா என்று தரம், தாழ்த்தி பேசுகிறாய். என்னை பற்றி நீ என்ன நினைத்தாய்? என்று கோபமாக கண்டாலே எரித்து விடும் விடும் அளவுக்கு வந்த கோபத்தை தன்னுடைய பொறுமை என்கிற ஞான சக்தியால் அடக்கி கொண்டு அய்யா நாராயண மீண்டும் அவன் உய்வதற்கான புத்திமதிகளை கூறினார்.

படைக்கப்பட்ட உயிர்களை எல்லாம் பாதுகாக்கின்ற பச்சைமால், கலி நீசனை பார்த்து நான் உன்னிடம் என்ன கேட்டேன்? என்றால் என்னுடைய அன்பு மக்களுக்கு அவர்களின் அரும்பசிக்கு உணவு கொடு. கொடுமைகள் செய்யாதே! பொறுமையோடு அவர்களிடம் நடந்திடு என்றுதான் சொன்னேனே! தவிர, பாமர மக்களை வாட்டி வதைத்து அவர்களை கொடுமை படுத்தி வரி பணம் வாங்கி எனக்கு, காலை மாலை, பூஜை வழிபாடுகள் செய் என்று உன்னிடம் நான் கேட்டேனா? பூஜை தவறாமல் செய்துதான் ஆகவேண்டும் என்று நான் சொன்னேனா? நான் சொல்லமாட்டேன்.

ஏனென்றால் நீ செய்கின்ற பூஜை வழிபாடுகள் எனக்கல்ல. உனக்கும், பிராமணர்களுக்கும், நம்பூதிரிகளுக்கும் பணம் சம்பாதிப்பதற்காக நடத்திய செயல் அது. இது இந்த உலகத்திற்கே தெரிந்த உண்மை. ஆனால் என்ன செய்வது உலக மக்கள் அனைவரும் உன்பக்கம் இருப்பதால், சாட்சி உனக்குத்தான் சொல்வார்களே! தவிர நீ குறிப்பிட்ட இந்த பண்டாரதிற்கு உதவியாக நின்று யார் சாட்சி சொல்வார்கள்? சொல்.

ஆனால் நீ நடத்தும் பூஜை முறைகளை நான் ஒருபோதும் ஏற்று கொள்ளவில்லை. அதற்கு அடையாளமாக தான் நான் தெற்கே தலை வைத்து படுத்திருப்பது. அதை நீ புரிந்து கொள்ளவில்லையா? மூடனே! அல்லது நான் தெற்கே தலை வைத்து இருப்பதை நீ காணவில்லையா? தெற்கே தலைவைத்து ‘அனந்தபத்மநாபன்’ ஆக சயனித்து கொண்டிருந்து நீ செய்கின்றப் பணிவிடைகள் (பூஜைகள்) எதுவுமே ஏற்கவில்லை என்பதுதான்.

நான் இங்கு வந்த பிற்பாடு ஒரே ஒரு பூஜையை மட்டும் தான் ஏற்றேன். அந்த பூஜையில் என் மனம் விரும்பி குளிர்ந்து இருந்தேன் என்றால், எனக்கு ஏற்றும் தீப விளக்கு திரியை துணியை கொண்டு திரி போல் ஆக்கி பின்னி, உண்மையான அன்போடு கீழ் ஜாதியாகிய புலச்சியின் தூய்மை தீபம்தான். நீ கீழ் குலம் என்று இழிவாகப் பேசி ஒதுக்குகின்றாயே! அவர்களது மெய்யான பக்தியுணர்வு தான் நான் ஏற்று கொண்டது.

நான் அந்த அன்பான பக்தியை அமுதமாக நினைத்து ஏற்றுக்கொண்டேனே! தவிர வேறு எந்தவிதமான போலி ஆடம்பர பூஜைக்கும் நான் மயங்கி போவது இல்லை என்பதை நீ உணர்ந்து கொள். ஜாதி வெறி பிடித்த அறிவுகெட்ட நீசனே! நீ எனக்கு எதுவும் செய்யவில்லையடா?. ஆனால் அதை

தெரிந்து இந்த உலகமே சொல்லுமே! இப்படி தெளிவாக புரிந்துகொள்ளும்படி எல்லாவற்றையும் உபதேசமாக கலி நீசனுக்கு சொல்லி முடித்தார். கோபத்தோடு கேட்டு கொண்டிருந்த நீசப்பாவி அதற்கு பதில் கூறினான்.
அப்படி என்றால் நான் பூஜையில் படைத்த எதையும் உம்முடைய நாவால் சுவைக்கவில்லை, மூக்கால் நுகரவில்லை என்றால், நீ எதற்காக என் நாட்டில் வந்து எனக்கு துணையாக தேவையில்லாமல் என்னோடு எதற்காக இருக்க வேண்டும். காலத்தையும், நேரத்தையும் வீணாக ஏன் செலவழிக்க வேண்டும். இனிமேல் நீ இங்க இருக்க வேண்டாம். போய் விடு. நீ விரும்பும் இடத்திற்கு தடங்கல் ஏதும் இல்லாமல் செல்ல வேண்டியதுதான். உடனே புறப்படு என்று இடி ஓசைபோல் மாயப் பெருமாளை நிந்தித்தான். அதை பொறுத்து கொள்ள முடியாமல் அவன் மீது மிகவும் கோபம் கொண்டு புறப்பட தயாரானார்.

“போறேன் நான் உன்னுடையப் புரத்தை விட்டுச் செந்தூரு
வாறேன் நான் உன்னை வதைக்க ஒரு கோலமிட்டு”

தம்மை மதிக்காத கலிநீசன் பேசியதை கேட்டு வெறுப்படைந்தார். போகிறேன் நீ அமைதியாக இரு. உன்னுடைய நாடாகிய திருவனந்தபுரத்தை விட்டு திருச்செந்தூர் போகிறேன். ஆனால் நான் மீண்டும் வருவேன் வந்து உன் ஆணவத்தையும், அதிகாரத்தையும் உன்னையும் அழிப்பேன் பார் என்றார்.

***********

# DAY 28

அனந்தபுரம் விட்டுச் சுவாமி திருச்செந்தூர் ஏகல்

போறேன் நானுன்னுடைய புரத்தைவிட்டுச் செந்தூரில்
வாறேன் நானுன்னை வதைக்கவொரு கோலமிட்டு
எளியசா ணானெனவே எண்ணம்வைத் தென்றனையும்
நளியாகப் பேசி நகைத்தாயே மாநீசா
எளியோர் வலியோர் எவெர்க்கும்வெகு நன்மைசெய்து
வெளியாக உன்றனக்கு விபரம்போ தித்தருளி
நீயறியத் தர்மம் நீணிலத்தி லேநடத்திப்
பேய்வெறியைக் கொன்று பேருலக மத்தனையும்
நாடாள் வார்தமக்கு நான்பட்டமுஞ் சூட்டித்
தாடாண்மை யான சத்தியமா யென்றனையும்
ஒருபுத்தி யாகி உள்ளென்னைக் கொண்டோர்க்குப்
புதுப்புத்தி யீந்து பூலோகம் ஆளவைப்பேன்
வருவேன் நானென்று வருமுன் னறிவதற்கு
நிருப மதுவெழுதி நீணிலத்தி லேயனுப்பி
மரமறிய சீவசெந்து மலையு மிகவறிய
திரமான வாயு சேடன் முதலறிய
வருண னறிய மதியு மிகவறிய

தருணம் வரும்போது சாணா ரிடம்வருவேன்
அறிந்துபல சாதிமுதல் அன்பொன்றுக் குள்ளானால்
பிரிந்துமிக வாழாமல் பெரியோராய் வாழ்ந்திருப்பார்
என்று அந்தநீசனுக்கு எடுத்துரைத்து எம்பெருமான்
அன்று திருவனந்தம் அவனிவிட் டெழுந்தருளி
முந்து மநீசனுட கோட்டை நெடுநெரெனத் தானிடிய
தேசமெல்லாம் நித்திரா தேவி யிருள்மூட
ஏழுமேக முங்கூடி இராச்சியத்தைத் தான்மூடி
வெளுவே ளௌமாரி வெண்டுளி போல்தொளிய
வாயு வதுதிரண்டு வையகத்தைத் தானரிக்க
வீசுவீ சென்று உலாவி யதுவீச
வாரியது கோபமுற்று வையகத்தை தான்முழுங்க
மூரிபோல் மூச்செறிந்து மொகுமொகென கோபமுற்று
மாநீச னிட்டிருந்த வாய்த்தகற் கோட்டையெல்லாம்
தேனியீன் கூடதுபோல் செகலிடிந்த தம்மானை
கோட்டைத் தளமிடிந்து குஞ்சரங்கள் தானிழந்து
பூட்டை மிகப்பூட்டிப் போட்டிருந்த காவலெல்லாம்
உழைந்து மிகவெருவி ஓகோவென வுளறி
கழைந்து அவரோடக் கைமறந்து நின்றனனே
சிப்பாயி யோட சுபேதாருந் தானோட
அப்பப்பா வென்று அந்நீசன் தானோட
பிராமண நம்பூரி புலம்பிமிகத் தானழுது
ஸ்ரீராமனையுங் காணலையே தேசமிரு ளாகுதல்லோ
அய்யோ கெடுத்தானே அரசன்நம்மை யென்றுசொல்லி
மெய்யோடே குத்தி விழுந்தழுவார் வேதியர்கள்
மாய னனந்த புரத்திலே வாழுமட்டும்
நீசனுட சட்டம் நின்றுதல்லோ ராச்சியத்தில்
ஸ்ரீபத்ம நாபரிந்தச் சீமைவிட்டுப் போனவுடன்
பிரிவாக நவ்வா பிடித்தானே சீமையெல்லாம்
என்று பலபேர்கள் இப்படியே சொல்லிமிக
அன்று புலம்பி அழுவார் சிலபேர்கள்
நம்பூரி வேதியர்கள் நாம்கெட்டோ மென்றுசொல்லி
வெம்பிடா வண்ணம் வெளியிலுரை யாதிருந்தார்
இப்படியே பூலோகம் எல்லாந் திணுக்கிடவே
அப்படியே மாயவரும் ஆன தேவருடனே
அப்படியே சிலைக்கு ஆனகுரு நாராயணரும்
இன்று போலெந்நாளும் மண்ணுக்குள்ளிருமென்று
அன்று சிலைக்கு ஆன நாராயணரும்
மும்மூர்த்தி எல்லாம் ஒருமூர்த்தி தானாகி
அம்மூர்த்தியாகி ஆதிவைகுண்டமென்று
வருவேன் கயிலை மாதரையும் மணமுகித்து
தருணம் வரும்போது தான்வருவேன் இவ்விடத்தில்
என்று உரைத்தார் எம்பெருமான் பொற்சிலைக்கு
அன்று பொற்சிலையும் ஆதியைப் பார்த்தேதுசொல்லும்
அதுவரையும் நான்தான் அவனிதனிலிருந்தால்
ஏதுநீசன் வந்து எந்தனையும் பார்ப்பானே

காளியும் என்னோடு கலந்து இருப்பாளே
ஆழியடைத்த அச்சுதரே சொல்லுமென்று
என்று சிலையும் எம்பெருமாளோ டுரைக்க
அன்று சிலைக்கு அருளுவார் அச்சுதரும்
கலிநீசன் வந்தால் கண்காணாதே போவான்
மலையாதே என்றுவாக்கு மிகக்கொடுத்து
இன்றுமுதல் யானிருக்கும் இடங்களிலே சாதியெல்லாம்
ஒன்றுபோ லென்னிடத்தில் ஒத்துமிக வாருமென்று
சொல்லித் திருச்சம்பதி சென்றிடவே தானடக்கப்
பல்லுயிரும் வந்து படிந்ததுகே ளன்போரே
திருச்சம் பதியதிலே சென்றவர் தானிருக்கப்
புரச்சமது பார்த்தான் புகழுமொரு நம்பூரி
அப்போது சாஸ்திரத்தில் அவனிபல சாதியெல்லாம்
இப்போது சும்மா இங்குவர லாமெனவே
அன்றந்த சாஸ்திரத்தில் அதுகண்டு மல்லாமல்
நன்றந்தச் சாணார்கள் நல்லதே ருண்டுபண்ணித்
தொட்டுக் கொடுத்துத் தேர்நடத்த வேணுமென்றும்
மட்டும் வெகுதானம் வலங்கையுயர் கொண்டோர்க்குக்
கொடுக்கவே ணுமென்று கூறினார் சாஸ்திரத்தை
வெடுக்காக அந்த விபரிப்பெல் லாம்நடத்தி
வாரிக்கரை யாண்டியென வாய்த்தநா மம்விளங்க
நேரியர்கள் சூழ நெடியோ னங்கேயிருந்தார்.

விளக்கம்:

அனந்தபுரம் வீட்டு சுவாமி திருச்செந்தூர் எழுந்தருளல்

கலிநீசன் கொடூரமாக பேசியதை கேட்ட ஆதிநாராயணர் கோபம் கொண்டு கலியனை அழிக்க பண்டாரக்கோலம் கொண்டு மீண்டும் வருவேன் என்று, கலியனின் நாடான கேரள நாட்டை விட்டு வெளியே சென்றார். எளிமையான சான்றோர்களை பேசியது போல் என்னையும் நினைத்து மிகவும் கேவலமாக அவமதித்து விட்டாய். பாவி நான் யார் என்று தெரிந்தும், என் மகத்துவம் என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் ஏளனமாக பேசி வம்பு செய்யதாயே பாவி பொறுத்திருந்து பார் என்று உள்ளுக்குள் எண்ணினார்.

மாயபெருமாளாகிய நான் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடில்லாமல், எல்லோருக்கும் பொதுவாக இருப்பவன். ஆனால் கலிநீசனாகிய உன்னுடைய தீய செயல்களை எல்லோரும் அறியும்படி செய்து எல்லோருக்கும் நல் புத்தியை கொடுத்து உனக்கு எதிராக செயல்களை செய்ய வைத்து, உன் செயலாலே உனக்கு அழிவு வரும்படி செய்வேன் என்று ஆணையிட்டார். மக்களை ஆட்டி படைக்கும் கலி பேயின் மூர்க்கத்தனத்தை அழித்து உலகமெல்லாம் புனிதமாக்கி விடுகிறேன் பார் என்றார்.

இந்த உலகை தர்மயுகமாக மாற்றி, நீ தாழ்ந்த இனம் என்று ஒதுக்கிய குலத்திலே தோன்றி, வைகுண்ட நாராயணனான நான் சான்றோருக்கு

முடிச்சூட்டி வைப்பேன் என்றும், தன்னை தாழ்த்தி, உயர்பண்பு நடப்பவர்களுக்கும், நேர்மையான பக்தியுடன் என்னை நினைப்பவர்களுக்கும், என்னை நம்பி நீயே ஆத்மா! நீயே என் உயிர் உள்ளம் என்கிற ஒரே எண்ணத்தோடும், உள்ளன்போடும், மனதில் உண்மையாய் என்னை ஏற்று கொண்டவர்களுக்கு தர்மயுகம் ஆளும் படி ஆன்ம சக்தியை கொடுப்பேன்.

“ஒருபுத்தி யாகி உள்ளென்னைக் கொண்டோர்க்குப்
புதுப்புத்தி யீந்து பூலோகம் ஆளவைப்பேன்”

மரணம் இல்லாமல் நித்திய வாழ்க்கை வாழ வைப்பேன் என்றார். நான் எப்படி வருவேன் என்றும், வந்து இருப்பது நான்தானா என்கிற செய்தியை நான் வருவதற்கு முன்பே தெரிந்து கொள்வதற்கும், எல்லாத் தீர்மானங்களையும் கொண்டு தர்மயுகம் எப்படி தோன்றும் என்கிற செய்தியையும், பூமியில் என்ன நடக்கும் என்பதையும் ஒரு புதிய ஆகமத்தின் மூலம் எலோரும் அறியும்படி செய்வேன்.

தாவரங்கள் மற்றும் எல்லா உயிரினங்களும், மலைகள் போன்ற உயிர் இல்லாத அனைத்தும் அறியும் படியாக செயல்படுத்துவேன். மூச்சுக்காற்றாய் எங்கும் நிறைந்து இருக்கின்ற வாயு பகவான் முதல், பாற்கடலில் இருக்கின்ற ஆதிசேடன் வரை தெரியும் படியும் மற்றும் சந்திர, சூரியர்கள் நன்றாக புரிந்து கொள்ளுமாறும், தக்க சமயம் பார்த்து சான்றோர் குலமக்களுக்கு புத்தியுரைக்க வருவேன் . இது பொய்யல்ல மெய்யே! நான் பூமியில் அவதரித்து விட்டதை அறிந்து எல்லா சாதியினரும் ஒற்றுமையாக, அன்புக்கொடி மக்கள் என்று எல்லோரும் ஒன்றாய் கூடி வாழ்வார்கள்.

அப்படி வேற்றுமை மாறி எல்லோரும் ஒரு குடைக்குள் வந்தால், சாதி என்கிற அந்த பாகுபாடு மாறி, கடவுள் ஒருவரே! மனிதன் என்றும் ஒரு இனமே! என்ற பாகுபாடு இல்லாமல் வாழ்வார்கள்.

இப்படியாக தன்னுடைய மறு அவதாரம் பற்றி கலிநீசனுக்கு சொல்லிவிட்டு எம்பெருமான் நாராயணர், திருவனந்தபுரம் விட்டு திருச்செந்தூர் சென்றார். உலகில் பல ஆறுகள் தோன்றி ஒரே கடலில் தான் சங்கமம் ஆகிறது. அது போல பல வகையான ஆபரணங்கள் செய்து ,விதவிதமாக அலங்காரம் செய்தாலும், அவையெல்லாம் தரம் வாய்ந்த தங்கம் என்று தான் பெயர் பெறுகிறது. மேலும் மண்ணால் செய்த மட்பாண்டங்களும் பல விதங்களில், உற்பத்தி ஆனாலும் அந்த மட்பாண்டங்களும் வித்தியாசம் இல்லாதது தான். இயற்கையாய் அமைந்துள்ள வானம், வையகம், நீர், நெருப்பு, காற்று என பஞ்சபூதங்களும் உயிரினங்கள் உயிர்வாழ உதவி புரிவதற்கே. ஆனால் எல்லாம் ஒன்றுதான் என்றத் தன்மையை நிலை நிறுத்துகிறது.

அது போலவே கடவுள் ஒருவரே! இது உறுதியான இயற்கையின் உண்மை. எந்த மதத்தவராக இருந்தாலும், அவர்களின் வேண்டுதல் எல்லாம் ஒரே வழியாக தான் நிற்கும். இறைவன் தான் மூல கருப்பொருள். நம்மை ஆள்பவன் . அது போல எல்லோருக்கும் ஆதாரமானவனும் அவனே! அந்த இறைவனை நீசனோ கோபத்தால் தூற்றுவான். நல்லவன் குணத்தால் கும்பிட்டு வணங்குவான். சாதுவானவன் தவத்தால் சரணாகதி அடைவான். அனைவருக்கும் அருள் பாலிப்பவர் ஒரே இறைவன் தான்.

“அவரவர் நினைக்கின்ற நினைப்புக்குத் தக்கதாக
இருந்து விளையாடினேன் சிவனே அய்யா”

என்னை எப்படி உன் மனதில் உருவேற்றி எண்ணுகிறாயோ அதற்கு ஏற்றவாறு அருள் பாலிப்பேன் என்கிறார்.

ஒரே கடவுள் காலத்தை கடந்தவர். கடவுள் எல்லா சக்திகளுக்கும் அப்பாற்பட்ட இறைவன். பாகுபாடு பார்க்காமல் பாதுகாப்பவரும் பகவானே!.

“அஞ்சி பூ கொண்டு ஆசாரம் செய்தவர்க்கு
வஞ்சகம் இல்லாத வாழ்வுக் கொடு என் மகனே!”

மெய்,வாய்,கண்,மூக்கு,செவி ஆகிய ஐம்புலங்களுடன் மனித இனத்தைப் படைத்து உள்ளார். மனிதன் தன் மெய் அறிவோடு, சிவன்,பிரம்மா, விஷ்ணுவைப் போல் சக்தி உடையவர்களை, முப்பொருளும், ஒரு பொருளாய் விளங்கும், உயர் திரு உருவை ஆறறிவு கொண்ட மனிதனும், மற்றுமுள்ள எல்லா உயிர்களும் வணங்குவதால், எல்லோருக்கும் மேலே இறைவன் என்றும், யார் கண்ணுக்கும் தெரியாமல் கடவுள் இருக்கிறார் என்றும், அன்றாடம் பகவான் படியளப்பது என்றும், எல்லா இனத்தவர்களும், மதத்தினரும் சொல்வது முறையானது தான். இந்துக்கள் இறைவன் என்றும், கிறிஸ்தவர்கள் ஆண்டவர் என்றும், இஸ்லாமியர் அல்லா என்றும், அழைத்தாலும் அந்த அலை சேரும் இடம் ஒரே இடம்தான். ஆகவே கடவுள் ஒருவரே! என்பது உறுதியாகிறது.

மூர்க்க குணம் கொண்ட கலி நீசன், முப்பொருளும் ஒரே பொருளான பகவானாகிய மாயப் பெருமானே! மரியாதை இல்லாமல் பேசியதால் கடுமையான கோபம் கொண்டு, திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டு திருச்செந்தூர் சென்றார். பொன்னம்பலத்தில் பத்மநாபனாக பள்ளிகொண்ட பெருமாள் சென்றவுடன் அரசனுடைய கோட்டை கொத்தளங்கள் எல்லாம் ஆட்டம் கண்டது. நீதங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நிலை தடுமாறியது.

கலையரசனுக்கு இயற்கையின் சீற்றத்தால் ஒரு புறம் மழை பேரிரைச்சலுடன் பயங்கராமாக பொழிந்து பயங்கரமாக வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியது. வாயு பகவான் கோபம் கொண்டு சூறாவளி காற்றை உருவாக்கியதால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. ஊழி காற்றானது கட்டுக்கடங்காமல் நாட்டையே புரட்டிப்போட்டது. இதனால் பேரழிவு உண்டானது.

கேரள நாட்டுக்கு காலத்தோஷம் ஏற்பட்டு கடல் கோபம் கொண்டு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு மிகப்பெரிய சேதத்தை உண்டு பண்ணியது. கடல் கொந்தளிப்பினால் பேரலைகள் கோபம் அடங்காமல் சீற்றத்துடன் காணப்பட்டது. தேனீக்கள் சேர்ந்து கட்டிய தேன்கூட்டை போல் கலிநீசன் கட்டிய கோட்டைகள், கொத்தளங்கள், எல்லாம் தண்ணீரில் அடியோடு அழிந்தது. யானைப்படைகள் அத்தனையும் அழிந்தது. பாதுகாப்பாக போட்டு வைத்திருந்த பொருட்களஞ்சியங்களும், கருவூல பொருட்களும் அழிந்தது கண்டு எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் எல்லோரும் ஐயோ, முறையோ என்று அலறி

செய்வதறியாமல் தடுமாறினர்.உயிருக்கு பயந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள படைவீரர்கள் பயந்து ஓட, அரசாங்க வேலை பார்த்தவர்கள் அலறிக்கொண்டு ஓட , கலி மன்னனும் சேர்ந்து ஓடினான்.

வேத மந்திரம், ஓதும் பிராமணர்கள் பகவானே காப்பாற்றும் என்று ஓலமிட்டு ஓடினார்கள். ஸ்ரீ ராமரையும் காணோமே, எங்குச் சென்றாரோ யாமறியோமே! நாட்டை இருளும், தண்ணீரும் சூழ்ந்து கொண்டதே! எங்கு சென்றாலும் திக்கும் திசையும் தெரியவில்லையே என்று கதறினார்கள். ஐயோ! கடவுளே ,கடவுளே யார் உதவுவார்கள் என்று அலறினார்கள். வேதியர்கள் மற்றவர்களும் மார்பிலும், தலையிலும் அடித்து தொலைத்தார்கள். என்ன செய்வது என்று தெரியவில்லையே! மாயப் பெருமான் திருவனந்தபுரத்தில் இருக்கும் போது நல்ல படியாக இருந்தது மன்னனுடைய சட்டதிட்டங்கள் சரிவர இல்லையே!

ஆகையால் இப்போது பள்ளி கொண்டிருந்த ஸ்ரீ அனந்த பத்மநாபசுவாமி திருவனந்தபுரம் விட்டு கோபத்தோடு புறப்பட்டு சென்றதும் கேடுகள் நடந்து விட்டதே! முஸ்லிம் நாட்டு மன்னனாகிய நவாப் நாட்டை கைப்பற்றி அவன் கட்டுப்பாட்டிற்குள் மக்களை வசப்படுத்தி விட்டானே! திருமாலை விரட்டியக் காரணத்தினால் அசம்பாவிதங்கள் நடந்து விட்டது என்று நினைத்தார்கள்.

இப்படி நடக்க காரணம் யாது என்று புலம்பி சிலர் அழுதார்கள். நம்பூதிரிகளும், வேதியர்களும் நமக்கு பூஜை செய்து பிழைக்க இனி வழி இல்லையே என்று வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் அடக்கி விம்மி விம்மி அழுதார்கள். மானங்கெட்ட மாவீரர்கள், திமிர் பிடித்த ஊழியர்கள் எல்லோரும் திணறினார்கள். இங்கு இவர்கள் இப்படி அல்லல் பட அங்கே மாயபெருமான் திருச்செந்தூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, அவரோடு சென்று கொண்டிருந்த தேவர்களைப் பார்த்து தேவர்களே! இது நாள் முதல்கொண்டு நான் இருக்கும் இடங்களிலெல்லாம் எல்லா இனத்தவர்களும் ஒற்றுமையாய் வந்து சேரவேண்டும்.

வேற்றுமை பாராமல் எல்லோரும் ஒற்றுமையாய் எந்த பாகுபாடும் இல்லாமல் ஒன்றுச் சேர்ந்து வரவேண்டும் என்று புது சட்டம் கொண்டு வர செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, திருமால் திருச்செந்தூர் பதிக்குள் சென்று கலியை அழிப்பதற்கு ஆயத்தமானார்.

அப்போது திருமால் திருச்செந்தூர் சென்றுக் கொண்டிருந்த போது, அய்யாவை பார்க்க பக்தர்கள் வந்தார்கள். அவர்கள் எல்லோரும் அருகில் இருக்கும் பொழுது மிகவும் புகழ்பெற்ற வேத சாஸ்திரம் தெரிந்த நம்பூதிரி ஆகிய அந்தணர் ஒருவர் திரு ஏட்டில் நூல் வைத்து [பொருட்சம்] போட்டு பார்த்தார். அப்பொழுது அந்த தெய்வ சாஸ்திரத்தில் உலகத்தில் உள்ள பல வித ஜாதி மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற என்ற பிரிவினை பார்க்காமல் அனைவரும் கோயில் பிரகாரத்தில் வரலாம் என்று பதில் வந்தது. நம்பூதிரி கயிறு போட்டு பார்த்த சாஸ்திர ஏட்டை எல்லாம் மக்களும் கண்ணால் பார்த்தார்கள்.

அது மட்டுமல்ல அந்த ஏட்டில் இன்னும் ஒரு செய்தியும் இருந்தது. கலியனால் துன்புறுத்தப்பட்ட நேர்மையான சான்றோர் குலமக்கள் அதற்கு நல்லதொரு திருத்தேர் உருவாக்க வேண்டும் என்றும், அந்தத் தேர் திருவிழாக்கள் வருடம்தோறும் தெய்வ சான்றோர் இன மக்களால் தொட்டு கொடுத்து திருவிழாவை தொடங்கி நடத்த வேண்டும் என்றும் இருந்தது.

மேலும் சான்றோர்களுக்கு மட்டும் வெகுமதி பொருளாக உயர்ந்த குணம் படைத்தவர்கள் அன்பின் அடையாள பொருளாக பொருட்கள் கொடுக்க வேண்டும் என்றும் சாஸ்திரத்தில் இருந்ததை பார்த்து கூறினார். அங்கு சேர்ந்து இருந்து எல்லோரும் அந்தச் சாஸ்திரம் சொன்னபடி செய்ய வேண்டும் என்று விருப்பத்தை கூறி முடித்தார். செந்தூரில் அய்யா நாராயணர் திருப்பார் கடற்கரையில் ஒய்யாரமாய் அமர்ந்திருந்ததால் "வாரிக்கரை ஆண்டி" என்று அவர் புகழ் உலகம் எங்கும் சிறந்து விளங்கியது. பிராமணர்கள் புடை சூழ நின்று வேத மந்திரங்கள் ஓத, வைகுண்டர் அங்கு அமர்ந்திருந்த திருச்செந்தூர் கடற்கரை வனமாகிய சந்தண மரக்காட்டிற்குள் பச்சைமால் நாராயணராக பள்ளி கொண்டார்.

********அய்யா உண்டு*******